www.padippakam.com

மார்க்சிய – லெனினிய அரசியல் ஏடு

# போராளி

இதழ் - 7 ஜனவரி - ஏப்ரல் 2000 நன்கொடை ரூ. 15/-

# பாட்டாளி வர்க்கத் தலைவர் தோழர் ரவீந்தருக்கு சிவப்பஞ்சலி செலுத்துவோம்!

நக்சல்பாரி புரட்சியாளர்களின் இரத்தத்தால் சிவந்திருக்கும் தருமபுரி மண்ணில், சனவரி 10 ந் தேதி தியாகி தோழர் ரவீந்தரின் இரத்தமும் இரண்டறக் கலந்தது. உழைக்கும் மக்களின் விடு தலைக்காக மக்கள் படை அமைக்க, தருமபுரியில் வர்க்கப் போராட்டத்தை வளர்த்தெடுக்க சென்ற தோழர், அம்மாபெரும் கடமைக்காக தன்னுயிரை தந்துள்ளார். தருமபுரியில் புரட்சிகர இயக்கத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமென்ற வெறியோடு, கோழை தேவாரத்தின் வாரிசுகள் இன்னுமொரு கொடூர தாக்குதலில் இறங்கி, அதன் பகுதியாக இந்த போலி மோதல் படுகொலையை நடத்தியுள்ளனர்.



தியாகி தோழர் ரவீந்தர்

1980 களின் தொடக்கத்தில் மக்கள் யுத்தக்கட்சியின் தலைமையில், தியாகி தோழர் பாலன் போன்றோரின் தலைமையில் உழவர் புரட்சிக்கான வெளிப்படையான மக்கள் திரள் இயக்கம், ஆயிரக்கணக்கான மக்களை போர்க்குணமிக்க போராட்டங்களில் அணிதிரட்டியது. இவ்வியக்கத்தை ஒழித்துக்கட்ட ஆளும் வர்க்கங்கள் வெறிநாய் தேவாரம் தலைமையில் நர வேட்டையை நடத்தினர். 20க்கும் மேற்பட்ட தோழர்கள் போலி மோதல்களில் படுகொலை செய்யப்பட்டனர். அடக்கு முறையை மீறி, மேலும் அதிக பலத்துடன் வளர்ந்த இயக்கம் தலைமையின் துரோகத்தால் பின்னடைவுக் குள்ளானது.

1987 க்குப் பிறகு அடக்கு முறைகளையும் மீறி தருமபுரியில் புரட்சிகர மக்கள் திரள் இயக்கம் வளர்ந்து வருகிறது. இக்கட்டத்தில் 1996க்கு பிறகு எதிரியின் அடக்குமுறைக்கெதிராக, புதிய செயலுத்தியாக இரகசிய மக்கள் திரள் அமைப்புகள், இரகசிய செயல்பாடுகள் மற்றும் சுய பாதுகாப்புக்காக ஆயுதமேந்திய குழுக்களுடன் இயக்கம் வளர்ச்சியடைந்து வந்தது. மக்களின் ஆதரவுடன் வளர்ந்து வரும் இவ்வியக்கத்தை ஒடுக்க ஆளும் வர்க்கங்கள் தொடர்ச்சியாக பல்வேறு வடிவங்களில் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டன. பஸ் எரிப்பை காரணம் காட்டி பெரும் எண்ணிக்கை யிலான (3000 பேர் + அதிரடிப்படை) படைகளுடன், ஓர் கொடூர தாக்குதலை கட்டவிழ்த்து விட்டனர். அதன் பகுதியாக பென்னாகரம் பகுதியில் தோழர். ரவீந்தரை படுகொலை செய்தனர்.

## தியாகி தோழர் ரவீந்தர் – தமிழகத்தில் மக்கள் யுத்தத்தின் அடிக்கல்லான மாவீரன்!

மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையால் ஈர்க்கப்பட்டு, தமது நடுத்தர வர்க்க வாழ்க்கையை உதறி விட்டு புரட்சியில் இணைந்த போராளி தோழர். ரவீந்தர். தொலை தொடர்பு துறையில் இளநிலைப் பொறியாளராக பணியாற்றிய போதே, இலஞ்சம், ஊழலை எதிர்த்தும், தொழிலாளர் உரிமைக்காகவும் போராடிய போர்க் குணமிக்க தொழிற்சங்க

படிப்பகம்

www.padippakam.com

தலைவராவார். தோழர் ரவிந்தர் 1986 லிருந்தே புரட்சிகர இயக்கத்தில் பணியாற்றத் தொடங்கினார். 1986-ல், ஏற்கனவே நின்று போயிருந்த 'முன்னோடி' பத்திரிக்கையை கொண்டு வர, தோழர் தனது ஊதியத்தை அளித்ததை, இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். புரட்சிகர அமைப்புக் காக தனது ஊதியத்தில் பெரும்பகுதியை தந்து, முழு நேர ஊழியர்களைப் பராமரிக்க கட்சிக்கு உதவினார்.

1989-ல் முழு நேர ஊழியரானார். 1990-லிருந்து

## உள்ளே...


| | |
|---|---|
| தமிழீழத்தை நோக்கி அணிவகுப்பு | 5 |
| 2000 - 2001 ஆண்டின் பட்ஜெட் | 9 |
| போர்களச் செய்திகள் | 17 |
| புதிய ஜனநாயகத்தின் புரட்டல்வாதம் | 19 |
| போராட்டச் செய்திகள் | 24 |
| பிகார் படுகொலை | 25 |
| நக்சல்பாரி - வரலாற்று நிகழ்வுகள் | 27 |
| கொய்யூர் படுகொலை எதிர்ப்பு பேரணி | 40 |
| கொடுங்கோலன் தண்டிக்கப்பட்டான் | 41 |
| இரத்தக் கடன் தீர்ப்போம் (பேட்டி) | 44 |
| கொய்யூர் படுகொலை கண்டனக் கடிதங்கள் | 46 |
| மையகுழு தோழர்களுக்கு சிவப்பஞ்சலி | 48 |


தொழிலாளர் அமைப்பாளராக பணியாற்றினார். 1993 ல் கட்சியின் வழிகாட்டலை ஏற்று கிராமப்புற இயக்கத்தை கட்டி அமைக்க தருமபுரிக்கு சென்றார். முதலில் தேன்கனி கோட்டையிலும், பிறகு பென்னாகரத்திலும் விவசாயிகளை அமைப்பாக்கினார். நிலப்பிரபுக்களை எதிர்த்தும், கந்து வட்டிக்காரர்களை எதிர்த்தும், காட்டிலாக்கா அராஜகங்களை எதிர்த்தும் உழைக்கும் மக்களை அணி திரட்டிப் போராடினார். பல முறை எதிரிகள் கொலை செய்ய முயன்ற போதும் அஞ்சாது மக்கள் கடலில் மீனாக, மக்களுடன் இணைந்து நின்றார். சிறைப்பட்ட போதும், சிறைப் போராட்டங்களின் மூலம் எதிரியை கலங்க வைத்தார். 1995 - ல் அமைக்கப்பட்ட தருமபுரி வட்டாரக் கட்சி குழுவின் உறுப்பினராக கடைசி வரை பணியாற்றினார்.

தமிழகத்தில் உழவர்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் பணியில் தனது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள தோழர் ரவீந்தர் உழைக்கும் மக்களின் மனதில் என்றென்றும் நிலைத்திருப்பார். ஆம்! குட்டி முதலாளிய நடுத்தர வர்க்கப் பின்னணியில் வந்த பலர், தமது ஊசலாட்டங்களால் வெளியேறிக் கொண்டிருந்த பொழுது, எவ்வித சலனமுமின்றி கொள்கைப் பிடிப்பிலும், புரட்சிகர வாழ்க்கையிலும் ஓர் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அமைப்பு ஒழுக்கம், கட்டுப்பாடு, பொறுப்பேற்றுக் கொள்வதில் தயக்கமின்மை, முன்முயற்சி போன்ற பாட்டாளி வர்க்கப் பண்புகளை சிறப்பாக வெளிப்படுத்தினார். மக்களிடம் ஐக்கியமாவதிலும் எவ்வித தயக்கமுமின்றி செயல்பட்டார். தோழர் ரவீந்தர் எளிமையான வாழ்க்கை, கடின உழைப்பு போன்றவற்றிற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். இவர் முழுநேரப் புரட்சியாளராகும் முன்னரே மணம் செய்து கொண்டார். இருப்பினும் தனது அரசுப் பணியை விடுவது, ஆண்டுக்கொரு முறை மட்டுமே சந்திப்பது போன்றவற்றை, தனது மனைவி நிர்மலா மற்றும் குடும்பத்தாருக்கு பொறுமையாக புரிய வைத்தார். இவ்வாறு தனது குடும்ப வாழ்வையும் புரட்சிக்காக அர்ப்பணித்தார். தோழர் ரவீந்தர் குட்டி முதலாளியப் பின்னணியில் இருந்து வந்திருப்பினும் ஓர் சிறந்த பாட்டாளி வர்க்கப் போராளியாக வாழ்ந்தார். .. வீரமிக்க பாட்டாளி வர்க்கப் போராளியாகவே மறைந்தார்! உடல் நலக்குறைவு இருந்த போதும் கிராமப்புற இயக்கத்தின் கடின வாழ்க்கையை உறுதியாக எதிர் கொண்டது போலவே இறுதி மணித்துளிகளில் எதிரியின் துப்பாக்கி முனையையும் அச்சமின்றி எதிர் கொண்டார். இந்த உன்னதமான



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்கப் போராளியின் குருதி ஆயிரமாயிரம் புரட்சியாளர்களை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## உழைக்கும் மக்களின் விடிவெள்ளியாக வளரும் மக்கள் யுத்தக் கட்சி. . .

## மக்கள் யுத்தத்தை ஒழிக்க துடிக்கும் இந்திய ஆளும் வர்க்கங்கள்.

இன்று, ஏகாதிபத்தியங்களிடம் நாட்டை விற்று வரும் ஆளும் வர்க்கங்கள், அவர்களின் கட்டளைக்கிணங்கி உலகமயமாதல், தாராளமயமாதல் கொள்கைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இவற்றின் விளைவாக பெரும்பான்மை உழைக்கும் மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாகி வருகின்றது. அமைப்பாக்கப் பட்ட தொழிலாளர் முதல் பெண்கள் வரை சமூகத்தின் அனைத்து தரப்பினரும் கொடூரச் சுரண்டல், ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடி வருகின்றனர். மறுபுறம், கம்யூனிசப் புரட்சியாளர்கள் மற்றும் தேசிய விடுதலைப் போராளிகளின் ஆயுதப் போராட்டங்கள் இச்சமூக அமைப்பின் இருப்பையே கேள்விக்குறியாக்கி வருகின்றன. நாள்தோறும் எண்ணற்ற மக்கள் இவ்வமைப்புகளின் பின் அணிதிரள்கின்றனர். குறிப்பாக, ஒன்றுபட்ட மக்கள் யுத்த கட்சி நாடு முழுவதும் பரவி, ஒரு சக்தியாக வளர்ந்து வருகின்றது. வடதெலுங்கானா, தண்டகாரண்யாவின் கெரில்லா மண்டலங்கள், இந்திய உழைக்கும் மக்களின் ஆட்சி அதிகாரத்திற்கு அடித்தளமிட்டுள்ளன.

இக்கட்சியின் தலைமையில் நாட்டின் இதர பல மாநிலங்களிலும் திட்டமிட்ட வகையில் வர்க்கப் போராட்டத்தை ஆயுத போராட்டமாக வளர்த்தெடுக்கும் பணி முன்னேறி வருகிறது. இதைக் கண்டு தம் இருத்தலுக்கே அபாயம் வந்து விட்டதென ஆளும் வர்க்கங்கள் அஞ்சி நடுங்குகின்றன. நாடு முழுக்க புரட்சிகர இயக்கத்தின் மீதான தமது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. இதுமட்டுமின்றி மக்கள் யுத்தக் கட்சியை நாடு முழுக்க தடை செய்வது பற்றி ஆலோசித்து வருகின்றன. இந்திய மக்களின் போராட்டங்களுக்கு தலைமை இல்லாமல் செய்யவும், வருங்காலத்தில் தமது சுரண்டலாட்சியை ஒழித்துக் கட்டப்போகும் கம்யூனிஸ்ட் கட்சியை அழிக்கவுமே இந்த நாடு தழுவிய நர வேட்டை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

தருமபுரியின் இன்றைய அரசு பயங்கரவாதம் நாடு தழுவிய ஒடுக்கு முறையின் பகுதி எனினும், புரட்சிகர இயக்கத்தை ஒழிக்க முயற்சிப்பதில் தமிழக ஆளும் வர்க்கங்களுக்குள்ள தனி ஆர்வத்தையும், அதற்காக மேற்கொள்ளும் கொடூர வடிவங்களையும் நாம் ஒதுக்கி வைத்துவிட முடியாது. இங்கு புரட்சிகர இயக்கம் காலூன்றி விடக்கூடாது என்ற முயற்சியை இன்றல்ல, 80 களிலிருந்தே கையாண்டு வருகின்றன தமிழக ஆளும் வர்க்கங்கள். அப்போது, தேவாரம் நடத்திய போலி மோதல் படுகொலைகள் இந்தியாவிற்கே முன்னுதாரணமாக இருந்தன. அன்றிலிருந்தே தருமபுரியில் மக்கள் யுத்தம் வளர்ந்து விடக்கூடாதென்று தொடர்ச்சியான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு, பொய் வழக்குகள், என்.எஸ்.ஏ., கிராமங்களில் மக்களை மிரட்டுதல், தேடுதல் வேட்டைகள் என புரட்சிகர இயக்கத்தை துடைத்தெறியும் முயற்சிகள் 20 ஆண்டுகளாக இடைவெளியின்றி தொடர்ந்து வருகின்றன. இவற்றிற்கிடையிலும் மக்கள் யுத்தக் கட்சி தருமபுரியில் காலூன்றி விரைந்து வளர்வது கண்டு பித்தம் தலைக்கேற தமிழக ஆளும் வர்க்கங்கள் நடத்திவரும் கோரக்கூத்துதான் தற்போதைய அடக்குமுறை. பஸ் எரிப்பை சாக்கிட்டு பெரும் படையைக் குவித்து, ஒரு திடீர் தாக்குதல் மூலம் தருமபுரியில் இயங்கிவரும் அமைப்பாளர் குழுக்களை ஒழித்துக் கட்டுவதன் மூலம் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்கிவிட வேண்டும் என்பதே இவர்களின் திட்டம். முக்கியமான அமைப்பாளர்களைப் படுகொலை செய்துவிட்டு போலி மோதல் கதை கட்டி மக்களையும், புரட்சியாளர்களையும் அரசு பயங்கரவாதத்தின் மூலம் அச்சுறுத்தி செயலிழக்கச் செய்வதே இவர்களின் நோக்கம்.

இந்த ஒடுக்குமுறை இயக்கத்தின் தொடக்கத்தில் இதை தெளிவாகப் புரிந்து கொள்ளாததால் இழப்புகளை சந்தித்திருப்பினும் (தோழர் ரவீந்தரின் இழப்பு, தோழர்கள் சிவா, சின்னதம்பி கைது) பிறகு, புரட்சிகர இயக்கமும் உழைக்கும் மக்களும் சமாளித்துக் கொண்டு போராடி வருகின்றனர். தோழர் ரவீந்தரின் போலி மோதல் படுகொலையைக் கண்டித்து புரட்சியாளர்களும், சனநாயக சக்திகளும் பல பகுதிகளில் இயக்கங்களை நடத்தினர். சென்னையில் தோழர் ரவீந்தரின் இறுதி ஊர்வலமும், கண்டன ஆர்ப்பாட்டமும் நடந்தேறின. மதுரையில் கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. சேலத்தில் கண்டன அறைக்கூட்டம் நடைபெற்றது. மனித உரிமை



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகளும் தோழர் ரவீந்தரின் படுகொலையை கண்டித்து சென்னை, மதுரை ஆகிய இடங்களில் கூட்டங்களை நடத்தின. சி.பி.ஐ., சி.பி.எம் கட்சிகளும் கூட இப்படுகொலையைக் கண்டித்திருந்தன. தருமபுரியில் கருணாநிதி அரசின் அரசு பயங்கரவாத நரவேட்டைக்கு பல்வேறு பிரிவினரிடம் இருந்து தோன்றிய எதிர்ப்பானது, ஆளும் கூட்டத்தின் கொலைகார முகத்தை அம்பலப் படுத்தியது.

தருமபுரி பகுதியிலோ தோழர் ரவீந்தரின் படுகொலை நடந்து 10 நாட்களுக்குள்ளாகவே, தோழர்கள் அப்பு, பாலன் சிலை அருகில் அஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டது. இதற்காக கைது செய்யப்பட்ட இளைஞர்களை கிராம மக்கள் திரண்டு சென்று மீட்டனர். ஏப்ரல் 18 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அணிதிரண்டனர். தொடர்ச்சியாக நடைபெற்று வரும் போலீஸ் அத்துமீறல்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்த்து கிராம மக்கள் போராடி வருகின்றனர். அமைப்பாளர் குழுக்களை போலீசின் கொடூர ஒடுக்கு முறை அச்சுறுத்தல்களுக்கிடையிலும் உழைக்கும் மக்கள் தமது கண்ணின் மணி போல் காத்து வருகின்றனர். தற்போதைய பெரும் தாக்குதல் தொடங்கி மாதங்கள் பல கடந்தும் தருமபுரியில் புரட்சிகர இயக்கத்தின் செயல்பாடுகளை ஒடுக்க முடியாமல் தவிக்கின்றன. ஆளும் வர்க்கங்கள், அப்பாவிகளைக் கைது செய்து பொய் வழக்குகள் போட்டும், கருங்காலிகளுக்கு ஆயுதம் தந்தும் கூட அமைப்பாளர் குழுக்களை பிடிக்கவோ, அழிக்கவோ முடியவில்லை. உழைக்கும் மக்களின் ஆதரவையும், மன உறுதியையும் குலைக்க முடியவில்லை. வர்க்கப் போராட்டத்தை கூர்மைப்படுத்தி, உழைக்கும் மக்களின் ஆயுதப் போராட்டமாக வளர்த்தெடுக்கும் திசையில் முன்னேறி வரும் தருமபுரியின் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குவதில் ஆளும் வர்க்கங்கள் எப்போதும் வெற்றி பெற முடியாதென்பதையே இந்நிகழ்வுகள் நமக்கு தெளிவாக்குகின்றன.

**கபடவேடதாரி கருணாநிதியின் பாசிச ஒடுக்குமுறையை முறியடிப்போம்!**

**வர்க்கப்போராட்டத்தை வளர்த்தெடுத்து உழைக்கும் மக்களின் ஆயுதப் போராட்டத்தால் பதிலடி தருவோம்!!**

மாநிலத்திலும், மையத்திலும் ஆட்சியில் பங்கேற்றுள்ள கபட வேடதாரி கருணாநிதி, தமிழகத்தை வேட்டைக் காடாக்கி வருவதோடு, தனது குடும்ப ஆட்சியை நிலை நிறுத்தவும், சொத்துக்களை குவித்து தொழில் சாம்ராஜ்யம் அமைக்கவும் முயன்று வருகிறார். ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தில் மட்டுமல்ல, புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குவதிலும் சந்திர பாபு நாயுடுவின் "சகோதரராகவே' விளங்குகிறார். சட்டமன்றத்தில் நாகரீகமாகப் பேசுவதிலும், 'எதிரிகளை' அரவணைப்பதிலும் தன்னை சனநாயகவாதியாக காட்டிக் கொள்ள முயற்சிக்கும் இந்த கபட வேடதாரி, மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதில் அப்பட்டமான பாசிஸ்ட்டாகவே நடந்து கொள்கிறார். சிறுபான்மையினர் படு கொலை, தலித்துகள் படுகொலை, தொழிலாளர்கள் படுகொலை என தனது கூலிப்பட்டாளத்தின் மூலம் வேட்டை நடத்திவிட்டு, இறுதியாக நக்சல்பாரி புரட்சியாளர்களை நரவேட்டையாடக் கிளம்பி யுள்ளார்.

தருமபுரியில் தனது ஏவல் நாய் எஸ்.பி. கந்தசாமி மற்றும் அதிரடிப்படை, உளவுப்பிரிவினரின் கூட்டுச் சதி மூலம் தோழர் ரவீந்தரைப் படுகொலை செய்துள்ள பாசிஸ்ட் கருணாநிதி, இக்கொலை மற்றும் ஒடுக்குமுறை இயக்கம் மூலம் புரட்சிகர இயக்கத்தை ஒழித்து விடலாமென்று மனப்பால் குடிக்கிறார். ஆனால், வரலாறு சொல்லும் பாடமோ வேறு! ஹிட்லர் போன்ற பாசிஸ்ட்களின் கொடூர ஒடுக்க முறைகளால் மக்கள் போராட்டங்களையோ, புரட்சிகர இயக்கங்களையோ ஒடுக்க முடியவில்லை. மாறாக, இவர்கள் மக்கள் போராட்டப் பேரலைகளால் தூக்கி எறியப்பட்டனர். பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதப் போராட்டத்தின் முன் அடையாளந் தெரியாமல் சிதைந்து போயினர். பழைய பாசிஸ்ட்களுக்கு ஏற்பட்ட அதே கதிதான், தமிழக பாசிஸ்ட் கருணாநிதிக்கும், அவரது ஏவல் நாய்களான எஸ்.பி. கந்தசாமி, பாலசந்திரன் மற்றும் உளவுத்துறையினருக்கும் ஏற்படும்.

'80 களில் கொலைகாரத் தேவாரத்தால் கொல்லப்பட்ட தியாகி தோழர். பாலனின் வாழ்வு ஆயிரமாயிரம் மக்களுக்கு உணர்வூட்டியது. புரட்சிகர இயக்கமும் மேலும் முன்னேறியது. இன்று கொலைவெறியன் கந்தசாமியால் படுகொலை செய்யப்பட்ட மக்கள் யுத்தப் போராளி தியாகி தோழர் ரவிந்தரின் தியாகம் இன்னும் ஆயிரமாயிரம் மக்களுக்கு உணர்வூட்டும். உள்ளத் துணிவுடன் ஆயுதமேந்திய அவ்வீரனின் ஆசைக்கனவான 'மக்கள் படை' அமைக்க தருமபுரி மக்கள் மட்டுமல்ல, தமிழகத்தின் உழைக்கும் மக்கள், அணி திரள்வர்! இது நிச்சயம்!!



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழத்தை நோக்கி முன்னேறும் அணிவகுப்பு!

1999 நவம்பர் 1 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் "ஓயாத அலைகள் III" தாக்குதலை துவங்கினர். துவங்கிய இரு நாட்களுக்குள் ஆறு இராணுவதளங்கள் புலிகள் வசம் வீழ்ந்தன. 1980 களில் போர் துவங்கியது முதலாக, இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்ட மிக மோசமான பின்னடைவு அதுவாகும். விடுதலைபுலிகள் ஒடுசுடம், நெடுகெரனி, அம்பாக்கமம், ஒலுமடு, மாங்குளம் மற்றும் கனகரயாங்குளா ஆகிய பகுதிகளை தங்களது கட்டுபாட்டில் கொண்டுவந்தனர். ஒடுசுடம் முதல் வடக்கு யாழ்ப்பாணத்தை தீவின் பிறபகுதிகளோடு இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலையில் உள்ள தீர்மானகரமான நகரமான மாங்குளம் மற்றும் வன்னியின் மேற்கு பகுதியில் உள்ள பல்வேறு நகரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக புலிகளின் தாக்குதலில் வீழத்துவங்கின.

முந்தைய இரு ஆண்டுகளில் இராணுவத் தாக்குதலில் இழந்த பகுதிகள் அனைத்தையும் விடுதலைபுலிகள் சில நாட்களில் மீண்டும் கைப்பற்றினர். நவம்பர் 12 வாக்கில் தமிழ் கெரில்லாக்கள் கோர்வையான பாதுகாப்பு படைகளை கைப்பற்றிய வேளையில், இராணுவமானது கடைசி வடக்கு பகுதி நகரமான வவுனியாவை தற்காத்துக்கொள்ள தன்னை இறுக்கிக்கொண்டது. 1993 ல் ராணுவத்தால் கைப்பற்றப்பட்ட வவுனியா தற்போது மிகப்பெரும் பாதுகாப்பு படையைக் கொண்டதாக உள்ளது. விடுதலை புலிகள் நகரத்திற்கு அடுத்துள்ள 10 குடியிருப்பு பகுதிகளை பாதுகாப்பான பகுதிகளாக அடையாளங்காட்டியதுடன், தாக்குதலுக்கு முன்னை தாக மக்களை நகரத்திலிருந்து வெளியேறும்படி வேண்டிக்கொண்டது. அரசாங்கம் மக்களை நகரை விட்டுச்செல்ல வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட போதும், மக்கள் தொகையில் ஒரு இலட்சம் பேர் (90% ) வெளியேற்றமானது நடந்தேறியது. இந்த முக்கிய நகரத்தை தற்காத்துக் கொள்வதற்காக இராணுவம் 12,000 படைவீரர்களை அணிதிரட்டியது.

நவம்பர் 20 வாக்கில் தமிழ் கெரில்லாக்கள் வடமேற்கு கடற்கரை நகரமான மன்னார் நகரத்தை தாக்கத்துவங்கினர். மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்களை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததுடன், நகரத்தில் இருந்த முக்கிய இராணுவ முகாம் மீது தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலை தொடர்ந்தனர்.

டிசம்பர் மத்தியில் தெற்கிலிருந்து யாழ்ப்பாண தீபகற்பத்தினுள் நுழைவதற்கான ஒரே வழியான முக்கிய ஆனை இறவு பகுதியைச் சுற்றிலும் விடுதலைப்புலிகள் தாக்குதலை துவங்கினர். இத்திடீர்தாக்குதலின் இரண்டாம் நாள், வடகிழக்கு கடற்கரையில் உள்ள பெரும் கடற்படைத் தளத்தைக் கொண்ட வெட்டியகரணியை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

அதன் பின்னர் ஜனாதிபதி தேர்தலின் போது முக்கிய தலைவர்களை குறிவைத்து மனித வெடி குண்டு தாக்குதலைத் துவக்கினர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கடைசி தேர்தல் கூட்டத்தின் போது அவருக்கு 5 மீட்டர் தொலைவில் ஒரு மனித வெடிகுண்டு வெடித்தது. குண்டு துளைக்காத கார் அவரது உயிரைக் காப்பாற்றினாலும், அவருக்கு ஒரு கண்பார்வை பறிபோனதுடன், மறு கண்ணில் காயம் ஏற்பட்டது. கொழும்பு காவல் துறை டி.ஐ.ஜி. உட்பட 20 பேர் இறந்தனர்.

அதே வேளையில் 25 கிலோ மீட்டர் தொலைவில் எதிர் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி வட்டத்தில் மற்றொரு வெடிகுண்டு தாக்குதலில் முன்னாள் இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அலகாமா உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த ஒன்றரை மாத கால போரில் இலங்கை இராணுவம் கடும் இழப்பை சந்தித்தது. பீரங்கிகள், வாகனங்கள், இராணுவம் மற்றும் வெடிபொருட்கள் உள்ளிட்ட இராணுவ தளவாடங்களில் பலமான இழப்பு ஏற்பட்டது. அவற்றை விடுதலை புலிகள் கைப்பற்றிக் கொண்டனர். பிரதேசங்களின் இழப்பு, நூற்றுக்கணக்கான வீரர்களின் சாவு, பல மில்லியன் டாலர் மதிப்பு கொண்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகளின் இழப்பு ஆகியவற்றிற்கும் மேலாக இலங்கை இராணுவ படைகளின் மனஉறுதி சரிவடைந்தது. பயபீதி காட்டுத் தீ போல பரவியதுடன், வீரர்கள் கலகத்தில் இறங்கினர். பலர் ஆயுதங்களுடன்


படிப்பகம்

www.padippakam.com

ஓடிவிட்டனர். இழப்புகளால் அதிர்ச்சியடைந்த அரசாங்கம் விசாரணை நீதி மன்றம் நிறுவியதுடன் ஒரு பிரிகேடியரையும் ஒரு மேஜர் ஜெனரலையும் இடைக்கால நீக்கம் செய்தது. ஆனால் சாதாரண வேளைகளில் கூட படையை விட்டு ஓடுவதாக மதிப்பிடப்பட்டுள்ள 10% ஓடிச் செல்பவர்களுக்கு பொது மன்னிப்பு என்ற அரசாங்கத்தின் அறிவிப்பிற்கு மிகவும் குறைவான பலன் அரசாங்கத்திற்கு இருண்ட சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

### கலகத்தின் வரலாறு

சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் மற்றும் புத்த மதகுருக்களால் இலங்கை தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தப்பட்டு வந்துள்ளனர். 1983 ஜூலையில் எதிர் கிளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த 13 படைவீரர்கள் கொலை செய்யப்பட்டதானது, இலங்கையில் மிக மோசமான இனக்கலவரத்திற்கு தீப்பொறியானது. அது ஒரு திட்டமிட்ட தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையாகும். அதில் நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சித்தரவதை செய்யப்பட்டனர். இது தமிழர்களின் தனி ஈழக் கோரிக்கையுடன் நடைபெறும் தற்போதைய உள்நாட்டு யுத்தத்திற்கு அடித்தளமிட்டது. 1982 நவம்பர் 27 அன்று விடுதலைபுலி சத்தியனே கம்பர்மலை முதல் தியாகியானார். 1989 முதல் விடுதலை புலிகள் ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை போரில் வீழ்ந்த புலிகளை நினைவுறுத்தும் வகையில் **"மாவீரர்கள் தின"** மாக கடைபிடித்து வருகின்றனர். இந்நாளிலேயே விடுதலைபுலிகள் இயக்கம் முக்கிய அறிவிப்புகளை அறிவித்து வருகின்றது.

1980 களின் துவக்கத்தில் விடுதலைப்புலிகள் இந்திய அரசாங்கத்தாலும் அதன் வேவு பிரிவான 'ரா' வாலும் பயிற்சியளிக்கப்பட்டு, ஆயுதம் வழங்கப்பட்டனர். ஆனால் திம்பு பேச்சு வார்த்தையில் இந்தியாவின் வழியை பின்பற்ற விடுதலைப்புலிகள் மறுத்ததால், பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததும், உறவுகள் மோசமடைந்தன. இந்திய ஆட்சியாளர்கள் இலங்கையின் மீது தனது விரிவாதிக்க திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே தமிழ் ஈழ இயக்கத்தை பயன்படுத்தினர். இது தோல்வியுற்றவுடன் இந்திய அரசு எதிரணிக்கு சென்றதுடன், இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்திய அமைதிப்படையை இராஜீவ் காந்தி அனுப்பினார். அதன் நோக்கமானது, தமிழீழ இயக்கத்தை ஒடுக்குவது மட்டுமின்றி ஒட்டுமொத்த இலங்கையின் மீது இந்திய ஆதிக்கத்தை நிறுவுவதும் ஆகும். இந்திய அமைதிப்படையின் இரக்கமற்ற கொடூரத்தன்மையானது விரைவிலேயே இலங்கை அரசும், விடுதலைபுலிகளும் கைகோர்த்துக் கொண்டு அதனை நாட்டை விட்டு துரத்தி அடிக்கும் அளவுக்கு விளங்கியது. ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைபுலிகளுக்கும் இடையில் அமைதி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பிரேமதாசா இந்திய அமைதிப் படையிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள விடுதலைபுலிகளுக்கு ஆயுதம் மற்றும் நிதி கூட வழங்கினார். விடுதலை புலிகளை இந்தியாவின் பிடியில் வீழ்ந்து விடாமல் இருப்பதற்காக வடகிழக்கு பகுதி கட்டுப்பாட்டைக் கூட புலிகள் வசம் கொடுத்தார். ஆனால் இந்திய அமைதிப்படை வெளியேற்றப்பட்ட உடனேயே உள்நாட்டு யுத்தம் மீண்டும் துவங்கப்பட்டு, இறுதியில் 1993 - ல் பிரேமதாசா கொல்லப்பட்டார்.

1994 - 95 ஜனாதிபதி தேர்தலுக்காக இறுதி அமைதிக்கான வாக்குறுதியை குமாரதுங்கா வழங்கினார். தமிழ் மக்கள் தேர்தலில் அவருக்கு வாக்களித்தனர். ஆனால் மாபெரும் வெற்றிபெற்று பயனற்ற பல சுற்று பேச்ச வார்த்தைகள் நடத்திய பின்னர், அவரது கட்சி இலங்கையை 17 ஆண்டுகளாக இரும்புக்கரம் கொண்டு ஆண்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு எந்த வகையிலும் மாறுபட்டதல்ல என்பது நிரூபணமானது.

1995 ஏப்ரலில் குமாரதுங்கா அரசாங்கம் நேர்மையின்றி நடந்து கொள்வதாக குற்றம் சாட்டிய பிரபாகரன் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டார். அதன் பின்னர் திரிகோணமலை துறைமுகத்தில் இரு கடற்படை படகுகளை விடுதலை புலிகள் மூழ்கடித்ததுடன் மூன்றாம் ஈழ விடுதலை போரை துவங்கினர். அதே வேளையில் ஐக்கிய தேசிய கட்சியை விட மோசமான முழு அளவிலான போரை சந்திரிகா துவங்கினார். விடுதலை புலிகள் மட்டுமின்றி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் தாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தின் மீதான கட்டுப்பாட்டை இழந்தது மட்டுமின்றி, இலங்கை இராணுவம் கிழக்கு நோக்கியும் தனது கட்டுப்பாட்டை விரிவுபடுத்தியது. அன்றுமுதல் 99 நவம்பர் வரையிலும், கிழக்குப்பகுதியில் இருந்த முல்லைதீவு இராணுவ முகாமை 1996 - ல் ஓயாத அலைகள் I தாக்குதல் மூலமாகவும், கிளிநொச்சியை 1998 - ல் ஓயாத


படிப்பகம்

www.padippakam.com

அலைகள் II தாக்குதல் மூலமாகவும் விடுதலை புலிகள் கைப்பற்றியதால் ஏற்பட்ட இரு முக்கிய இழப்புகளைத் தவிர இலங்கை அரசாங்கம் வெற்றி முகமாக இருந்தது.

இத்தகைய வெற்றிகரமான சூழலில் மூன்றில் இருமடங்கு பெரும்பான்மை பெற்று அரசியல் சட்டத்தை திருத்துவதற்காக, ஜனாதிபதி தேர்தலை முன்னதாக நடத்தினர். ஆனால் புலிகளின் தாக்குதலால் அவரது முயற்சி எதிர் விளைவையே அளித்தது.

## தேர்தல் மோசடி

தீவிரமான சிங்கள இனவெறி நிலைப்பாட்டை எடுத்து சில ஐக்கிய தேசிய கட்சி பிரமுகர்களை சந்திரிகா தனது பக்கம் இழுத்துக் கொண்டார். ஆனால் போர்க்களத்தில் அவருக்கு ஏற்பட்ட இழப்புகளோடு ஒப்பிடுகையில், சில ஐக்கிய தேசிய கட்சி எம்.பிக்களின் வரவானது முக்கியத்துவமற்றதாகும். அத்துடன் போர் இழப்புகள் அவருக்கு எதிரலையை தோற்றுவித்தன. 1994 தேர்தல் போல் அல்லாமல், தமிழ் மக்கள் மொத்தமாக அவருக்கு எதிராக வாக்களித்தனர். பிரபாகரனின் மாவீரர்கள் தின உரை குறிப்பாக சந்திரிகா அரசாங்கத்தை குறிவைத்து இருந்தது.

இத்தேர்தலில் போர் குறித்த அதிகாரபூர்வ கொள்கைகள் 1994 - 95 தேர்தலுக்கு தலைகீழாக இருந்தன. இம்முறை சந்திரிகா சிங்கள இன வெறி நிலைபாட்டை எடுத்ததுடன் தமிழர்களுக்கு தன்னாட்சி திட்டத்தை அறிவித்தார். மறுபுறத்தில் ஐக்கிய தேசிய கட்சி தனது தேர்தல் அறிக்கையில் போர் நிறுத்தம் ; விடுதலை புலிகள் அடங்கிய இடைக்கால கவுன்சிலை வடகிழக்கு பிராந்தியத்தில் நிறுவுதல் ; தமிழ் மக்கள் மீதான தாக்குதலை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவது ஆகிய வாக்குறுதிகளை அளித்தது. அரசு படைகளின் பெரும் அளவிலான வன்முறை மற்றும் பெரும் கள்ள ஓட்டு ஆகியவற்றுடன் 1999 டிசம்பர் 21 அன்று தேர்தல் நடைபெற்றது. இருப்பினும், சந்திரிகாவால் குறைந்த வித்தியாசத்திலேயே வெற்றி பெற முடிந்தது. அவர் 51.12% (1994 - ல் 62.28%) வாக்குகளை பெற்றார். ஐக்கிய தேசிய கட்சி 42.7% (1994 - ல் 35.9%) வாக்குகளை பெற்றது. இந்திய மேற்பார்வையாளர்கள் (முன்னாள் தேர்தல் கமிஷனர் ஜி.வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி உட்பட) தேர்தலை முறையானதாக அறிவித்த அதே வேளையில் கொழும்பில் உள்ள அரசு சாரா நிறுவனமான தேர்தல் வன்முறையை பார்வையிடும் மையம் "தேர்தல் கடும் வன்முறைகள், திட்டமிட்ட கள்ள ஓட்டுகள், வாக்கு சாவடி கைப்பற்றுதல், வாக்காளர்கள், அதிகாரிகள், பார்வையாளர்களுக்கு எதிரான வன்முறை, அரசு எந்திரம் மற்றும் வசதிகளை துஷ்பிரயோகம் செய்தல் ஆகியவற்றுடன் எண்ணற்ற வாக்களிப்பு மையங்களில் நாடு முழுவதும் நடைபெற்றதாக" கூறுகிறது. மேலும் நாட்டில் உள்ள 160 தேர்தல் மண்டலங்களில் 59 இல் தேர்தல் முடிவானது மோசடித்தனமானது என அறிவித்ததுடன் மொத்த தேர்தலையும் செல்லாததாக அறிவிக்க பரிந்துரைத்தது.

## இந்திய விரிவாதிக்கத்தின் அபாயம்

இனமோதலை பயன்படுத்தி தமிழீழப் பகுதி மற்றும் இலங்கை மொத்தத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்திய ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். தமிழகம் மற்றும் இந்தியாவின் ஒரு பிரிவு ஆளும் வர்க்கம், இந்தியாவுக்கு கீழ்ப்படிந்த சுதந்திர தமிழீழம் உருவாக விரும்புகின்றனர். பொதுவாக, இந்திய ஆட்சியாளர்கள், விடுதலைபுலிகளையும், மோதலையும் பயன்படுத்தி இலங்கை ஆட்சியாளர்களை இந்தியபெரும்தரகு முதலாளிகளின் நலன்களுக்கு தலைவணங்கச் செய்ய முயல்கின்றனர். இதற்காக விடுதலைபுலிகள், இலங்கை அரசு இருவரிடமும் சதி மற்றும் மோசடி மூலம் சகுனித்தனம் செய்து வருகின்றனர்.

சுதந்திர தமிழீழக் கோரிக்கையானது நியாயமான கோரிக்கையாகும். தமிழ் சிறுபான்மையினருக்கு சிங்கள இனவெறி அரசிடமிருந்து பிரிந்து செல்வதுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உள்ளது. ஆனால் விடுதலைபுலிகள் சரியான மாற்று வழங்கினால் தமிழீழம் கோரவில்லை எனவும், அதை நிறைவேற்றிட காமன் வெல்த் பொதுச் செயலர், பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நார்வே அரசாங்கம் போன்ற மத்தியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டும் உள்ளனர்.

சமீபத்தில் இந்தியாவில் உள்ள பா.ஜ.க. அரசை நண்பன் எனவும் புகழ்ந்துள்ளனர். இந்திய ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில் முதுகில் குத்திய அனுபவத்தில் இருந்து புரிந்து கொள்ளாமல், சொந்த நாட்டில் தேசிய இன இயக்கங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கிவரும் அரசாங்கம் வெளிநாட்டில் தேசிய இன விடுதலையை ஆதரிக்கும் என எதிர்பார்க்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

விடுதலை புலிகளின் தலைமை அரசியல் ஆலோசகரான அண்டன் பால சிங்கம் 1999 நவம்பர் 27 அன்று லண்டனில் நடைபெற்ற மாவீரர் தின பொதுக் கூட்டத்தில் இத்தகைய எண்ணத்தை வெளிப் படையாக வெளிப்படுத்தினார். அவர் இந்தியா, குறிப்பாக பா.ஜ.க அரசாங்கம் தமது நண்பன் என குறிப்பிட்டார். அவர், "கடந்த கால பகைமை என்ன இருப்பினும், இந்தியா இலங்கை தமிழர்களுக்கும், விடுதலைபுலிகளுக்கும் மாபெரும் நண்பர் என்பதை மறுக்க முடியாது" எனக் கூறினார். மேலும், தமிழீழம் அடையப்படும் பொழுது புதிய அரசானது, இப்பிராந்தியத்தில் இந்தியாவிற்கு உறுதியான நட்பு சக்தியாக இருப்பதுடன் இந்திய அதிகார வரம்பிற்கு உட்பட்டு சுழலும் எனவும் குறிப்பிட்டார்.

இத்தகைய அறிக்கைகள் இந்திய ஆட்சியாளர்களை மனங்குளிரச் செய்கின்றன. தேசிய ஜனநாயக கூட்டணியின் உறுப்பினர்களான பா.ம.க, ம.தி.மு.க, சிவசேனா போன்றவர்கள் விடுதலை புலிகள் இந்துக்களின் விடுதலைக்காக போராடி வருவதால் அவர்களை பா.ஜ.க. ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். மறுபுறத்தில் இலங்கை அரசாங்கமானது தற்போதைய இராணுவ தோல்விகளால் நெருக்கடியில் சிக்கியுள்ளது.

1971 மற்றும் 1987 இல் அது, இந்திய இராணுவத்தின் உதவியுடன் ஜேவிபியின் கலகங்களை ஒடுக்கியது. ஆனால் அமைதிப்படை அனுபவத்திற்கு பின்னர், இந்திய ஆதிக்கம் குறித்து அச்சமடைந்துள்ளதுடன், இந்திய இராணுவ உதவியை பெற தயங்குகிறது. அதன் சொந்த இராணுவ செலவினமானது 1983 இன் 1.8 பில்லியனிலிருந்து 1999 இல் 47.3 பில்லியனாக உயர்ந்துள்ளது. அதாவது நிதி செலவீனத்தில் 13.3% ஆகும். இது மூன்றாம் உலகநாடுகளிலேயே அதிக பட்சமானதாகும். இருப்பினும், அது போர் முனையில் இழப்புகளை சந்தித்து வருகிறது. தள்ளாடிக் கொண்டிருக்கும் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சந்திரிகா கடும் சர்வாதிகார ஏதேச்சதிகார அதிகாரங்களை குவித்து வருகிறார்.

சர்வதேச (மற்றும் உள்நாட்டு தமிழர்கள்) மத்தியஸ்தர்கள் மூலம் இலங்கை அரசமைப்பிற்கு உள்ளாகவே சமரசம் கோரி வரும் அதே வேளையில் இலங்கை அரசு தனது பலவீனமான நிலையை தனக்கு எதிராக இந்திய ஆட்சியாளர்கள் பயன் படுத்துவது குறித்து அச்சமடைகிறது. அதிகாரத்தில் உள்ள ஜார்ஜ் பெர்னாண்டஸ் போன்றவர்களால் இலங்கை அரசானது இந்திய ஆட்சியாளர்களுக்கு கீழ்ப்படிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக 2000 பிப்ரவரி 2 அன்று இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்திய பெரு முதலாளிகள் கடந்த இரு வருடங்களாக இதனைக் கோரி வந்துள்ளனர். 98 டிசம்பர் வாக்கிலேயே இரு பிரதம மந்திரிகளால் இது முன் வைக்கப்பட்டது. ஆனால் இருநாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தின் ஒரு புறத்தன்மையால், அதனை இறுதிபடுத்த இலங்கை தயங்கியது. ஆனால் தற்போது, சில இந்திய தலைவர்கள் விடுதலை புலிகளுடன் கொண்டுள்ள உறவானது தனது தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்திய ஒநாய்களை புறந்தள்ளி வைப்பதற்காக இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் அவசரமாக கையெழுத்திட்டது. இலங்கை தமிழ் மக்களின் போரானது ஒரு முக்கிய கட்டத்தில் உள்ளது. தங்களது நியாயமான தமிழீழக் கோரிக்கைக்கான போரில் பெரும் இராணுவ வெற்றிகளை பெற்று, இலங்கை அரசாங்கத்தை தற்காப்பு நிலைக்கு தள்ளியுள்ளனர். ஆனால் இந்தப் போரில் இந்திய மக்கள் தான் அவர்களது உண்மையான நட்பு சக்திகளே ஒழிய, இந்திய அரசாங்கம் அல்ல. உண்மையான தமிழீழமானது, இலங்கை அரசாங்கத்திடமிருந்து மட்டுமின்றி, விரிவாதிக்க இந்திய ஆளும் வர்க்கங்களிடமிருந்தும் சுதந்திரமானதாக இருக்க வேண்டும்.

## விடுதலைபுலிகள் மீதான தடையை நீக்கு!

மத்தியிலுள்ள பா.ஜ.க. அரசு ஈழ விடுதலைக்காக போராடி வரும் விடுதலைபுலிகள் இயக்கத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு தடை செய்துள்ளது. அத்துடன் தெற்காசியாவில் தனது விரிவாதிக்க கொள்கையுடன் ஈழப்பிரச்சனையில் தலையிட்டு வருகிறது. விடுதலை புலிகள் மீதான தடை மற்றும் ஈழபிரச்சனையில் இந்திய அரசின் தலையீட்டை கடுமையாக கண்டிக்கும் அதே வேளையில் ஈழ விடுதலைப் போரை போராளி உயர்த்திபிடிக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# 2000-2001 ஆண்டின் பட்ஜெட்: ஒரு போர் பட்ஜெட்

இந்த பட்ஜெட் ஒரு போர் அறிவிப்பை செய்வதற்கு ஒப்பானதாகும். தனது அண்டை நாடுகளை நோக்கிய ஒரு போராக மட்டுமின்றி, சொந்த நாட்டின் மக்கள் மீதான ஒரு போராகும். முழுமையாகத் திவாலாக, கடன்வாங்கிய பணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் தனது பட்ஜெட்டில் ஆயுதப்படைகளுக்கான செலவீனத்தில் மிகப்பெரும் அதிகரிப்பை திட்டமிட்டுள்ளதுடன், பிற அனைத்து ஒடுக்குமுறைக் கருவிகளுக்கான செல்வுகளையும் அதிகரித்துள்ளது. அவசரநிலை காலகட்டத்தின் போதும்கூட அல்லது முன் எப்போதும் இல்லாத அளவில் ராணுவமயமாக்கப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையை தற்போது கண்டுள்ளோம்.

**பொருளியல் முழுமையாகத் திவாலாகி இருக்கும் நிலையை எட்டியிருக்கையில் செலவீனத்தில் ஏற்பட்டிருக்கும் இப்பெரும் அதிகரிப்பை பணக்காரர்கள் மீது வரிவிதிப்பதன் மூலம் ஈடுகட்டவில்லை, மாறாக ஏழை, நடுத்தரவர்க்க மக்களிடமிருந்து கடைசி காசையும் பிழிந்தெடுப்பதற்காக ஒரு ஈவிரக்கமற்ற திட்டத்தை வகுத்துள்ளது. இந்த பட்ஜெட் மக்களின் பணத்தை கொள்ளையிட்டு துப்பாக்கி வாங்குவது, அதைக்கொண்டு மக்களைச் சுடுவது என்ற இரட்டை நோக்கத்தைக் கொண்டது. மேட்டுக் குடியினரை சலுகைகள் மூலமாக திருப்திப்படுத்தும் அதேவேளையில் காவல்துறை மற்றும் ராணுவ செலவுகளை அதிகரித்ததன் மூலம் மக்களின் கோபத்திலிருந்து அவர்களை பாதுகாப்பதையும் இந்த பட்ஜெட் நோக்கமாகக் கொண்டுள்ளது.**

இந்த பட்ஜெட் குறித்த பகுப்பாய்வில், நாம் முதலில் ஆட்சியாளர்களின் சுடும் திறனை அதிகரிக்கச் செய்ய செலவிடப்படும் தொகையின் அதிகரிப்பையும், பின்னர் ஏராளமான இத்தொகை மக்கள் திரளினரிடமிருந்து எவ்வாறு பிழிந்தெடுக்கப்படுகிறது என்பதையும் காண்போம். அடுத்ததாக மேட்டுக் குடியினருக்கு, குறிப்பாக அன்னிய மூலதனத்திற்கு பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ள தொகையைப் பற்றியும் இறுதியாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கங்கள் கடை பிடித்து வரும் (பொருளியல் சீர்திருத்த) கொள்கைகளின் காரணமாக பொருளியல் எந்த அளவிற்கு திவால் நிலையை எட்டியுள்ளது என்பதையும் காணலாம்.

## போர் கருவூலம்

பாதுகாப்புச் செலவீனம் இவ்வளவு அதிகமாக இதுவரையிலும் எப்போதும் உயர்த்தப் படவில்லை. பட்ஜெட்டை தாக்கல் செய்யும் போது இந்த அளவிற்கு போர் கூக்குரலை இதுவரையிலும் எழுப்பியதில்லை. இந்த பட்ஜெட் வெளிநாடுகளில் இந்திய விரிவாதிக்கத்தையும், உள்நாட்டில் பாசிச ஒடுக்குமுறையையும் வெளிப்படுத்தும் ஒரு தன்மையாகும். 2000-01ஆம் ஆண்டிற்கான இந்த பட்ஜெட் தரகுப் பெரும் முதலாளிகள் மற்றும் நாடு கடந்த நிறுவனங்கள் கூட்டாக ஒட்டு மொர்த்த தெற்காசிய சந்தையையும், இந்திய மக்களை தாக்குவதற்காகவும், தங்களது மூலதனத்தை பாதுகாக்கவும் ஏந்தியுள்ள ஒரு இரட்டைமுனை வாளைப் போன்றதாகும். **மிகப்பெரும் செலவீன அதிகரிப்பு ராணுவச் செலவு அதிகரிப்பிற்காக மட்டுமன்றி துணை ராணுவப் படைகள் மற்றும் பிற கலக எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான செலவீனத்திலும் பெரும் அதிகரிப்பு செய்யப் பட்டுள்ளதை காணலாம்.** இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்திய மக்களை ஒடுக்குவதை மட்டும் திட்டமிடவில்லை. மாறாக நேபாள் போன்ற அண்டை நாடுகளில் உள்ள மக்கள் இயக்கங்களை நசுக்குவதிலும் ஒத்துழைப்பு செய்ய திட்டமிட்டுள்ளது.

சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையை விட ரூ13 ஆயிரம் கோடி பாதுகாப்பு செலவீனத்தில் பெருமளவில் உயர்த்தப்பட்டுள்ளது. இது 28.2% உயர்வாகும். மொத்த தொகையான ரூ.58,587 கோடி என்பது தற்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 3% ஆகும். அதாவது ஒருவருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7% உயர்த்தப்பட்டுள்ளது. இது ராணுவ நிறுவனங்களின் தொடர்ச்சியான கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ஆனால் ஒருவருடத்திற்குள் இத்தகைய உயர்வு நடைபெறும் என்பதை இந்த ராணுவப்



படிப்பகம்

www.padippakam.com

பெரும் புள்ளிகள் கூட எதிர்பார்க்கவில்லை. **ராணுவத்தின் மேல்மட்ட அதிகாரிகளுக்கும், பிஜேபி தலைமையிலான அரசாங்கத்தின் மேல் மட்ட அணியினருக்கும் இடையிலான அதிகப் படியான பிணைப்பைத்தான் இது காட்டுகிறது.**

பாகிஸ்தானிடம் இருந்து அச்சுறுத்தல் அதிகரித்துவருகிறது என்பதே இந்த உயர்வுக்கு காரணமாக கூறப்படுகிறது. ஆனால், வேடிக்கை என்னவெனில், பாகிஸ்தானின் ஒட்டுமொத்த பாதுகாப்பு பட்ஜெட், இவ்வருடத்தில் இந்தியாவின் அதிகரிக்கப்பட்டுள்ள செலவீனத் தொகைக்கு ஏறத்தாழ சமமாக உள்ளது என்பது தான்!!

இப்பெரும் அதிகரிப்பிற்கான உண்மைக் காரணம் என்னவெனில், இந்திய ஆட்சியாளர்கள் தங்களது பலத்தை தெற்கு ஆசியாவிற்கு விரிவுபடுத்த முடியும் என்பதும், ஏற்கனவே ராணுவத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் ஈடுபட்டு வருகின்ற கலக எதிர்ப்பு நடவடிக்கைகளின் தன்மைகளை அதிகரிக்கச் செய்வது என்பதும் தான்.

இத்தகைய உயர்வு மட்டுமன்றி, துணை ராணுவப் படைகளுக்கான திட்டமிட்ட செலவு கூட சென்ற வருடத்தை விட 16%, அதாவது ரூ.7,000 கோடியிலிருந்து ரூ8,000 கோடியாக உயர்ந்துள்ளது. இத்தோடு, மாநில காவல்படைகளை நவீனப்படுத்த மத்திய அரசு தனது ஒதுக்கீட்டை இருமடங்காக அதாவது ரூ 200 கோடியாக அதிகரித்துள்ளது. அதுமட்டுமன்றி, ஜம்மு கஷ்மீர் மற்றும் வடகிழக்கு, மாநிலங்களில் தனது கலக எதிர்ப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதன் ஒரு பகுதியாக "சிறப்பு உதவி" யாக ரூ500 கோடி இம்மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, மேலும் ஒரு 500 கோடி ரூபாயில் எல்லா விமான நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக திட்டமிட்டுள்ளது (இது பட்ஜெட் கணக்கில் வரவில்லை)

இவை இத்தோடு முடிந்துவிடவில்லை. கலக எதிர்ப்பு நடவடிக்கைகளின் திறனை அதிகரிக்கச் செய்ய ஒரு குறிப்பான திட்டமும் உள்ளது. 'கிராமப்புற வளர்ச்சி' என கூறப்படும் திட்டத்திற்கு ரூ 5 ஆயிரம் கோடியை சிறப்பு ஒதுக்கிடாக இந்த பட்ஜெட் அனுமதித்துள்ளது. பிரதமரின் 'கிராமோதிய யோஜ்னா' என்ற இத்திட்டதின் படி 50% நிதியை அல்லது ரூ 2,500 கோடியை கிராமப்புற சாலைகள் அமைப்பதற்காக மட்டுமே ஒதுக்கியுள்ளது. ஆயுதம் தாங்கிய புரட்சிகர மற்றும் தேசிய விடுதலை போராட்டங்களை எதிர்த்த தனது சண்டைகளுக்கு பின்தங்கிய பகுதிகளில் சாலை வசதி குறைபாடு காணப்படுவது ஒரு முக்கிய தடையாக இருந்து வருகிறது என்பதில் அய்யமில்லை. எனவே, தற்போது இதை சரிசெய்வதற்காக சாலைகள் அமைக்கப்படுகின்றன. பள்ளிகள், மருத்துவ மனைகள், பாசனவசதித்திட்டங்கள் மற்றும் மலிவான பொது போக்குவரத்து வசதிகளைச் செய்யவில்லை. மாறாக ஒடுக்கு முறைக்காக சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதற்காக, மாநில சாலைகளை அமைக்க மேலும் கூடுதலாக ரூ 1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவையெல்லாம், வெளிப்படையாக ஒதுக்கப்பட்ட செலவீனமாக இருக்கையில், பல்வேறு தலைப்புகளின் கீழ் பெரும் தொகை மறைமுகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ராணுவ மற்றும் துணை ராணுவ படையினரின் ஓய்வூதியம், விண்வெளி மற்றும் அணு ஆராய்ச்சித் திட்டங்கள், வேவுத்துறை இன்னும் பிறவற்றிற்காகவும் பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகை அனைத்தையும் மொத்தமாகக் கூட்டினால் அது ரூ 85 ஆயிரம் கோடியை எட்டுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதெனில் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் மாதம் ரூ 350ஐ இதற்காக செலுத்த வேண்டியுள்ளது. நமது நாட்டின் மக்கள் தொகையில் 59%க்கும் அதிகமானோர் அதாவது 53 கோடி மக்கள் மாதம் தோறும் ரூ ஆயிரத்திற்கும் குறைவான வருவாயை பெற்று வறுமையில் வாடும் போது (NCAER ஆய்வறிக்கை) இத்தொகை நமது மக்களின் மீது மேலும் சுமத்தப்படும் பெருஞ் சுமையாகும்.

பணக்காரர்களை விட்டுவிட்டு, ஏழை மக்கள் திரளினரிடம் இருந்து இந்த கூடுதலான தொகையை எவ்வாறு பிழிந்தெடுக்கின்றனர் என்பதைப் பற்றி நாம் இப்போது காணலாம்.

### மக்களைக் கொள்ளையிடுதல்

கொள்ளையர்கள் பணக்காரர்களிடமிருந்து லட்சக் கணக்கில் கொள்ளையடிக்கின்றனர், அரசாங்கமோ இந்த பட்ஜெட்டுகள் மூலம் மக்களிடமிருந்து கோடிக்கணக்கில் கொள்ளையிடுகின்றனர். ஏழைகளுக்கு மானியங்களை வெட்டுவதைக் குறித்து கூச்சலிடுகின்ற 'நிபுணர்கள்' தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒரு மென்பொருள் தொழிலாளிக்கு வருடாந்திர மானியமாக ரூ 35 ஆயிரம் வழங்குவதைக் குறித்து மௌனம் சாதிக்கின்றனர். இந்த பட்ஜெட் ஏழைகளையும்,



படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளையும் குறிப்பாக தாக்குகின்றது. முதலாவதாக ரேசனில் வழங்கும் உணவுத்தானிய விலையை உயர்த்தியதன் மூலம் மிகவும் ஏழை மக்களை தாக்கியுள்ளது. மாத் அரிசி ஒதுக்கீட்டை 10 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தி இருப்பது என்பது, இதற்கான தொகையை மக்களால் செலுத்த முடியாமல் இருக்கும் போது இது மிகவும் அர்த்தமற்ற ஒன்றாகும்.

இரண்டாவதாக, வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கு எந்த வித உணவு வகையிலான மானியங்களும் கிடைக்க செய்யாமல், தானியங்களை அவர்கள் 'பொருளியல் அடக்க விலை' கொடுத்து வாங்க வேண்டியவர்களாக் கியுள்ளது. ஏழைகளுக்கு உணவை மறுப்பது என்பதைத் தவிர இது வேறு என்ன? ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழே அல்லது மேலே உள்ளது என்பதைத் தீர்மானிப்பது யார்? தேசிய புள்ளிவிவர கழகம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் மொத்த மக்கள் தொகையில் 50%த்தினர் என்று கூறுகையில் அரசாங்கம் 35% என்கிறது. திட்டக் கமிசனோ வெறும் 25% எனக் கூறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதெனில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் என வெறுமனே பாகு படுத்துவதன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு தற்போது எந்தவித உணவு மானியமும் மறுக்கப்படுகிறது என்பது தான்.

இத்தோடு, பெருமளவில் உரவிலை உயர்வை இந்த பட்ஜெட் அறிவித்துள்ளது. உர மானியத்தை 15% குறைத்துள்ளது. மேலும் சரக்கு கட்டணம் போன்ற எண்ணற்ற சலுகைக் கட்டணங்களையும் நீக்கியுள்ளது. **இது விவசாயிகளின் மீது ரூ 6000 கோடி சுமையை மேலும் சுமத்தும்.** நாடுமுழுவதும் உள்ள விவசாயிகள் இடு பொருட்களின் விலை உயர்வாலும், பயிர் மற்றும் சந்தையின் பாதகங்களால் தற்கொலைக்கு தள்ளப் படுகின்றனர். கடந்த 15 வருடங்களில் இடு பொருட் களின் விலைகள் மூன்று மடங்காக உயர்ந்துள்ள வேளையில் விவசாயிகளின் வருவாய் 1.5 மடங்கே உயர்ந்துள்ளது. இத்தகைய உயர்வுகளுடன், மின் கட்டணத்திற்கு வழங்கப்படும் மானியமும் நீக்கப் பட்டு விட்டால் அது இந்திய விவசாயிகளின் முது கெலும்பையே உடைத்துவிடும்.

இவை அனைத்திற்கும் மேலாக, அமைச் சரவை டீசல், மண்ணெண்ணை மற்றும் சமையல் எரிவாயு விலையை பெருமளவு உயர்த்த திட்டமிட்டுள்ளது. இது ஒரு மாதத்திற்கு முன்னரே அமலாக்கம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. ஆந்திர பிரதேசில் நகராட்சி தேர்தல்களில் தெலுங்கு தேச கட்சிக்கு உதவி செய்யும் நோக்கத்தில் ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. மண்ணெண்ணை விலையை 285% மாக லிட்டருக்கு ரூ. 2 என்பதிலிருந்து ரூ7.7 ஆக உயர்த்தவும், சமையல் எரிவாயுக்கு சிலிண்டர் ஒன்றிற்கு ரூ 124லிருந்து ரூ 191.5 ஆக 53% உயர்விற்கும் ஆலோசனை கூறியுள்ளது. மேலே கூறிய ஒரு மாதகால தாமதத்தினால் ரூ 1200 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது என தொழில் வட்டாரங்கள் கவலை கொண்டன. **மொத்தத்தில் இப்பொருட்கள் மீதான விலை உயர்வினால் ஏழை, நடுத்தரவர்க்க மக்களிடம் இருந்து ரூ 14,000 கோடி பிழிந்து எடுக்கப்படுகிறது.** இந்த விலை உயர்வில் ஒரு பகுதி வாபஸ் பெறப் படலாம் என நினைத்தாலும், ஏழைமக்கள் உணவு சமைப்பது என்பது கூட தற்போது தடைசெய்யப்படுகிறது.

அடுத்ததாக சுங்க வரிகள் அதிகரித்துள்ளன. வீணாகுதலை தடுப்பது என்ற பெயரில் ரூ 3,252 கோடி கூடுதல் வருவாயாக கருதப்படுகிறது. மருந்துப் பொருட்கள் மீதான வரி 8%லிருந்து 16%மாக இரட்டித்திருக்கும் வேளையில் பெப்சி, கோகோ கோலா மற்றும் பிற காற்றேற்றப்பட்ட திரவங்களின் மீதான வரி 24% லிருந்து 16%மாக குறைக்கப் பட்டுள்ளது. இதுபோன்ற வரிகள் மூலமாகவும் மக்கள் மீதான சுமைகள் அதிகரித்துள்ளன.

கொள்ளையர்கள் முதியோர்களைக் கூட விட்டுவைக்கவில்லை. வருங்கால வைப்பு நிதிக்கு 1% வட்டியைக் குறைத்ததன் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களது சேமிப்புகளில் இருந்து வருடத்திற்கு ரூ 300 கோடியை பிழிந்தெடுக்கின்றனர். இறுதியாக ரயில்வே சரக்கு கட்டண உயர்வால் மேலும் ஒரு 600 கோடி ரூபாய் மக்களின் மீது சுமத்தப்பட்டது.

இந்த ஒட்டு மொத்த கொள்ளையையும் ஒருவர் கணக்கிட்டால் அது ரூ 20,000 கோடியை மக்களிடமிருந்து அபகரிக்கிறது. இத்தோடு இது நிறைவுறவில்லை. மக்களின் வாழ்வை பாதிக்கும் வேறு பல துறைகளும் கூட தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. உதாரணத்திற்கு மாநில அரசாங்கங்கள் விற்பனை வரியை உயர்த்தி உள்ளது. விவசாய வளர்ச்சிக்கான ஒதுக்கீடு 16% வெட்டப்பட்டுள்ளது, சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவீனம் மிகக்குறைந்த அளவில் தேங்கிக் கிடக்கின்றது. மருத்துவம் மற்றும் மனிதவள மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவீனம், புதிய ஆயுதங்களை



படிப்பகம்

www.padippakam.com

வாங்க ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை விடக் குறைவாகும். இதிலும் கொடுமை என்னவெனில் மருத்துவத்திற்கும், கல்விக்கும் என ஒதுக்கப்பட்ட குறைந்த தொகையான ரூ 400 கோடியை சென்ற (99-2000) ஆண்டில் செலவிடவில்லை. இவ்விரண்டிற்கும் சேர்த்து இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெறும் 4.5% தான். சுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.06% தான்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தின் மீது தொடுக்கப்பட்ட இந்த கொடூரத் தாக்குதல்கள் பட்ஜெட் உரையில் ஆரவார அறிக்கைகளின் மூலம் மறைக்கப்பட்டன. ஏழைகளை எட்டும் காப்பீடு, கிராமப்புற வீட்டுவசதி திட்டம், விவசாய கடன் அட்டைகள், 2001 ஆம் ஆண்டை 'பெண்கள்' மேம்பாட்டிற்கான ஆண்டாக கடைபிடிப்பது, 6 லட்சம் துப்புரவு தொழிலாளர்களை விடுவிப்பது போன்ற அறிவிப்புகள் எல்லாம் பெரும் வேடிக்கையானவை. மக்களின் கோபங்களை நீர்த்துப்போகச் செய்யும் நோக்கத்தில் அமைந்தவை.

இவற்றிற்கு எல்லாம் மேலாக், தனது ஊழியர்கள் மீது தொடர்ச்சியான ஒரு தாக்குதலை நடத்த அரசாங்கம் ஒரு திட்டத்தை வரைந்துள்ளது. செலவீனத்தை குறைப்பது என்ற பெயரில் ஊழியர்களை பெருமளவில் குறைக்கத் திட்டமிட்டுள்ளது. புதிய தேர்வுகளை நிறுத்த திட்டமிட்டுள்ளதுடன், பல துறைகளையும், நிறுவனங்களையும் கலைத்து விட முடிவு செய்துள்ளது. ஒப்பந்தக்காரர்கள் மூலமாக வேலைகளைச் செய்யவும், பயன்படுத்துவோர்களே அடக்கச் செலவை ஏற்கும் திட்டங்களையும் அறிமுகப்படுத்துகிறது. விருப்ப ஓய்வு திட்டத்தை பெரிய அளவில் செயல்படுத்த திட்டமிட்டுள்ள அதே வேளையில் தேசிய புனரமைப்பு நிதியை ஒழித்துக் கட்டியுள்ளது. தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை சொத்துக்களை விற்பதன் மூலம் செலுத்துவதாக அறிவித்துள்ளது. இந்த பட்ஜெட்டில் மட்டுமே சம்பளப் பட்டுவாடாவில் 21% குறைப்பு எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது ரூ5,586 கோடி குறையும் (1999 - 2000 ஆண்டின் ரூ 25,842 கோடியிலிருந்து 2000-01ல் ரூ 20,256 கோடியாக குறையும்).

இந்த பட்ஜெட்டின் மூலமாக நாட்டின் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்வில் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்கள் இப்படிப் பட்டவைதான். மறுபுறத்தில், இந்த பட்ஜெட் மேட்டுக் குடியினருக்கும், தொழில் வட்டாரங்களுக்கும் குறிப்பாக பலமிக்க அன்னிய நாடுகடந்த நிறுவனங்களுக்கு முக்கிய சலுகைகளை வாரி வழங்கியுள்ளது. **நிதிப்பற்றாக்குறை பற்றி கூக்குரல் இடுபவர்கள், நிதிநிறுவனங்களுக்கு வரவேண்டிய ரூ 60,000 கோடி பற்றி வாய் திறப்பதில்லை. இதை வசூலிப்பது பற்றி நினைத்துக் கூட பார்க்கவில்லை.** விவசாயிகள் சிறிய கடன்களை செலுத்தாததால், அவர்களின் உடமைகளை பறிமுதல் செய்யும் அரசாங்கம், இந்த பெரும் தரகு முதலாளிகளின் குடும்பங்களும், சில நாடு கடந்த நிறுவனங்களும் செலுத்த வேண்டிய இப்பெரும் தொகையை விட்டுவிட்டனர்.

### 'நாடுகடந்த நிறுவனங்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் திருட்டுச் செல்வம்'

மிகவும் லாபகரமான, அதீத வளர்ச்சியடைந்து வரும் தொழில்களான தகவல் தொடர்பு மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கு (ICE துறை என அழைக்கப்படுகிறது) பெருமளவில் சலுகைகளும், வரிச்சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. **தகவல் தொழில் நுட்பம் (தொலை) தொடர்பு, பொழுதுபோக்கு தொழில்கள் அனைத்தும் பலமிக்க நாடுகடந்த நிறுவனங்களோடும், உலக (ஏகாதிபத்திய) சந்தையோடும் மிகவும் நெருக்கமாக பின்னிப் பிணைந்துள்ளன. இத்தொழில்கள் இந்த பட்ஜெட்டில் அதிகபட்ச ஆதாயத்தைப் பெற்றுள்ளன.** கிளிண்டனது நிர்வாகம் தனது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு சர்வதேச சந்தைகளில் சுதந்திரமான நுழைவை அனுமதிக்க வேண்டும் என்று மிகவும் கடுமையாக கோரிக்கை விடுத்து வருவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. நமது அடிமைத்தன ஆட்சியாளர்கள் தங்களது கொள்கைகளை எஜமானர்களின் கட்டளைகளுக்கு ஏற்பவே திட்டமிடுகின்றனர். எனவே, இவர்களின் புதிய காலனிய சொல்லகராதிப் படி ஏழைகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் 'வீண் செலவீனம்' எனவும் பணக்காரர்களுக்கான மானியம் தொழில் வளர்ச்சிக்கான சரியான கால நிலையை உருவாக்க 'அவசியமானவை' எனவும் பொருள் கொள்ளப் படுகின்றன. ஒடுக்கப்பட்டவர்களை இரையாக உட்கொள்ளும் வல்லூறுகளின் தர்க்கவியல் இது தான்.

அதிகபட்சசுங்க வரியை 40%லிருந்து 35%மாக 5% குறைத்ததுடன், தகவல், தொடர்பு, பொழுது



படிப்பகம்

www.padippakam.com

போக்குதுறையின் பெரும்பாலான பொருட்களுக்கு கூடுதல் வரிக் குறைப்பையும் செய்துள்ளனர். இதன் மூலம் அன்னிய தொழில் முனைவோர்களும், இறக்குமதியாளர்களும் ரூ1,428 கோடியை ஆதாயமாகப் பெறுகின்றனர். வைரத்திற்கான சுங்கவரியை 40% லிருந்து 15% மாகவும், கச்சா பெட்ரோலுக்கு மண்ணெண்ணை போன்றவற்றிற்கு 5% சுங்கவரியை அதிகரித்துள்ளது. இது 30% லிருந்து 35%ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கு 5 வருடகால வரிவிலக்கிற்கு எதிராக தொழில் கோஷ்டிகள் பெரும் கூக்குரலிடும் அதே வேளையில், சுதந்திர வர்த்தக மண்டலங்களில் உள்ள தகவல் தொழில் நுட்ப தொழில்களுக்கு 10 வருட வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்தில் அமெரிக்காவுடனான உடன் படிக்கை படி (நிர்பந்தத்தினால்) 715 பொருட்களின் இறக்குமதிக்கு அளவுக்கட்டுப்பாட்டை நீக்கி யுள்ளது. பெரும்பாலும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களை உள்ளடக்கிய இப்பொருட்களின் இறக்குமதியானது குறிப்பாக சிறு தொழில்களையும், விவசாயத்தையும் பாதிக்கும். இப்பொருட்கள் மீதான சுங்கவரியை அதிகபட்சமான 35% வரியிலிருந்து 25%மாகக் குறைத்துள்ளது. இறக்குமதிப் பெருக்கு ஏற்பட வழிவகை செய்துள்ளது.

முதலீடுகள் துறையில், அடுத்தடுத்த கொள்கை மாற்றங்கள் செய்ததனால், இந்திய பொருளியலில் அன்னிய மூலதனம் அதிக அளவில் ஊடுருவல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

- இந்திய நிறுவனங்களில் அன்னிய நிறுவன முதலீடுகளின் பங்கை 30% லிருந்து 40% மாக உயர்த்திஉள்ளதால், இந்திய பங்குச் சந்தையில் ஏற்கனவே இருந்துவரும் அன்னிய நிறுவன முதலீடுகளின் இரும்புப் பிடியை மேலும் இறுகச் செய்யும்.
- வர்த்தகத்தில் 'எதிர்கால' வர்த்தக ஒப்பந்தத்தை 30 வருட காலத்திற்கு தடை செய்திருந்ததை நீக்கியதன் மூலம் நிதித்துறையை சர்வதேச ஊக வணிகர்களுக்கு மேலும் அகலத் திறந்து விட்டுள்ளது.
- இந்திய நிறுவனங்களை நாடுகடந்த நிறுவனங் களின் கொடுக்குக் கரங்களின் பிடியில் மேலும் இறுகச் செய்ய மூன்று முக்கிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. (1) வெளிநாடு களுக்கு நேரடியான வழியில் (automatic route) முதலீடுகள் செல்லுவதற்கு இருந்த முதலீட்டுக் கட்டுப்பாட்டை 15 மில்லியன் டாலரிலிருந்து 50 மில்லியன் டாலராக உயர்த்தி உள்ளது. (2) தொழில் முனைவு மூலதன நிதிக்கு முக்கிய வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. (3) கைப்பற்றப்படும் நிறுவனத்தின் முந்தைய எல்லா இழப்புகளையும் நடப்பு கணக்கில் கொண்டுவருவதற்கு அனுமதி அளித்ததன் மூலம் இணைப்புகள் மற்றும் கையகப் படுத்துதல்களை மேலும் ஊக்குவித்துள்ளது.
- இந்திய பொதுத்துறை நிறுவனங்களை அன் னிய மூலதனம் கைப்பற்றிக் கொள்ள வழிவகை செய்யும் விதத்தில் முக்கிய தனியார் மயமாக்க திட்டங்களை இந்த பட்ஜெட் வரைந்துள்ளது.

(1) அரசாங்க பங்கை 26% மாக குறைத்து ள்ளது.

(2) ரூ 10,000 கோடி மதிப்பிலான பங்குகளை தனியார்மயமாக்க திட்டமிட்டுள்ளது.

(3) தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளை தனியார் மயமாக்குகிறது. இவ் வங்கி களின் பங்கை 51%லிருந்து 33%மாக குறைக்க திட்டமிட்டுள்ளது. இயக்குனர் அவைகளை மறுகட்டமைப்பு செய்யவும் அதிக தன்னாட்சியை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

(4) மாநில மின் வாரியங்களை விற்பனை செய்வதை ஊக்குவிக்க இந்த பட்ஜெட் ரூ1,000 கோடி ஒதுக்கியுள்ளது. இத் தொகை மாநில மின்வாரியங்களில் பெரும் பங்குகளை வாங்கிக் குவிக்க தனியார் துறைக்கு வழங்கப்படும் மா பெரும் பரிசுத் தொகையாகும்.

- தகவல் தொழில்நுட்ப துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு ரூ 100 கோடி வழங்கப் பட்டுள்ளது. காப்புரிமை அலுவலகத்தை நவீனப்படுத்த ரூ 75 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- இதுமட்டுமன்றி பெரும் தொழில்களுக்கு பிற சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த பட்ச மாற்று வரி (நிறுவன வரியை செலுத்தா தவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி) 10.5%லிருந்து 7.5%மாக குறைக்கப்பட்டுள்ளது.
- கட்டுமானத் துறையின் கும்பல்களுக்கு எண்ணற்ற வரிச்சலுகைகள்


படிப்பகம்

www.padippakam.com

- கப்பல் தொழிலின் நவீனமாக்கலுக்கு, அதன் லாபத்திற்கு 100% வரிவிலக்கு.

பணம் இல்லாததால், ஊழியர்களை குறைக்க வேண்டும், மானியத்தை அவசியம் வெட்டிவிட வேண்டும் என அரசாங்கம் கூக்குரலிடும் அதே வேளையில் நாடுகடந்த நிறுவனங்களுக்கும் பெரும் தரகு முதலாளிய குழுமங்களுக்கும் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களை வரிச்சலுகைகளாக அரசாங்கம் வழங்கியுள்ளது.

## திவால் நிலையும், நாட்டிற்கு செய்யும் துரோகமும்

'சுதந்திர சந்தையில்' ஒரு நிறுவனம் திவாலாகிறது என்றால் மற்றொரு நிறுவனத்தால் விழுங்கப்பட்டது என்பதேயாகும். 'உலகமயமாக்கப்பட்ட சந்தையில்' நாடுகள் திவாலாகின்றன என்றால் அவை அன்னிய நிதி மூலதனத்திற்கு எளிதில் இரையாகிவிட்டன என்பது தான். இந்திய அரசாங்கம் 1999-2000 ஆண்டின் தனது பொருளியல் ஆய்வறிக்கையில் இதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கை இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முந்தைய தினத்தில் வெளியிடப்பட்டது.

இந்த நலிந்த நிலை பொதுப் பொருளியலிலும், அரசாங்கத்தின் நிதி நிலையிலும் காணப்படுகிறது. **ஏறத்தாழ இந்த பத்தாண்டு கால பொருளியல் சீர்திருத்தங்களினால் விவசாயம் அழிந்துள்ளது. உள்நாட்டு தொழில்துறையை தேக்கத்தை ஒத்த நிலைக்கும் அரசாங்கத்தை திவால் நிலைக்கும் கொண்டு வந்துள்ளது.**

முதலாவதாக, ஊதிப்பெருகும் பங்குச் சந்தையை ஆரோக்கியமான வளர்ச்சிக்கான ஒரு அடையாளம் என போற்றிப் புகழ்ந்திட செய்தி ஊடகங்கள் விரும்புகின்றன. இது உண்மையிலிருந்து வெகுதொலைவில் உள்ளது. இரண்டாம் பட்ச சந்தையில் (பங்குச் சந்தைகளில் பங்குகள் வாங்கி, விற்கப்படுதல்) தற்போது காணப்படும் அதீத வளர்ச்சி என்பது அன்னிய மூலதனத்தால் ஊதிப் பெருக்கப்பட்ட ஒரு ஊகவணிக நீர் குமிழ் போன்றதாகும். இந்நிதியை வாபஸ் பெற்றவுடனேயே (தென் கிழக்கு ஆசியாவில் நிகழ்ந்ததைப் போல) இந்த நீர்குமிழ் வெடித்து விடும்.

உண்மையான சொத்துக்களை தோற்றுவிக்கின்ற (தேசிய செல்வம் அல்ல) உண்மையான மூலதன உருவாக்கத்தை (தற்போது போலியாக விளக்கமளிக்கப்பட்டு முன்வைக்கப்படும் சந்தையை மூலதனமாக்கம் அல்லாத) நாம் பார்ப்போமெனில் நிலைமை மிகவும் இன்னலான நிலையில் உள்ளது. முதலில், முதன்மைச் சந்தையை (பங்குச் சந்தைகளில் அறிமுகப்படுத்தப்படும் புதிய மூலதன வெளியீடுகள்) எடுத்துக் கொண்டால் அதில் மிகப்பெரும் சரிவைக் காணலாம். 1994-95ன் ரூ 26,417 கோடியிலிருந்து 1999-2000த்தில் வெறும் ரூ4180 கோடியே வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மொத்த உள்நாட்டு சேமிப்பை எடுத்துக் கொள்வோம் (தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் சேமிப்புகள்). இது தான் மூலதனத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. இது ஒருவருடத்தில் மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4% வீழ்ந்துள்ளது. அதாவது 1997-98ன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24.7% லிருந்து 1998/99ல் 22.3% மாக குறைந்துவிட்டது. மூன்றாவதாக, அரசாங்கத்தின் மொத்த செலவீனத்திலிருந்து மூலதன செலவீனத்தின் பங்கு 1985-86ன் 40% லிருந்து இன்று வெறும் 16.7%மாக வீழ்ந்துவிட்டது. மூலதன உருவாக்கத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய மாபெரும் வீழ்ச்சி பொருளியல் தேக்கத்தின் ஆழத்தைக் காட்டுகின்றன. நாட்டில் நுழைகின்ற அன்னிய மூலதனத்தில் பெரும் பகுதி இருந்துவரும் நிறுவனங்களை வாங்குவதற்காகவோ (அன்னிய நேரடிமுதலீடுகள்) பிற நிறுவனங்களின் மூலதனப்பங்கை வாங்குவதற்காகவோ (அன்னிய நிறுவனமுதலீடுகள்) செல்லுகின்றன. அது மட்டுமின்றி, இவை தமது நாட்டில் முதலீடு செய்த தொகைகளை விட பத்து மடங்கு அதிகமான தொகையை நமது நாட்டில் இருந்து அள்ளிச் சென்று விடும். அரசாங்கத்தின் 1999-2000க்கான 'பொருளியல் ஆய்வு' தொழில்துறை வளர்ச்சி வெறும் 6.2% எனக் காட்டியுள்ளதில் எந்த அய்யமும் இல்லை (மூன்று வருட கால தேக்கத்திற்கு பின்னர்) அதுவும் சீர்திருத்த கால வருடங்களுக்கு முந்தைய சராசரி வளர்ச்சி விகிதத்திற்கும் குறைவான வளர்ச்சியையே எட்டியுள்ளது. அத்துடன் விவசாய உற்பத்தியில் 2.2% வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

இப்போது, நாம் அரசாங்கத்தின் நிதி நிலையைக் காண்போம். 1991-92ல் திவால் நிலையை தவிர்க்க இதே யஸ்வந்த் சின்ஹா நாட்டின் தங்கத்தை அடமானம் வைத்ததிலிருந்து இதன் உண்மையை புரிந்து கொள்ள முடியும். அப்போது நிதிப் பற்றாக்குறை (மத்திய மாநில அரசுகளது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.1% மாக இருந்தது இது 2000-2001ல் 10% எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பொருள் என்ன? அரசாங்


படிப்பகம்

www.padippakam.com

கங்களின் செலவீனம், அதன் வருவாய்களை விட மிக்ப்பெரும் தொகையான ரூ1,85,000 கோடி அதிகம் என்பதாகும். மத்திய அரசாங்கத்தின் தற்போதைய பட்ஜெட்டை மட்டுமே எடுத்துக் கொண்டால் எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறை ரூ1,11,275 கோடியாக இருக்கும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.6% ஆகும்.

தனது செலவிற்காக தேவைப்படுகின்ற பணத்திற்கு அரசாங்கம் தற்போது என்ன செய்யப் போகிறது? கடன் மூலமாகத் தான் ஈடுகட்டப் போகிறது என்பது மிகவும் இயல்பானதே. கடன் சந்தையில் கடன்வாங்குவதற்கு வட்டி செலுத்த வேண்டும், இந்த கடன்-வட்டி சுழற்சி மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டே இருப்பதால் பொருளியல் கடன் பொறியில் சிக்கிவிடும். இன்று உண்மையில் இது தான் நிகழ்ந்துள்ளது.

தற்போதைய பட்ஜெட்டில் நிலைமை இன்னமும் மோசமடைந்து உள்ளது. அன்றாட வருவாய் செலவீனம் கூட வருவாயை விட ரூ 77,425 கோடி அதிகச் செல்வு என்று பெருமளவில் அதிகரித்துள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதெனில் அரசாங்கம் தனது மூலதன செலவுத் தேவைகளை ஈடு செய்வதற்காக கடன் வாங்க வேண்டியிருப்பது மட்டுமன்றி (புதிய வருவாயை உருவாக்குவதால் இது சரியாகக் கூட இருப்பினும்) தனது அன்றாடத் தேவைகளை சரிகட்டக் கூட கடனைச் சார்ந்துள்ளது. இதைவிட மிகவும் மோசமானது என்னவெனில், பொதுக்கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) ஊதிப்பெருத்து ரூ 13 லட்சம் கோடிகளை எட்டியிருப்பதால், வட்டி செலுத்துதல்கள் நிர்வகிக்கமுடியாத நிலையை எட்டியுள்ளது. இன்று வட்டிக்காக செலுத்தப்படும் தொகைதான் அரசாங்க செலவீனத்தில் ஒரே மிகப்பெரிய தொகையாக இருக்கிறது. இது அதன் வருவாயில் ஏறத்தாழ பாதியாக உள்ளது. உண்மையில், தற்போதைய பட்ஜெட்டில் வட்டி செலுத்துதல்கள் ரூ 1,17,000 கோடியாக உள்ளது. இது சென்ற ஆண்டை விட 40% அதிகரிப்பாகும். இது ஒரு கொடூர புதை குழியாகும். அரசாங்கத்தை உறிஞ்சி, மீண்டுவரமுடியாத திவால் நிலைக்கு இட்டுச் செல்லும் சுழல் ஆகும். ஏற்கனவே அது புதைகுழியில் கழுத்தளவு மூழ்கியுள்ளது.

பொருளியலின் நிதிநிலை இத்தகைய மோசமான நிலையில் இருக்கையில் அன்னியச் செலாவணி பற்றாக்குறை நிலை (அன்னியச் செலாவணி வருவாய்க்கும் செலவுகளுக்கும் இடையிலான் கையிருப்பு) இன்னும் மோசமான நிலையில் உள்ளது. வர்த்தக பற்றாக் குறை (ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகளுக்கு இடையே உள்ள வித்தியாசம்) ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே செல்கிறது. எண்ணை இறக்குமதி விலையில் ஏற்பட்டுள்ள பெரும் அதிகரிப்பின் காரணமாக இந்த வருடத்திய வர்த்தக பற்றாக்குறை 20 பில்லியன் டாலர் என்ற அளவையும் தாண்டிவிடும். இதன் பொருள் என்ன? ஏற்றுமதியிலிருந்து நாம் சம்பாதிக்கும் தொகையை விட 20 பில்லியன் டாலர் தொகையை நாம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்பதாகும். இப்பெரும் தொகை எங்கிருந்து வரமுடியும்? அதிர்ஷ்டவசமாக, அயல்நாடுகளில் வேலை செய்கின்ற இந்தியர்கள் தங்களது சேமிப்புகளில் ஒரு பகுதியை நமது நாட்டிற்கு அனுப்புவதன் மூலமாக ஒரு 10 பில்லியன் டாலர் கிடைக்கிறது. மற்றும் ஒரு சில பில்லியன் டாலர்கள் 'புலப்படா' சம்பாத்தியங்களின் மூலமாகக் கிடைக்கிறது. இருப்பினும், சுமார் 7 முதல் 8 பில்லியன் டாலர் பற்றாக்குறை இருக்கும். இந்த நடப்பு கணக்கு பற்றாக்குறை சென்ற வருடத்திலிருந்து ஏறத்தாழ இருமடங்காகியுள்ளது. 1998-99ன் மொ.உ.உற்பத்தியில் 1% என்பதிலிருந்து 1999-2000த்தில் 1.8%மாக அதிகரித்துள்ளது. இறுதியாக, இந்த 7-8 பில்லியன் டாலர் பற்றாக்குறையானது அன்னிய முதலீடுகளின் வரத்தின் மூலமாக ஈடுகட்டப்படுகிறது (அதாவது, அன்னிய நேரடி முதலீடுகள், அயல்நாட்டு நிறுவன முதலீடுகள் மற்றும் அயல் நாடுவாழ் இந்தியர்களின் வைப்புத் தொகைகள் மூலமாக). இதிலும் கூட அரசாங்கம் தனது அன்றாட வர்த்தக செலவுகளுக்காக அயல் நாடுகளில் இருந்து வரும் மூலதன முதலீடுகளையே சார்ந்து உள்ளது. நாளை இந்த அயல்நாட்டு திமிங்கலங்கள் தங்களது ஓட்டத்தை வேறு திசைக்கு திருப்பிவிட்டால், அது அன்னியச் செலாவணி நெருக்கடியை தோற்றுவிக்கும். டாலருக்காக ஓடவேண்டிய நிலை ஏற்படும், அன்னிய செலாவணி கையிருப்பு ஆவியாக மறைந்துவிடும். அரசாங்கம் தனது அன்னிய கடன்களுக்கு வட்டி செலுத்துவதில் தவறிவிடும். இது தான் தென் கிழக்கு ஆசியாவில் நிகழ்ந்தது. இது போன்ற மிகப்பெரிய நடப்பு கணக்கு பற்றாக்குறையில் இந்திய அரசாங்கம் ஏகாதிபத்தியங்களின் கருணையில் இருக்க வேண்டியதிருக்கும். ஏகாதிபத்தியவாதிகள் விரும்பும் போதெல்லாம் இது போன்ற ஒரு அன்னியச் செலாவணி நெருக்கடியைத் தோற்றுவிக்க முடியும்.


படிப்பகம்

www.padippakam.com

எனவே, ஒருவர் இந்த பொருளியலை எவ்வகையில் நோக்கினாலும் அது நெருக்கடியில் சிக்கியிருப்பதைக் காணமுடியும். ஏகாதிபத்தியங்களுக்காக இந்தியாவின் தரகு ஆட்சியாளர்களால் 'பொருளியல் சீர்திருத்தங்கள்' மூலமாக வேண்டுமென்று உருவாக்கப்பட்டுள்ள ஒரு நெருக்கடி தான் இது. இந்நெருக்கடியின் மூலமாக இந்திய ஆளும் வர்க்கங்கள் ஒரு சில எலும்புத்துண்டுகளுக்காக, இந்திய மக்களை ஏகாதிபத்திய ஆக்டோபசின் கொடுக்குக் கரங்களுக்குள் ஆழமாகச் சிக்கச் செய்கிறது. ஏகாதிபத்திய வாதிகளால் கட்டளையிடப்படும் நெருக்கடியில் பொருளியல் எப்படி இருக்கும் என்பதை இந்த பட்ஜெட்டில் நாம் மிகத் தெளிவாகக் காணலாம். மக்கள் திரளினர் மீது கடுமையான வரிவிதிப்பையும், பொருளியலில் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தில் உள்ள துறைகளுக்கு முக்கிய சலுகைகளையும் இந்த பட்ஜெட் வழங்குகின்றது. வறுமைக்கும், செல்வச் செழிப்பிற்கும் இடையே இதனால் உருவாக்கப்படும் இடைவெளியின் காரணமாக தவிர்க்க முடியாமல் தோன்றும் வர்க்க மோதல்களை எதிர்கொள்ள அரசு இயந்திரத்தை தயாரிப்பதாகவும் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

இந்த பட்ஜெட் பிஜேபி தலைமையிலான அரசாங்கத்தின் மக்கள் விரோத, துரோகத் தன்மையை மட்டும் தெளிவாக வெளிக்கொணரவில்லை. அதன் பாசிச திட்டங்களையும் கூட வெளிக்கொணர்ந்துள்ளது. ஒருபுறம் இந்த பட்ஜெட்டின் மூலம் அரசாங்கம் ஏற்கனவே கதியற்ற நிலையில் வாழும் மக்கள் திரளினரை வறுமையின் பிடியில் மேலும் ஆழமாகத் தள்ளியுள்ளது. மறுபுறத்தில், இக்கொள்கைகளுக்கு வரும் எந்தவித எதிர்ப்பையும் கொடூரமாக நசுக்க தன்னை தலை முதல் பாதம் வரை ஆயுதபாணியாக்கிக் கொண்டுள்ளது.

மக்கள் இதை 'எப்படி எதிர்த்துப் போராடுவது? இந்த துரோகத்தனமான கொள்கைகளையும், பாசிச தாக்குதல்களையும் அவர்கள் எவ்வாறு தடுக்க முடியும்? நிச்சயமாக சமாதானபூர்வ, நாடாளுமன்ற வழிமுறைகளின் மூலம் அல்ல. எல்லா நாடாளுமன்ற கட்சிகளும் உண்மையில் இக்கொள்கைகளின் கட்சியாகவே இருக்கின்றன. புரட்சிகர சக்தி மட்டுமே இத்தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்க முடியும்.

## அடக்குமுறை தகர்த்தெறியும் போராளிகள் மக்களே!

1999 டிசம்பரில் நடந்த பஸ் எரிப்பை காரணம் காட்டி மதிகோன் பாளையம் போலீஸ் வழக்கமாக செய்வது போல் அப்பாவி மக்களை பிடித்து வழக்கு போடுவதற்காக கொளகத்தூர் சென்று சுமார் 10 பேரை பிடித்து வந்து காவல் நிலையத்தில் வைத்துக் கொண்டனர். பொதுவாக மக்களுக்கு இரவு நடந்த பஸ் எரிப்பு சம்பவம் தெரிந்திருந்தும் அப்பாவிகளை பிடிக்கிறார்களே என ஆண்கள், பெண்கள், முதியோர் என அனைவரும் வெகுண்டெழுந்து பல வாகனங்களில் சென்று மதிகோன் பாளையம் காவல் நிலையத்தை முற்றுகை இட்டனர். அங்குள்ள போலீஸிடம் வாதாடி "இப்போது அவர்களை விட்டே தீரவேண்டும்" என போராடி கைதுசெய்யப்பட்ட அனைவரையும் மீட்டு வந்தனர்.

இதே போல நாய்க்கன் கொட்டாய் நத்தம் கிராமத்திற்கு நினைக்கும்போதெல்லாம் செல்வது, மிரட்டுவது, மக்களை காவல் நிலையம் கூட்டிச் செல்வது என்ற நடைமுறையை போலீஸ் கையாண்டுக்கொண்டிருந்தது. சம்பவத்தன்று கிராமத்திற்குள் சென்று ஒரு இளைஞனை பிடித்து மிரட்டி ஜீப்பில் ஏற்றினார்கள். போலீஸ் வந்தாலே ஓடி ஒளியும் மக்கள் "குட்டக் குட்ட குனியும் நேரம் இது அல்ல" என்பதை உணர்ந்து வெகுண்டெழுந்து " ஏன் பிடிக்கிறாய்" என்று கேட்டனர். போலீஸ் கோபமாகவே பதில் கூறவே ஜீப்பின் முன்னும் பின்னும் சுமார் 30 பெண்கள் "நீ எப்படி போகிறாய் என பார்ப்போம்" எனக் கூறி படுத்துவிட்டனர். போலீஸ் மன்றாடியும் ஜீப்பை போக விடவில்லை. கடைசியாக போலீஸ் அவ்விளைஞனை விட்டப்பிறகு தான் ஜீப்பை போக விட்டனர் மக்கள்.

"மக்களே வரலாற்று நாயகர்கள்" "அடக்கு முறை தகர்த்தெறியும் போராளிகள் மக்களே" என்ற அரிய உண்மைகளை மேற்கண்ட போராட்டங்கள் மீண்டும் ஒரு முறை நடைமுறையில் நிரூபித்துக்காட்டியுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் யுத்த கெரில்லாக்கள் 40 காவல் துறையினரை அழித்தொழித்து, பெரும் அளவிலான ஆயுதங்களை கைப்பற்றினர் !!

**(பல்வேறு மாநில செய்தி தொடர்பாளர்கள் மூலம் தொகுக்கப்பட்ட அறிக்கை)**

2000 பிப்ரவரி மாதத்தில் தென் இந்தியாவின் ஆந்திராவிலும், மத்திய இந்தியாவின் மத்திய பிரதேசத்திலும், வட இந்தியாவின் பீகாரிலும் நடத்தப்பட்ட செயல் உத்தி ரீதியான தாக்குதல்களில் மக்கள் யுத்த கெரில்லாக்கள் 40 காவல் துறையினரை அழித்தொழித்ததுடன் பெரும் அளவிலான நவீன ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் எதிரி யிடமிருந்து பறித்தனர். எதிரியை திடுக்கிடச் செய்துள்ள இந்த ஆயுத நடவடிக்கைகள் கடந்த இரு மாதங்களாக தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகிய மூன்று தலைமை தோழர்களை இழந்ததன் மூலம் இ.க.க. (மா-லெ) (மயு) விற்கு கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் பெரிய தாக்குதல் எதுவும் தொடுக்க அதனால் இயலாது எனவும் இந்திய ஆளும் வர்க்கங்கள் பரப்பி வந்த பொய்யை தகர்த்தெறிந்துள்ளன.

பிப்ரவரி 18 அன்று விசாகப்பட்டிணம் மாவட்டம் குதெம்கொத்தா வீதி மண்டல், தரக் கொண்டா கிராமத்தில் உள்ள ஆந்திர சிறப்பு காவல் படையின் புறக்காவல் நிலைய முகாம் மீது கெரில்லாக்கள் துணிச்சலான தாக்குதல் நடத்தி, உதவி ஆய்வாளர், இரு தலைமை காவலர்கள் உட்பட ஆந்திர சிறப்பு காவல் படையின் 5 வது பட்டாலியனைச் சேர்ந்த 7 காவல் துறையினரை அழித்தொழித்தனர். இக்கெரில்லா தாக்குதலில் குறைந்தது மேலும் ஒன்பது காவல் துறையினர் காயமடைந்தனர். பெரும் அளவிலான நவீன ஆயுத குவிப்பானது - 24 எஸ்.எல். ஆர்.ரக துப்பாக்கி, ஒரு ஏ.கே. 47 துப்பாக்கி, மூன்று ஸ்டென்கன் மற்றும் பெரும் அளவிலான வெடி பொருட்கள் - எதிரி படையிடமிருந்து பறிக்கப்பட்டது. இதுநாள் வரையிலும் நடத்தப்பட்ட ஆயுத பறிப்புகளில் இதுவே பெரியதாகும். இரவு 7 மணி முதல் 10 மணி வரை ஏறத்தாழ மூன்று மணிநேரம் நடந்த துப்பாக்கி சண்டையில் இரு கெரில்லாக்கள் தோழர் நவீன் என்ற பாலகிருஷ்ணா, தோழர் சத்ய நாராயணா என்ற ஸ்ரீதர் - தியாகிகளானர். தோழர். நவீன் அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் முன்னாள் மாணவர் தலைவராவார். மேலும் அவர் கட்சியின் இராணுவ இதழான 'ஜங்' - இன் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் இருந்து வந்தார். தோழர். சத்யநாராயணா கிழக்கு டிவிஷனில் உள்ள சிறப்பு கெரில்லா குழுவின் துணை கமாண்டர் ஆவார். இந்த இழப்புகள் ஏற்பட்டாலும், கெரில்லாக்கள் மிகுந்த உறுதியுடன் சிறப்பு காவல் படை முகாமை அழித்து திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினர். தாக்குதல் நடவடிக்கைக்கு பின்னர் கெரில்லாக்கள் கிராமத்தின் ஊடாக புரட்சிகர பாடல்களை முழங்கியபடி அணிவகுத்துச் சென்றனர்.

இந்த மொத்த நடவடிக்கையும் அதிக கவனத்துடன் திட்டமிடப்பட்டு வடஆந்திராவின் கிழக்கு டிவிஷனைச் சார்ந்த ஆயுத கெரில்லா குழுக்களால் நிறைவேற்றப்பட்டது. தாக்குதலானது காவல் துறையினர் இரவு உணவுக்கு சென்று கொண் டிருந்தபோது துவங்கியது. கெரில்லாக்கள் அருகில் இருந்த கட்டிடத்தின் கூரையில் ஏறி ஒலி பெருக்கி மூலம் காவல் துறையினரை சரணடையும் படி கூறினர். ஆனால் அவர்கள் சரணடைய மறுத்ததால், பெட்ரோல் குண்டுகள் மற்றும் புகை குண்டுகளை காவல் துறையினர் மீது வீசி அவர்கள் மத்தியில் குழப்பத்தையும், பீதியையும் உண்டு பண்ணினர். கெரில்லாக்களின் ஒரு பிரிவு முகாமைத் தாக்கிக் கொண்டிருந்த வேளையில், இருபிரிவுகள், கிராமத்திற்கு கூடுதல் படைபிரிவுகள் வந்துவிடாமல் தடுப்பதற்காக, தரக்கொண்டாவிற்கு இட்டுச் செல்லும் இரு சாலைகளையும் கண்காணித்து நின்றன. காப்பாற்றுவதற்கு வந்த இரு குழுக் களோடு, சிலெரு - தரகொண்டாசாலையில் உள்ள துப்பலபாடு கிராமத்திலும், ஜி.கே. வீதி - தர கொண்டா சாலையில் உள்ள லங்கபக்லா அருகிலும் நடைபெற்ற துப்பாக்கி சண்டையில் மூன்று காவல் துறையினர் காயமடைந்தனர். கெரில்லாக்களுடன் ஆயுத மோதல் ஏற்பட்ட பின்னர் காப்பாற்ற வந்த குழுக்கள் இடத்தை விட்டு ஓடி விட்டன. மறுநாள் காலையில் தான் கூடுதல் படைகள் கிராமத்தை அடையமுடிந்தது. இரவு முழுவதும் காயமுற்ற காவல் துறையினர் முகாமிலேயே கிடந்தனர். கிராம மக்கள் அவர்களுக்கு ஒரு கிளாஸ் தண்ணீர் கூட தர மறுத்து விட்டனர். மக்களுக்கு எதிரான அட்டு ழியங்களுக்கு பேர்போன அரசு கூலிப்படைகள்



படிப்பகம்

www.padippakam.com

மீதான தங்கள்து வெறுப்பை மக்கள் இவ்வாறு வெளிப்படுத்தினர்.

99, டிசம்பர் 2 அன்று மூன்று மையகுழு உறுப்பினர்கள் தியாகிகளான பின்னர் மக்கள் யுத்தமானது நசுக்கப்பட்டுவிட்டதாக ஊளையிட்டுக் கொண்டிருந்த உலக வங்கி அடிவருடி சந்திரபாபு நாயுடுவின் தெலுங்குதேச பாசிச ஆட்சிக்கு தர கொண்டா காவல்துறை முகாம் மீதான கெரில்லா தாக்குதல் சரியான பதிலடியாகும்.

இதற்கு இருநாட்களுக்கு பின்னர் பிப்ரவரி 20 அன்று மத்திய இந்தியாவின் தண்டகாரண்யாவில் நடைபெற்ற மற்றொரு பெரிய கெரில்லா தாக்குதலில், மக்கள் யுத்த கெரில்லாக்கள் வைத்த கண்ணிவெடியில் 23 காவல்துறையினர் அழித் தொழிக்கப்பட்டனர். இறந்தவர்களில் ஒரு காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு துணை உதவி ஆய்வாளர், இரு தலைமை காவலர்கள் மற்றும் 18 காவலர்கள் உள்ளடங்குவர். தாக்குதலானது மத்திய பிரதேசத்தின் பஸ்தார் மாவட்டம், நாராயண்பூர் நகரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுல்வாடி அருகில் நடைபெற்றது. இந்தியாவில் இது நாள் வரையில் புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றில் இதுவே மிகப் பெரிய தாக்குதல் சம்பவமாகும். இத்துடன் மத்திய பிரதேசத்தில் 1991 முதல் கெரில்லாக்களால் அழித்தொழிக்கப்பட்ட காவல் துறையினரின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும்.

எதிரிப்படையை காட்டின் உட்பகுதிக்கு வரச் செய்வதற்கு வலைவிரிக்கப்பட்டு, தாக்குதல் தெளிவாக திட்டமிடப்பட்டது. பகுல்வாடி பகுதியில் நக்சலைட்டுகள் முகாமிட்டிருப்பதாக காவல்துறைக்கு தகவல் அனுப்பப்பட்டது. இத்தகவலின் அடிப்படையில், காவல்துறையினர், பிறர் கவனத்தை ஈர்க்காமல் தவிர்ப்பதற்காக தனியார் மெட்டடார் வேன் ஒன்றை ஏற்பாடு செய்து வந்தனர். நக்சலைட்டுகள் முகாமிட்டிருந்ததாக கூறப் பட்டிருந்த இடத்திற்கு அருகில் அவர்கள் வந்து கொண்டிருந்த பொழுது, கெரில்லாக்கள் கண்ணி வெடியை வெடிக்கச் செய்ததில் 22 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். இருவர் காயமுற்றனர். அவர்களில் ஒருவன் மருத்துவ மனையில் இறந்தான். மேலும் பல ஆயுதங்களுடன் குறைந்தது 11 எஸ்.எல்.ஆர் ரக துப்பாக்கிகள் கெரில்லாக்களால் பறிக்கப்பட்டன. இத்தாக்குதலானது, மத்திய பிர தேசம், பஸ்தார், தண்டெவாடா, கான்கெர் மாவட்டங்களில் சில கெரில்லாக்களின் மரணத் திற்கும், பல கைதுகளுக்கும் இட்டுச் சென்ற காவல் துறையின் தொடர் தாக்குதலுக்கு எதிர் நடவடிக் கையாகும்.

இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக, பிப்ரவரி 12. அன்று, மாநில சட்டசபை தேர்தலின் முதல் கட்டத்தின் போது, பீகார், பலாமு மாவட்டத்தில் கெரில்லாக்களின் கண்ணிவெடி தாக்குதலில் ஆறு மத்திய சேம படையினர் அழித்தொழிக்கப்பட்டனர்.

பிப்ரவரி 8 அன்று வட தெலுங்கானாவின் கம்மம் மாவட்டம், கரெபள்ளியில் தாக்குதலை தடுக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள காவல் நிலையத்தின் மீது மக்கள் யுத்த கெரில்லாக்கள் தாக்குதல் தொடுத்தனர். ஆனால் சில செயல் நுட்ப குறைபாடுகளால், அது தகர்க்கப்பட முடியவில்லை. அதற்கு அடுத்த நாள் அக்காவல் நிலையம் திறக்கப்பட இருந்தது.

ஜனவரி 11 அன்று, வடதெலுங்கானா அடிலா பாத் மாவட்டம், கக்காஸ் நகர் என்ற நகரில் நடுநிசியில் காவல்துறை உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் டைனமைட் கொண்டு தகர்க்கப்பட்டு காவலில் இருந்த இரு காவலர்கள் கொல்லப் பட்டனர்.

பிப்ரவரியில் வடதெலுங்கானாவில் இரு வெவ்வேறு சம்பவங்களில் மேலும் இரு காவலர்கள் கொல்லப்பட்டனர்.

மக்கள் யுத்தக் கட்சியின் இத்தகைய தீரமான செயல் உத்தி ரீதியான தாக்குதல்கள் இந்தியா முழுவதுமுள்ள புரட்சிகர மக்களை உற்சாக மூட்டியதுள்ளதுடன், இந்திய தரகு ஆளும் வர்க்கங் களால் அமைக்கப்பட்டுள்ள கூட்டு ஒருங்கிணைப்பு மையங்களாலோ, திரைமறைவு போர்களாலோ மக்கள் யுத்தத்தின் முன்னோக்கிய அணி வகுப்பைத் தடுத்து நிறுத்தி விட முடியாது என்பதை நிரூபித்துள்ளன.

**இந்த இதழில். . .**

☛ கம்யூனிஸ்ட் அறிக்கையின் 150 வது ஆண்டு நினைவு குறித்த கட்டுரையின் இரண்டாம் பாகம் இவ்விதழிலும் தவிர்க்க இயலாத காரணத்தால் வெளியிட இயலவில்லை. வரும் இதழில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

☛ சென்ற இதழில் நக்சல்பாரி – வரலாற்று நிகழ்வுகள் தொடர்கட்டுரையில் விடுபட்டிருந்த தோழர் தமிழரசனின் தேசியவாத நிலைபாடு குறித்த கண்ணோட்ட இவ்விதழில் சேர்க்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# நக்சல்பாரி புரட்சியாளர் இரவீந்தர் படுகொலையும், புதிய ஜனநாயகத்தின் புரட்டல்வாதமும்!

பிப் - 16 - 21 (2000) புதிய ஜனநாயகம் இதழில் தோழர் இரவீந்திரனின் படுகொலைபற்றி கட்டுரை வெளியிட்டுள்ளது. இக்கட்டுரையின் முதல் சில பத்திகளில், காவல்துறை மற்றும் பத்திரிக்கைகளின் அவதூறுகள் மற்றும் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பதில் தருகிறது. ஆனால், அதே சமயத்தில், அதற்கு அடுத்த பத்திகளில் தருமபுரியில் புரட்சிகர இயக் கத்தைப் பற்றியும் அதன் நடைமுறை மற்றும் கடந்த கால வரலாறுகளைப் பற்றியும் பொய்களையும், வரலாற்று புரட்டுகளையும் கூறியுள்ளது.

இவற்றிற்கு பதிலாக உண்மைகளையும், உண்மையான வரலாற்றையும் முதலில் பார்ப் போம். புதிய ஜனநாயகத்தின் புரட்டல் வாதத்திற் கான காரணங்களை அடுத்து பார்ப்போம்.

அக்கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப் பிட்டுள்ளனர்.

"இரவீந்திரனும், அவர் சார்ந்த உழவர் உழைப் பாளர் மாமன்றமும் ஆங்காங்கே துண்டு துண்டாக பொதுவான அரசியல் பிரச்சாரப் பணிகளைச் செய்து வந்த போதே, ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் மக்கள் போர் குழுவினர் கெரில்லா படைகளை அமைத்துச் செயல்பட்டு வருவதைப் போல, தருமபுரி பகுதியை மாற்றிவிட வேண்டும் என்றும் விரும்பினர்.

ஆந்திராவின் தெலுங்கானா பகுதி, கம்யூ னிஸ்டுகளின் தலைமையில் வீரஞ்செறிந்த ஆயுதப் போராட்டங்களை நடத்திய வரலாற்றுப் பாரம் பரியம் கொண்டது. தெலுங்கானா போராட்டத் தையும், சிரிகாகுளம் உழவர் எழுச்சியையும் அரசு ஒடுக்கிவிட்ட போதிலும், தெலுங்கானா பகுதியில் மலை வாழ் மக்களும், கிராமப்புற ஏழை விவசாயிகளும் நக்சல்பாரி இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்து வருகின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நக்சல்பாரி இயக்கம் தருமபுரி பகுதியில் செல்வாக்குடன் இருப்பதாகக் கூறப்பட்ட பொழுது கூட அவ் வியக்கம் பெரும் திரளான மக்களைத் தன் பின்னே அணிதிரட்டியிருக்கவில்லை. மக்களை அரசியல் படுத்தி, அமைப்பாக்கி, ஆயுதம் ஏந்தச் செய்வதற்குப் பதிலாக நக்சல்பாரி இயக்கம் "அழித்தொழிப்பு நடவடிக்கை"யை நம்பியே செயல்பட்டதால், பெருவாரியான மக்களிடமிருந்து இயக்கம் தனிமைப் பட்டு நின்றதால், தேவாரம் கும்பலால் நக்சல்பாரி தோழர்களை எளிதாக கொன்றொழிக்க முடிந்தது.

இரவீந்திரனும் அவரது சக தோழர்களும் மக்கள் போர்க்குழு தலைவர்களை ஆந்திர அரசு கொன்றொழித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில், இரண்டு அரசு பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். தருமபுரி பகுதிகள், மக்களை அரசியல்படுத்துவதற்கு முன்பாகவே, மக்கள் மத்தியில் வலுவான அமைப்புகளைக் கட்டுவதற்கு, ஆந்திராவில் நடப்பதைப் போல "அரசு சொத்துக்களை நாசப்படுத்துவது" போன்ற தனி நபர் சாகசவாத நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கிய செயலானது, எவ்வித எதிர்ப்புமின்றி தருமபுரி பகுதியில் மீண்டும் அரசு பயங்கரவாதத்தை தமிழக அரசு கட்டவிழ்த்து விடுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது" என்று எழுதியுள்ளது.

இதன் சாராம்சம் :

1. தோழர் இரவீந்தரும் உ.உ. மாமன்றமும் அரசியல் பிரச்சாரப்பணிகளை மட்டுமே செய்தனர்.
2. பஸ் எரிப்பினால் தான் அரசு அடக்குமுறையை கொண்டு வந்தது.
3. 1980 ல் தருமபுரியில் இயக்கத்தின் பின்னே மக்கள் திரளவில்லை என்பதுதான்.

உண்மையில் தருமபுரியில் நடந்ததுதான் என்ன? இவர்கள் கூற்று உண்மையா என்பதை ஒவ்வொன்றாக பார்ப்போம்!

1992 க்கு பிறகு உ.உ. மாமன்றம் கிராமப்பகுதிகளில் பல்வேறு போராட்டங்களை எடுத்து வருகிறது. கந்துவட்டிக் கொடுமைக்கு


படிப்பகம்

www.padippakam.com

எதிராக, மான்ய நிலப்பகிர்வு, காட்டிலாகா எதிர்ப்பு, கூலி உயர்வு, நீர்பாசனத்திற்காக, பள்ளிகளில் கட்டாய நன்கொடை எதிர்ப்பு, சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு, இலவச வேட்டி சேலைக்கு மாமூல் வாங்குவதை எதிர்த்து மற்றும் குடிதண்ணீர், சாலை வசதி, ரேசன் கடை போன்ற அடிப்படை சிக்கல் களுக்காக பல போராட்டங்கள் (பிரச்சாரங்கள் அல்ல) எடுக்கப்பட்டன. இப்போராட்டங்களில் இதுவரை ஆயிரக்கணக்கில் மக்கள் அணி திரண்டுள்ளனர்.

1996 - ல் இயக்கப் போக்கில் மாற்றம் வந்தது. இப்போராட்டங்களினால் பாதிப்படைந்தவர்கள் தாக்குதல் தொடுத்தனர். கட்சியால் இதற்கு பதிலடி தரப்பட்டது. அதே சமயத்தில் தற்காப்பிற்காக அமைப்பாளர்கள் நிரந்தரமாக ஆயுதங்களை ஏந்தத் தொடங்கினர். எனவே, தருமபுரியில் தோழர் இரவீந்தரும் அவர் அமைப்பும் ஏதோ "ஆங்காங்கே துண்டுதுண்டாக அரசியல் பிரச்சார பணிகளை" செய்து கொண்டிருக்கவில்லை. மாறாக 1992 லிருந்து தொடர்ச்சியாக பெரும்பாலும் போராட்டங்களே எடுக்கப்பட்டுள்ளன. அவை அடுத்த கட்டத்தை நோக்கி எதிரிகளால் கொண்டு செல்லப்பட்டது. அதாவது, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களையும், அமைப்பைச் சேர்ந்தவர்களையும் தாக்கத் தொடங்கினர். எனவே, இப்போராட் டங்களை மேலும் கொண்டு செல்ல எதிரிகளுக்கு பதிலடி தரப்பட்டது. உள்ளூர் எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள ஆயுதங்கள் ஏந்தப்பட்டது இந்த இயக்கப் போக்கிலேயே நடந்தது. இது ஏதோ "தோழர் இரவீந்தரும் அவரது அமைப்பும் குழந்தைகள் மிட்டாய்க்கு ஆசைப்பட்டது போல், ஆந்திராவைப் பார்த்து ஆசைப்படவில்லை. ஒரு வேளை "புதிய ஜனநாயகம்" பத்திரிக்கை ஆதரிக்கும் அமைப்புகளில் அவரவர் விருப்பம் போல தான் தோன்றித் தனமாக செயல்படும் முறை உள்ளதோ என்னவோ தெரியவில்லை?

தருமபுரியில் இயக்க செயல்போக்கு இ.க.க. (மா - லெ) (மக்கள் யுத்தம்) த்தின் அரசியல் வழிக்குட்பட்டதேயாகும். ஒரு நாடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏகாதிபத்திய சக்தி களால் ஆளப்பட்டாலும், முதலாளிய ஜனநாயக உரிமைகள் இல்லாத அரைநிலப்பிரபுத்துவ நாடாகவும் இருந்தால், அங்கு தொடக்கத்திலிருந்தே ஆயுதப் போராட்டத்துக்காக மக்களை அணிதிரட்ட வேண்டும். இது போன்ற நாடுகளில் ஆயுதப் போராட்டமே முதன்மையான வடிவம். அதே சமயத்தில் மக்கள் திரள் போராட்டங்களும், மக்கள் திரள் அமைப்புகளும் ஆயுதப் போராட்டம் வெடிப் பதற்கு முன்னர், அதற்கான தயாரிப்பாக உள்ளன.

மேற்கண்ட அம்சமே இந்தியாவிற்கு பொருந் தும் வேளையில், பல்வேறு பகுதிகளிலுள்ள வர்க்கப் போராட்டத்தின் தீவிரமும், சமசீரற்ற பொருளியல், அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியும் சம்மந்தப்பட்ட பகுதிகளில் பருண்மையாக பகுத் தாராயப்பட வேண்டும். இதற்கேற்பவே போராட்ட வடிவங்களும் அமைப்பு வடிவங்களும் வகுக்கப்பட வேண்டும். ஆந்திராவில் முதலில் மக்கள் திரள் வடிவங்களும், மக்கள் திரள் போராட்டங்களும் எடுக்கப்பட்டு அதன் வளர்ச்சிப் போக்கிலேயே ஆயுதப் போராட்டமும் கெரில்லா குழுக்களுமாக உயர்ந்தன. ஆனால், தண்டகாரண்யாவில் முதலில் கெரில்லா குழுக்களே சென்று மக்கள் திரள் வடிவங்களையும், மக்கள் திரள் போராட்டங்க ளையும் எடுத்து இன்று கெரில்லா மண்டலமாக வளர்த்தெடுத்து உள்ளனர்.

தமிழகத்தில் மக்கள் திரள் இயக்கங்களும், மக்கள் திரள் போராட்டங்களுமே செயல்பட்டு வருகின்றன. இயக்கத்தின் வளர்ச்சிக்கேற்ப அரசின் அடக்கு முறையின் தன்மையும் மாறிவருகிறது. 1993 - ல் முழுநேர ஊழியர்கள், முன்னோடி சக்திகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என்று அனைவரையும் கைது செய்தனர். பின்னர், பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்தனர். பின்னர், கிராமங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது கைது செய்தனர். 1996 - ல் தோழர் சின்னத்தம்பியும், பகுதி இளைஞர்களும் கைது செய்யப்பட்டு வழிப்பறிக் கொள்ளை என்று பொய் வழக்கும் போடப்பட்டது. இதனால் கொதித்தெழுந்த நாய்க்கன் கொட்டாய் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து 400 பேர் வழக்கை வாபஸ்வாங்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதற்கு பிறகு முன்னணி ஊழியர்கள் மீது குறிவைத்தனர். திடீர், திடீரென்று இரவு நேரங்களில் 20, 30 பேர் என்று வீடுகளையும், வயல்களையும் சோதனை செய்தனர். பின்னர், வயல்வெளிகளில் சக்திமிகுந்த விளக்குகள் மூலம் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சி தேடுவது என்று வேட்டையாடுதலை தொடர்ந்தனர். இக்கட்டத்தில் தான் பென்னாகரம் பகுதியில் 'வன ஊழியர் கடத்தலை' காரணம் காட்டி அதிரடிப்படை உதவியுடன் தோழர். இரவீந்தரை படுகொலை செய்ய முயற்சி செய்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

முடியவில்லை. அவரை பிடித்து தருபவர்களுக்கு சன்மானம் என்று வேவு போலீசார் வாய்வழி செய்தி பரப்பினர். அப்பொழுதிலிருந்து போலீசாரின் வேட்டையாடுதல் தீவிரமடையத் தொடங்கியது. கொலை வெறியுடன் அலையத் தொடங்கினர். கருங்காலி மாதையனை விட்டு கொல்ல முயற்சி செய்தனர். அதுவும் தோல்வியடைந்த நிலையில் அடுத்த கட்டமாக "சிறப்புக் குழு" அமைத்தனர். சிறப்புக் குழு நாய்க்கன் கொட்டாய் மையத்திலும், செம்மனள்ளி மையத்திலும் அடக்குமுறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றது. உள்ளூர் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு புதிய வழக்குகள் போடப்பட்டன. மற்றவர்கள் தீவிர விசாரணைக்குட்பட்டனர். இந்த சமயத்தில் தான் பேருந்துகள் எரிக்கப்பட்டன. இதைக் காரணம் காட்டி மிகப் பெரிய அளவில் அடக்குமுறையை வெளிப்படையாக ஏவிவிடப் பட்டது.

உண்மையில், ஒரு பெரும் தாக்குதலைத் தொடுப்பதற்கான வேலைகளை துவங்கி இருந் தான். இந்நடவடிக்கை நடைபெறாமல் இருந்தி ருந்தால் அவர்களே ஒரு நாடகம் நடத்தி இதே வேலையை செய்திருப்பார்கள். ('93 - ல் தொலைக் காட்சி கோபுரத்திற்கு வெடிகுண்டு வைத்ததாக தோழர்கள் ஜோசப், சுரேஷ், சின்னத்தம்பி மூவர் மீதும் பொய்வழக்கு ஜோடித்தவர்கள் தானே). இது தமிழ்நாடு போலீசுக்கு கைவந்த கலையாயிற்றே.

எனவே, இந்த அடக்குமுறை என்பது 93லிருந்தே தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறது. இது இக்கட்டத்தை எப்படியும் அடைந்து இருக்கும். பேருந்து எரிப்பிற்கு முன்பே தொடங்கி விட்டது என்று பு.ஜ. விற்கு கூறிக் கொள்கிறோம்.

மேலும், தமிழ்நாட்டில் இ.க.க. (மா - லெ) (மக்கள் யுத்தம்) தங்களது எதிர்ப்பைக் காட்ட பேருந்து எரிப்பது ஒன்றும் புதிதல்ல. மண்டல் கமிசன் பரிந்துரை அமல்படுத்தக் கோரியும், பேருந்து கட்டண உயர்வை எதிர்த்தும் கூட எரிக்கப் பட்டுள்ளன. இதே தருமபுரியில் எரிக்கப்பட்டன. அப்பொழுது 6 மாவட்டங்களில் எரிக்கப்பட்டன. ஆனால், அப்பொழுதெல்லாம் இது போன்ற ஒரு அடக்குமுறை ஏவிவிடப்படவில்லையே ஏன்?

மிகத் தெளிவான பதில் ஒன்றுதான். அது மக்கள் திரள் இயக்கத்தின் வளர்ச்சி. 'புஜ' சொல்லுவது போல் மக்கள் திரள் அமைப்புகளில் திரட்டப்படாமல் இல்லை. மிகக் குறுகிய காலத்தில் சுமார் 100 கிளைகள் கட்டப்பட்டன என்ற உண்மைதான் போலீசை அதிர்ச்சியடைய வைத்தன. அதைவிட மக்கள் கட்சித் தோழர்களுக்கு ஆதரவாக போராடுகிறார்கள் என்பது அவர்களுக்கு அச் சத்தையும் ஏற்படுத்தியது.

அதாவது, பேருந்து எரிப்பையொட்டி போலீ சின் அடக்குமுறையில் ஒரு கிராமத்தில் போலீசை நுழைய விடாமல் விரட்டினர். மற்றொரு கிராமத்தில் கைது செய்துக் கொண்டு சென்றவர்களை மக்கள் கூட்டமாக திரண்டு சென்று போலீஸ் நிலையத்தில் இருந்து மீட்டு வந்தனர். மேலும், தோழர் இரவீந்தரின் படுகொலைக்கு பின்னும் மக்கள் உறுதியுடன் போராட்டத்தை தொடர்கின்றனர். உயர்நீதிமன்றத்தில் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி கேட்டு மனுத்தாக்கல் செய்த நாளிலிருந்து தினமும் கிராமம் தோறும் யாரும் பொதுக்கூட்டத்திற்கு செல்லக்கூடாது என்று அறிவிப்பு செய்தனர். யாராவது பொதுக்கூட்டத்திற்கு சென்றால் கைது செய்யப்படுவீர்கள் என்றும், கைது செய்யப் பட்டவர்களுக்கு ஜாமீன் கொடுப்பவர்கள் சொத்து பறிமுதல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர். இச்சமயத்திலும், தோழர்களின் பிரச்சாரத்தை தடை செய்ய முயன்ற போலீசின் அச்சுறுத்தலையும் மீறி செம்மனள்ளி மையத்தில் பிரச்சாரத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும் பொதுக் கூட்டத்திற்கும் திரண்டனர். இதுவே, இன்றைய நிலை என்பதை தெரிவித்துக் கொள் கிறோம்.

அடுத்ததாக, எண்பதுகளில் தருமபுரி இயக் கத்தைப் பற்றி 'ஏற்கனவே சென்ற இதழில் பார்த்தோம். இருப்பினும் 'புஜ' வின் வரலாற்று புரட்டலை புரிந்து கொள்வதற்காக மீண்டும் பார்ப்போம்! 1979 லேயே தோழர் பாலன் தலைமையில் கூலி விவசாயிகள் சங்கம், வாலிபர் சங்கம் என்ற மக்கள் திரள் அமைப்புகள் மூலம் பல போராட்டங்கள் எடுக்கப்பட்டன. மறுபக்கத்தில் தோழர் கண்ணாமணி குழுவினர் வடாற்காடு மற்றும் அதை ஒட்டிய தருமபுரி பகுதிகளில் அழித்தொழிப்பு பாதையை நடைமுறைப்படுத்தினர். 1980 ஆகஸ்டில் தொடங்கிய அடக்குமுறையானது டிசம்பர் வரை சுமார் 26பேர்களை படுகொலை செய்ததுடன் தொடர்ந்தது. ஆயினும் 1981 மேதினத்திற்கு அப்புறம் மெதுவாக வேலைகள் தொடங்கி படிப்படியாக வேகமடையத் தொடங்கியது. இது '85 வரை


படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்தது. தருமபுரி இயக்கம் என்பது '79 - '85 வரையிலான இக்கட்டம் தான். இதில் 80 - ல் வந்த அடக்குமுறையை ஒட்டி சில மாதங்கள் வேலைகள் ஸ்தம்பித்தனவே தவிர மீண்டும் வேலைகள் தொடங்கி இயக்கம் வலுப்பெற்றது. 'புஜ' சொல்வது போல் அழித்தொழிப்பு நடவடிக்கையை நம்பியே எல்லாம் செய்யப்படவில்லை. அதே போல் மக்களிடம் இருந்து தனிமைப்பட்டு இடம் கிடைக்காமல் அலைந்து தோழர் பாலன் கொல்லப் படவில்லை. மாறாக பொதுக் கூட்ட மேடையிலே கைது செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப் பட்டார். உண்மையில் 80 அடக்கு முறைக்குப் பின் தான் இயக்கம் முன்னைவிட பலமாக வளர்ந்தது. நடைபெற்ற போராட்டங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் அணிதிரட்டப்பட்டனர். எடுத்துக்காட்டாக முன்னாள் எம்.எல்.ஏ. ரவுடி ரங்கனை எதிர்த்த போராட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் அணி திரண் டனர். தியாகிகள் அப்பு, பாலன் சிலை திறப்பு விழாவிற்கு அனுமதி மறுத்ததை மீறி சுமார் 10,000 பேர் அணிதிரண்டனர், உண்மையில் இன்றளவும் எண்பதுகளில் இருந்த இயக்க வளர்ச்சியை அடைய வில்லை என்பதே உண்மை.

உண்மை இவ்வாறிருக்க 'புஜ' அழித் தொழிப்பே நடந்தது என்று கூறி உண்மையை மறைக்க முயற்சிப்பது கபடத்தனம் தவிர வேறல்ல.

மேற்கண்டவைகளே உண்மைகளாய் இருக் கும் பொழுது, "புதிய ஜனநாயகம்" இவ்வாறு எழுத என்னக் காரணம்?

புதிய ஜனநாயகத்தையும் அது ஆதரிக்கும் மாநில அமைப்புக் கமிட்டியையும் தெரிந்தவர்கள் யாரும் ஆச்சரியப்பட மாட்டார்கள். ஏனெனில் 25 வருடங்களாக இதைத்தான் செய்து கொண்டிருக் கிறார்கள். 'புஜ' எழுதியுள்ளவைகளில் சில அரசியல் வார்த்தைகளை நீக்கிவிட்டால் அவை அப்படியே போலீசு அதிகாரிகளின் பேட்டிகளாகவோ, செய்திகளாகவோ வந்தவைகள் தான். 80 களில் தேவாரம் இயக்கத்தை ஒடுக்கிவிட்டான் என்பதி லிருந்து இன்றைய தருமபுரி எஸ்.பி. கந்தசாமி கூறும் பேருந்து எரித்ததால் தான் நாங்கள் ஒடுக்குகிறோம் என்பது வரை தெளிவாக ஆளும் வர்க்கத்தின் குரலை ஒலிக்கிறார்கள்.

இவர்கள் 70 - களின் இறுதியில் இந்தியப் புரட்சிக்கு சரியான வழியை கண்டு பிடிப்பதாகக் கூறி "படிப்புத்தவம்" இருந்தனர். பின்னர், 80 களில் "சரியான வழி எங்களுடையது தான்" என்று கூறி நாமும் போர்க்குணமிக்க போராட்டங்களின் மூலம் மக்களைத் திரட்டிக் காட்டுவோம் என்று செயல்படத் தொடங்கினர்.

தமிழகத்தில் இவர்கள் அரசியல் வழியின் அடிப்படையில் புதிய ஜனநாயகப் புரட்சியை தீவிரப்படுத்துவதற்கான எந்தவிதமான திட்ட வட்டமான செயல்பாடுகளையும் மேற்கொள்ள வில்லை. மாறாக, தன்னெழுச்சியான செயல்பாடு களையே மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் அரசியல் வழி ஒரு புறம் இருக்க, மறுபுறம் அரசியல் சக்திகளையும் சந்தர்ப்ப வாதமாகவே அணிதிரட்டுகின்றனர். அதாவது, நாங்களும் மக்கள் யுத்த கட்சியும் இணையப் போகிறோம் என்று கூறியும், சமீபத்தில் ஒரு படி மேலே போய் தமிழ்நாட்டில் மக்கள் யுத்தம் கிடை யாது என்றும், நாங்கள் தான் தமிழ்நாட்டின் கிளை என்றும் பொய்யான செய்திகளை கூறிவந்தனர்.

இச்சமயத்தில் தான் அமைப்பே இல்லை என்று கூறிய மக்கள் யுத்தக் கட்சியின் வளர்ச்சியும், செயல்பாடும் பற்றி, பேருந்து எரிப்பு நிகழ்ச்சிக்குப் பிறகும், தோழர் இரவீந்தர் படுகொலைக்குப் பிறகும் பத்திரிக்கைகளில் செய்திகளாக வந்துக் கொண்டி ருந்தன. ஒரு கட்டத்திற்கு மேல் போலீசார் கூட மறைக்க முடியாமல் உண்மைகளைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர்.

இச்செய்திகளினால் மிகவும் அதிர்ச்சியுற்றது "புதிய ஜனநாயகம்" ஆதரிக்கும் மாநில அமைப்புக் கமிட்டியினர் தான். ஏனெனில், இவர்கள் தமிழ்நாட்டில் மக்கள் யுத்தக் கட்சியினர் இல்லை யென்ற பொய்யைக் கூறி வந்தனர். இப்பொழுது எங்கே தங்களின் குட்டு வெளிப்பட்டு, கூடாரம் காலியாகி விடுமோ என்ற அச்சத்தில் எழுதப் பட்டவையே, 'புஜ' வில் வெளிவந்துள்ள பொய் களும், வரலாற்றுப் புரட்டல்களுமாகும்.

இவர்கள் தருமபுரியில் தாங்கள் பாலனின் கட்சி என்று கூறிக்கொண்டுதான் மக்களிடம் பிழைப்பை நடத்திக் கொண்டுள்ளனர். இதற்கு மாறாக, இவர்கள் 80 களில் கூறியது போல தோழர் பாலன் தலைமையில் மக்கள் யுத்தக் கட்சி நடத்திய போராட்டங்களை, தன்னெழுச்சி, தீவிர பொரு ளாதார போராட்டங்கள் மற்றும் தனிநபர் பயங் கரவாதம் என்றெல்லாம் கூறினார்கள் என்றால்


படிப்பகம்

www.padippakam.com

மக்கள் தன்னெழுச்சியாக இவர்களுக்கெதிராக தனிநபர் பயங்கரவாதிகளாக மாறிவிடுவார்கள்.

இவை மட்டுமல்ல, தோழர் இரவீந்தர் செயல்படும் பொழுது கூட இவர்களின் சந்தர்ப் பவாத செயல்பாட்டிற்கு பஞ்சமில்லை. இவர்களின் தவறான நிலைபாடுகளையும் சந்தர்ப்பவாத போக்கையும் தொடர்ச்சியாக பென்னாகரம் பகுதியில் தோழர் இரவீந்தர் அம்பலப்படுத்தி வந்தார். மக்களிடம் ஒரு பக்கம் தோழர். இரவீந்தர் பற்றி வேவு போலீசார் பயபீதி கிளப்பிக் கொண் டிருந்தனர். மறுபக்கம் அப்பகுதி வி.வி. முவைச் சேர்ந்தவர்கள் உ.உ. மாவினர் கெரில்லா படை கட்டி விட்டார்கள், ஏ.கே. 47 வைத்துள்ளார்கள் என்று தன் பங்குக்கு கதை கட்டி விட்டனர்.

கருங்காலி மாதையனை எதிர்த்து போராட்டம் எடுக்கும் பொழுது அவனது அண்ணன் கருங்காலி கண்ணையன் (முன்பு மு.இ.அவில் இருந்த இவன் 1993 அடக்குமுறையில் செயலற்று போனான். பின்னர் இணைத்துக் கொள்ளப்படவில்லை) தன்னை வி.வி.முவில் இணைத்துக் கொண்டான். சந்தர்ப்பவாதமாக இவர்களும் இணைத்துக் கொண்டனர். கண்ணையன் உ.உ.மாமன்றத்தில் உள்ளவர்களை வேவு போலீசுடன் சேர்ந்து கொண்டு கடுமையாக மிரட்டிக் கொண்டிருந்தான். தோழர் இரவீந்தரை விரைவில் கொன்றுவிடுவோம் என்று மக்களிடையே பிரச்சாரம் செய்து வந்தான். இவர்கள் இப்பொழுது அப்பகுதியில் வி.வி.முவைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரச் சாரம் செய்கிறார்களே தோழர். வாலி அப்பகுதி உ.உ. மாமன்ற கிளையில் உறுப்பினராக இருந்தவர் தான். கண்ணையன் மிரட்டித்தான் அவரை வி.வி.முவில் சேர வைத்தான். தோழர். இரவீந்தர் கருங்காலி கண்ணையனைப் பற்றி இவர்களிடம் எச்சரித்திருந்தார். ஆனால் இவர்கள் என்ன செய்தார்கள் என்பது இவர்களுக்கே வெளிச்சம்?

மாநில அமைப்புக் கமிட்டியைச் சேர்ந்த கட்சி அணிகளே! அதை ஆதரிக்கும் மக்கள் திரள் அமைப்புகளைச் சேர்ந்தவர்களே! மா.அ. கமிட் டியின் தலைமையை நீங்கள் கேள்விக்குள்ளாக்குவது மிக அவசியம். ஏனெனில் எப்பொழுதுமே நக்சல் பாரி என்ற வார்த்தையும், புரட்சியாளர்களின் தியாகத்தையும் பயன்படுத்தவே முயற்சி செய்துள் ளது. நேர்மையாக இதுவரை விசயங்களை அணுகியதில்லை. நீங்கள் உண்மைகளை தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். இதில் குறிப் பிட்டுள்ள வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். தருமபுரியில் 80 களில் இருந்த மக்கள் இயக்கத்தைப் பற்றி தெரிந்து கொள்ள தருமபுரி, அரூர், பாலக்கோடு, கிருஷ்ணகிரி, பென்னாகரம் என்று எந்த தாலுகாவிற்கும் சென்று, எந்த கிராமத்திற்கும் நீங்கள் சென்று ஆய்வு செய்யுங்கள். நிச்சயம் அவ்வட்டாரத்தில் வரலாற்று சிறப்புமிக்க ஒரு போராட்டம் நடந்திருக்கும். அக்கிராமத்தில் நிச்சயம் ஒரு குழந்தைக்கோ (அ) இளைஞருக்கோ தியாகி தோழர் பாலனின் பெயர் இருக்கும். எனவே, நீங்கள் உண்மைகளை பரிசீலியுங்கள்.

அதே சமயத்தில் உங்களது தலைமையின் "கட்டப்புரட்சி" எந்த கட்டத்தையும் தாண்ட முடியாது. சட்டவாதத்திற்குட்பட்ட சில அரசியல் பிரச்சார வேலைகளைத் தவிர எதுவும் நடை பெற்றுவிடாது. அதிகபட்சம் போனால், போர்க் குணத்துடன் உரக்க முழக்கமிடுவதாகவே இருக்கும். இப்போக்கு தொடரும் பட்சத்தில், இன்னும் சில காலங்களில் பிழைப்புவாதிகளாக மாறும் அபாயமே உள்ளது.

மேலும், அய்க்கியம் ஆகப் போகிறோம் என்று இவர்கள் கூறியதெல்லாம், ஏமாற்று வேலையே! அதற்கான உண்மையான அக்கறையோ, புரட்சிகர கடமையுணர்வோ இவர்களிடம் கிடையாது. தங்கள் கூடாரம் காலியாகிவிடக்கூடாது என்ற கவலை மட்டுமே உண்டு. ஆகையால் தான் உங்களை தக்கவைத்துக் கொள்ள பொய்களையும், வரலாற்று புரட்டுகளையும், அவதூறுகளையும் எப்பொழுதும் கூறி வருகின்றனர்.

தமிழகத்தில் வளர்ந்துவரும் உழவர் புரட்சியில் உங்களது பங்களிப்பு இருக்கட்டும். புரட்சிகர வரலாறு எப்பொழுதும் யாருக்காகவும் நிற்ப தில்லை, நாம் தான் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் உள்ள புரட்சிகர சக்திகளே! ஜனநாயக சக்திகளே! ஒருபக்கம் புரட்சிகர மக்கள் இயக்கத்தின் மீது "புஜ" போன்றவர்களால் தொடுக் கப்படும் அவதூறுகளையும், பொய் புரட்டுகளையும் முறியடிப்போம் ! மறுபக்கம் எதிரியால் தொடுக் கப்பட்டு வரும் அரசு பயங்கரவாதத்தை புரட்சிகர மக்கள் யுத்தத்தின் மூலம் எதிர்கொள்வோம்! தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தை வலுப்படுத்த ஓரணியில் அணி திரள்வோம்!



படிப்பகம்

www.padippakam.com



## கொளகத்தூர் ஆதிக்கசக்தி கவுசி நடேசனை எதிர்த்து தொடரும் போராட்டங்கள்

தருமபுரி மாவட்டம், கொளகத்தூர் கிராமத்தின் மக்களை தாக்கியதற்காக நட்டஈடு போராட்டம் நடத்தியதை தொடர்ந்து ராமலிங்கம் நட்டாடு ரூ. 30,000 கொடுத்து மக்களிடம் மன்னிப்பு கேட்டு அடிபணிந்தான். ஆனால் அராடு மகன் கவுசி என்ற நடேசன் அடிபணிய மறுத்து வந்தான். அதை தொடர்ந்து உழவர் உழைப்பாளர் மாமன்றம் கிராம மக்களை திரட்டி, சிறு நிலபிரபு அராடுவின் நிலத்தில் கொடியை நட்டு நட்டஈடு தராவிட்டால் அறுவடை இயக்கத்தை மேற்கொள்வோம் என்று எச்சரித்துவிட்டு வந்தனர்.

சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அதை கண்டு மிரண்டுபோன அராடு மகன் கவுசி நடேசன் தனது ஏவல் நாயான போலீசிடம் செல்ல, போலீசோ வரிந்து கட்டிக் கொண்டு கிராமத்திற்கு வந்து விவசாயிகளை பிடித்து அராடு மகன் நடேசனை கொலை செய்ய முயற்சி செய்ததாக பொய் வழக்கு போட்டு நிபந்தனை ஜாமீனில் அவர்களை விடு வித்தது. அதை கண்டு சுற்றும் தளராக விவசாயிகள் அராடு மகன் கவுசி நடேசனை எதிர்த்து மீண்டும் போராடத் துவங்கியுள்ளனர். '30,000 ரூபாயாக இருந்த நட்டஈடு தற்போது போடப்பட்ட பொய்வழக்கிற்கு 60,000 ரூபாய் சேர்த்து மொத்தம் 90,000 ரூபாய் நட்டஈடுதரவேண்டும், இரண்டு பொய் வழக்குகளையும் திரும்ப பெற வேண்டும் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்ற கோரிக்கைகளுடன் போராட்ட களத்தில் உள்ளனர். சிறுநிலபிரபு அராடு மகன் அவிசியையும். காவல்துறை அராஜகத்தையும் கொளகத்தூர் மக்கள் முறியடிப்பது உறுதி.

## கருங்காலி பாண்டு அண்ணன் கிருஷ்ணனின் நிலம் பறிமுதல்!

1985 வாக்கில் பாலன் சிலை அருகே நடந்த பஞ்சாயத்தை போலீசுடன் வந்து தாக்கி 11 பேர் மீது பொய் வழக்கு போட காரணமான கிருஷ்ணனை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்களும், பகுதிமக்களும் போராட்டத்தை துவக்கியுள்ளனர். ஏற்கனவே கிருஷ்ணனின் தம்பி கருங்காலி பாண்டு தண்டிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டது தெரிந்ததே. 11 பேருக்கும் 95,000 ரூபாய் நட்டஈடு தரவேண்டும் நாய்க்கன் கொட்டாய் பகுதி மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோரிக்கையுடன் சுமார் 50 பேருக்கு மேல் திரண்டு கிருஷ்ணன் நிலத்தில் உழவர் சங்க கொடியை ஊன்றி நட்டஈடு கொடுக்க வில்லையென்றால் அறுவடை இயக்கம் மேற்கொள்வோம் என்று எச்சரித்துவிட்டுவந்தனர். இதை கண்ட கியூ பிரிவு போலீஸ் இரவோடு இரவாக சென்று கொடியை பிடுங்கியுள்ளனர். கிருஷ்ணனோ தன்னுடைய பிரச்சனையை தீர்த்து கொள்ளாமல் தட்டிக் கழித்து வருகிறான். நட்ட ஈடு தராவிட்டால் உறுதியாக போராடுவது என்று உழைக்கும் மக்கள் உறுதியாக உள்ளனர்.

மையகுழு உறுப்பினர்கள் தோழர்கள், ஷ்யாம், மகேஷ், முரளி, தருமபுரி வட்டார குழு உறுப்பினர் தோழர் ரவீந்தர் ஆகியோரின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் 25 கிராமங்களில் நோட்டீஸ் பிரச்சாரமும் தெருமுனைக்கூட்டமும் போடப்பட்டது. மோசமான அடக்கு முறையிலும் இப்பிரச்சாரம் செய்யப்பட்டதால் மக்களிடையே வரவேற்பு கிடைத்தது. மற்றும் தியாகி தோழர்களுக்கு 5 கிராமங்களில் நினைவு அஞ்சலி கூட்டம் நடத்தப்பட்டது.

## செம்மன அள்ளி பொதுமக்களின் சாராய எதிர்ப்பு போராட்டம்!

இக்கிராமத்தில் ஏற்கெனவே சாராய எதிர்ப்பு போராட்டம் எடுக்கப்பட்டு சாராய விற்பனை முற்றிலும் ஒழிக்கப்பட்டிருந்தபோதிலும் மீண்டும் சாராய வியாபாரிகள் விற்பனையை துவக்கி விட்டனர். இதை ஒழிக்கும் முகமாக அவ்வூரிலுள்ள முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர்களும், பெண்களும் கூடி சாராயத்தை ஒழிக்க முடிவுகட்டி வீடு வீடாக பெண்களிடமும் பொதுமக்களிடமும் பிரச்சாரம் மேற்கொண்டனர். மக்களின் ஆதரவுடன் 200க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் இளைஞர்கள் திரண்டு சென்று சாராயக் கேன் மற்றும் 12 ட்யூப், ஊரல்பானை ஆகியவற்றை கைப்பற்றி ஊர் நடுவே கொண்டுவந்து போட்டு எரித்தனர். இப்போராட்டம் நடக்கும்போதே கருங்காலி தவுலத் ஓடோடிச் சென்று போலீசை அழைத்து வந்தான். மக்கள் திரளாக திரண்டு இருப்பதைக் கண்டு திகைத்து ஏதும் செய்யாது போலீஸ் திரும்பி சென்றது. இளைஞர்கள் மீண்டும் தவுலத் மற்றும் கருங்காலிகளை எச்சரித்து சுவரொட்டி ஒட்டினர். முற்போக்கு இளைஞர் அணி மற்றும் புரட்சிகர பெண்கள் இயக்கம் சார்பில் போராட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்து சுவரொட்டி ஒட்டப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

# சனநாயக முகமூடியும், தேடுதல் வேட்டையும்

தோழர் இரவீந்தர் நினைவுகூட்டத்திற்கு அனுமதியளித்துவிட்டு சனநாயக காவலன் போல காட்டிக் கொண்டு அதே நாளில் சிறப்புப்படை அமைத்து பொதுக்கூட்ட வேலைகளை செய்வோரை மிரட்டுவதும், கைது செய்ய அலைவதும்தான் இந்த ஆளும் வர்க்கங்களின் வேலையாக இருந்தது.

தியாகி தோழர். இரவீந்தர் நினைவுப் பொதுக்கூட்டம் நடப்பதற்கு முந்தைய நாள் காமலாவரம் கிராமத்தில் இரவு முழுவதும் சுற்றி - சுற்றி ஒவ்வொரு வீடாக கேட்பதும் வழிகளில் பதுங்கி நிற்பதுமான செயல்பாடுகளை ஏகனாதன் இன்ஸ்பெக்டர் தலைமையில் 30 பேர் கொண்ட போலீஸ் படை செய்தது. கடைசியில் ஒரு மாந்தோப்பில் தோழர்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த பொழுது போலீஸ் சுற்றி வளைத்துக் கொண்டு "டாய் சுற்றி வளைங்கடா, பிடிங்கடா; ஒருத்தனையும் விடாதே!" என உளறினர். போலீஸ் சுற்றி வளைத்ததை உணர்ந்ததும் தோழர்கள் தப்பிக்கும் முகமாக பின்வாங்கினர். போலீஸின் அலறல் அதிகம் கேட்க தோழர்கள் தற்காப்பாகவும், எச்சரிக்கையாகவும் வானத்தை நோக்கி சுட்டனர். பிறகு பின்வாங்கி சென்று விட்டனர்.

ஒரு புறம் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி வழங்குவதுபோல் வழங்குவதும், மறுபுறம் சிறப்பு படை அமைத்து தோழர்களை வேட்டையாடும் கபட வேடதாரி கருணாநிதியின் கொட்டத்தை மக்கள் நிச்சயம் அடக்குவார்கள்.

# பிஹார் கச்நவான் சுற்றிவளைப்பில் 11 விடுதலைப் போராளிகளின் படுகொலையை எதிர்ப்போம்!

பிஹாரில் 10 கம்யூனிச கெரில்லாக்களும் ஒரு ஆதரவாளரும் பிற்போக்கு இந்திய ஆயுதப் படைகளால் கொல்லப்பட்டனர். மார்ச் 3 அன்று பிஹார், ஜகனாபாத் மாவட்டத்தில் உள்ள முக்தம்பூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட கச்நவான் கிராமத்தை நூற்றுக்கணக்கான மத்திய ரிசர்வ் படை, பிஹார் மிலிட்டரி போலீஸ் மற்றும் பிஹார் போலீஸ் படையினர் சுற்றிவளைத்தனர். இக்கிராமத்திற்கு செல்லும் அனைத்து வழிகளையும் அடைத்து விட்டனர். மக்கள் யுத்த கட்சியின் கெரில்லாக்கள் இக்கிராமத்தில் உள்ள உறைவிடம் ஒன்றில் ஓய்வெடுக்கின்றனர் என்ற தகவலை போலீஸ் உளவாளி மூலமாகப் பெற்ற காவல்துறை எஸ்.பி. அப்துல்கானிமிர் தனது நேரடித் தலைமையில் இத்தாக்குதலைத் தொடுத்தான். காலை 9.30 மணியளவில் கிராமத்தைச் சுற்றி வளைத்த காவல் துறையினர் உறைவிடத்தின் அருகே வந்தபோது தான் கண்காணிப்பு பணியில் இருந்த கெரில்லா தோழர் எச்சரிக்கை ஆனார். அதற்குள்ளாகவே தாக்குதல் துவங்கிவிட்டது. வாசல் அருகே வந்த இரு காவலர்களை கொன்றுவிட்டு, கெரில்லாக்கள் வீதியில் இறங்கி, அனைவரும் ஒன்றாய் நின்று சண்டையிட்டனர். இவ்வேளையில் தோழர் விஜய் (ஸ்ரீகாந்த்) கொல்லப்பட்டார். எஞ்சிய தோழர்கள் கிராமத்தை விட்டு வெற்றிகரமாக வெளியேறி அருகில் இருந்த ஆற்றை நோக்கிச் சென்றனர். ஆனால் அப்பகுதி முழுவதையும் சுற்றி வளைத்திருந்த காவல்துறையினர் தோழர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். கடைசி தோழரின் உயிர் பிரிவது வரையிலும் (மதியம் 2.30 ) தோழர்கள் தீரத்துடன் சண்டையிட்டு வீரமரணம் அடைந்தனர். தோழர்களுக்கு புகலிடம் கொடுத்த மனோகர் பஸ்வான் என்ற இளைஞனை காவல்துறையினர் பிடித்து வந்து பின்னர் சுட்டுக் கொன்றனர். இம்மோதலில் 2 காவலர்கள் கொல்லப்பட்டனர். 3 பேர் காயமடைந்தனர். மிகுந்த எண்ணிக்கையில் குவிந்திருந்த காவல் துறையினருடன் இறுதிவரையிலும் தீரமுடன் போராடி தோழர்கள் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்தனர்.

இம்மோதலில் கொல்லப்பட்ட தோழர் சிறிகாந்த் இ.க.க. (மா - லெ) (மயு) பிஹார் மாநிலக்குழுவின் உறுப்பினராவார். ஜகனாபாத், பெரியாரி கிராமத்தில் ஒரு ஏழை நடுத்தர விவசாயக்



படிப்பகம்

www.padippakam.com

குடும்பத்தில் பிறந்த இவர் ஒடுக்கப்பட்ட மக்களின் உறுதிமிக்க போராளியாக திகழ்ந்தார். பள்ளி நாட்களில் தலித்துகள் மீதான நிலப்பிரபுக்களின் ஒடுக்குமுறையைக் கண்டு வெதும்பிய இவர், கல்லூரியிலும் இந்நிலை தொடர்வதைக் கண்டு இச்சமூக அமைப்பை மாற்றியமைக்க உறுதி பூண்டார். ஷோசித் சமாஜ் தன் என்ற அமைப்பில் சிலகாலம் வேலை செய்த இவர் அவ்வமைப்பு சமூக அமைப்பை மாற்றியமைக்க உதவாது என்பதை புரிந்து கொண்டு புரட்சியாளர்களின் தொடர்பை நாடினார். 1979 - ல் கல்லூரிப் படிப்பை துறந்துவிட்டு தலைமறைவானார். கர்பி, பாலிகாஞ்ச் பகுதியில் பார்ட்டி யூனிட்டியின் ஒரு தலைமறைவு அமைப்பாளராக செயல்பட்டார். 1982 - ல் கர்பி பகுதியின் கட்சி செயலரானதுடன், ஜகனாபாத் மாசவுரி வட்டார கமிட்டியின் உறுப்பினரானார். முதல் சிவப்பு படை ஜகனாபாத்தில் உருவாக்கப் பட்டபோது இவர் அதன் ஒரு உறுப்பினராக இருந்தார். பின்னர் வட்டார அளவில் ஆயுதக் குழுக்கள் உருவாக்கப்பட்டபோது கர்பி ஆயுதக் குழுவின் கமாண்டரானார். பூமிசேனா, லோரிக் சேனா, பிராகாம் டிரோஹி சேனா, ரன்வீர்சேனா போன்ற நிலப்பிரபுக்களின் தனியார் படைகளை எதிர்த்த போராட்டங்களில் முக்கிய பங்காற்றினார். விதவையை திருமணம் செய்து சமூக, பண்பாட்டு போராட்டங்களிலும் முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

1990 - ல் போலீசாரால் கைது செய்யப்பட்ட இவர் பல சிறைபோராட்டங்களை மேற் கொண்டார். சிறையில் மக்கள் நீதிமன்றம் அமைத்தார். பின்னர் 1992 ல் சிறையை விட்டு வெளிவந்து கட்சிப் பணிகளை ஏற்றார். 1992 - ல் மாநில குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட இவர் இறுதி வரையிலும் மகத்சேனா சஞ்சாலன் அணியின் பொறுப்பாள்ராக பணியாற்றினார். எதிரியை எதிர்த்து உறுதியாக, இறுதிவரையிலும் போராடிய இவரது தியாகம் இந்திய புரட்சிக்கு எண்ணற்ற போராளிகளை உருவாக்கிக் கொடுக்கும்.

**(45 ஆம் பக்கத் தொடர்ச்சி . . .)**

கணக்கான மக்களை திரட்டியுள்ளோம். அப்படி இல்லையேல், எமது கட்சி மற்றும் மக்கள் திரள் அமைப்புகள் மீது தடை விதிக்க என்ன அவசியம் ஏற்பட்டது? ஒரு சிறிய கூட்டத்தைக் கூட நாங்கள் நடத்துவதை தடுப்பதற்கான என்ன தேவை உள்ளது? எந்த தடைகளும் இல்லாமல் எமது பொதுக் கூட்டங்களை நடைபெறச் செய்ய அனுமதிக்குமாறு நான் தொரா, நாயுடுவிற்கு சவால் விடுகிறேன். அப்போது அவர்கள் எமது மக்கள் அடித்தளம் எவ்வளவு உள்ளது என்பதைக் காண்பார்கள். ஆளுகின்ற தெலுங்குதேச கட்சி உட்பட எந்த ஒரு பிற்போக்கு கட்சிக்கும் இதுபோல மக்கள் ஆதரவு என்ற விசயத்தைப் பொறுத்தவரை எம்மோடு பொருந்த முடியாது. 'கண்மூடித்தனமான வன்முறை', 'மக்களிடமிருந்து தனிமப்பட்டு விட்டனர்' என்றெல்லாம் தொராவும், நாயுடுவும் இதுபோன்ற பிரச்சாரங்களைச் செய்து வருவது என்பது எமது கட்சியின் மீதான தடையை தொடரச் செய்கின்ற அவர்களின் கொள்கையை நியாயப் படுத்துவதற்காகத்தான்.

மத்தியில் உள்ள பி.ஜே.பி. தலைமையிலான அரசாங்கமும், மாநிலத்தில் தெலுங்குதேச அரசாங்கமும் கடைபிடித்துவரும் மக்கள் விரோத கொள்கைகள் தான் மக்களது துன்பத்திற்கும், துயரத்திற்கும் காரணம் என்பதிலிருந்து மக்களை திசை திருப்பி, எமது இயக்கத்தை ஒரு 'சட்ட ஒழுங்கு' பிரச்சனையாக கருதி அவர்களது பயங்கரவாத செயல் உத்திகளையும், கொள்கைகளையும் இதன் மூலம் நியாயப்படுத்திட அவர்கள் விரும்புகின்றனர்.. . .

## மார்ச் - 8 உழைக்கும் பெண்கள் தினம்

சர்வ தேச பெண்கள் தினத்தை ஒட்டி பெண்கள் கூட்டம் நடத்த தருமபுரி மாவட்ட புரட்சிகர பெண்கள் இயக்கம் முடிவு செய்தது. எனினும் அரசின் தொடர்ச்சியான அடக்குமுறையின் காரணமாக கூட்டம் இரகசிய கூட்டமாக நடத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. 7.00 மணிக்கு கூட்டம் தொடங்கியது. இதில் 25 பெண்கள் கலந்து கொண்டனர். புரட்சிகர முழக்கங்களுடன் தொடங்கியது. பிறகு பாடல், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் கூட்டம் நடந்தது. பிறகு ஒரு தோழர் மார்ச் – 8 பெண்கள் தினம் அதன் முக்கியத்துவம் வரலாறு ஆகியவற்றை எடுத்துரைத்தார். மற்றுமொரு தோழர் புரட்சிகர பெண்கள் இயக்கத்தின் நோக்கம், குறிக்கோள் ஆகியவற்றை எடுத்துரைத்தார். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே போலீஸ் மோப்பம் பிடித்து விட்டதால் கூட்டம் கலைந்து செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. கூட்டம் வயல் வெளியில் நடந்ததால் கைதுகள் தவிர்க்கப்பட்டன. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் உற்சாகத்துடன் திரும்பி சென்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

**தொடர் கட்டுரை – 5**

# நக்சல்பாரி இயக்கத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகள்

## மக்கள்யுத்த காலகட்டம்

## [ *1987 முதல் இன்றுவரை* ]

சென்ற இதழில் மக்கள் யுத்தக் காலகட்டத்தை 1980 முதல் 1987 வரை ஒரு கட்டமாகப் பார்த்தோம். இந்த இதழில் 1987 முதல் இன்று வரையிலும் பார்ப்போம்.

1987 மார்ச்சில் 17 வருடத்திற்குப் பிறகு மாநில மாநாடு (2 வது) நடைபெற்றது. இதில் முக்கிய ஆவணமாக 20 ஆண்டுகால அரசியல், அமைப்பு மீளாய்வு அறிக்கை விவாதிக்கப்பட்டது. கட்சி திட்டம், விதிகள், நமது போர்த்தந்திர வழி மற்றும் "மக்கள் யுத்தக் கட்சி" உருவாவதற்கு அடிப் படையான "கடந்த பத் தாண்டு கால அனுபவ தொகுப்பு" போன்ற அடிப் படை ஆவணங்கள் விவா திக்கப்பட்டு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இதில் 20 ஆண்டு கால (1967 முதல் 1986 வரை) அரசியல், அமைப்பு மீளாய்வின் முக்கியமான சில அம்சங்கள் பின் வருமாறு:

(1) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் புரையோடிப் போயிருந்த திருத்தல்வாதத்திற்கு மரண அடி கொடுத்தது. இந்தியப் புரட்சிக்கான புதிய புரட்சிகர கட்சி உருவானது.

(2) 1947 சுதந்திரம் ஒரு போலி சுதந்திரம், இந்திய முதலாளிகள் தரகு முதலாளிகளே, இந்தியா ஒரு அரை நிலப்பிரபுத்துவ அரைக்காலனிய நாடு என்று வரையறுத்தது, புரட்சியின் இலக்குகளாக நிலப்பிரபுத்துவம், தரகுமுதலாளியம் ஏகாதிபத்தியங்கள் (அன்றைய கட்டத்தில் முக்கியமாக சோவியத் சமூக ஏகாதிபத்தியம், அமெரிக்க ஏகாதிபத்தியம்) என்று தீர்மானித்தது. மேலும், தொழிலாளி – விவசாயி கூட்டடிப்படையில் அனைத்து ஏகாதிபத்திய–நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகளைக் கொண்ட ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்தது.

(3) இந்தியாவில் புரட்சிக்கான பாதையை வகுத்தது. அதாவது, இந்தியாவில் புரட்சி, புதிய வகைப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சியே என்று தீர்மானித்தது. திருத் தல்வாதிகளின் பாதையான நாடாளுமன்றப்பாதையை புறக்கணித்து ஆயுதப் போராட்டப் பாதையை நடைமுறையில் மேற்கொண்டது. மேலும், முதலில் கிராமங்களை விடுவித்து இறுதியாக நக ரங்களை சுற்றி வளைப்பது என்ற நீண்டகால மக்கள் யுத்தப் பாதையை வகுத்தது.

(4) இந்திய புரட்சிக்கு வழி காட்டும் தத்துவம் மார்க்சிய–லெனி னிய–மாசேதுங் சிந்தனையே என் பதை நடைமுறை யில் நிரூபித்துள் ளது.

(5) 1980ல் மக்கள் திரள் வழியின் அடிப்படையில் மக்கள் யுத்தக் கட்சி உருவானது தமிழகத்தில் புரட்சிகர மக்கள் இயக்கத்தில் ஒரு பண்பு மாற்றத்தை ஏற்படுத்தியது.

(6) தமிழகத்திலும் மக்கள் திரள் அமைப்புகள் ஆந்திர மாநிலத்தின் அனுபவத்தை கணக்கில் கொண்டு கட்டப்பட்டன. இதன் விளைவாக தருமபுரியில் பலமான மக்கள் திரள் இயக்கம் தொடர்ச்சியான அடக்குமுறையை எதிர்கொண்டும் உருவானது.

(7) தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் மக்கள் திரள் அமைப்புகளில் புரட்சிகர சக்திகளும் உழைக்கும் மக்களும் பரந்துபட்ட அளவில் அணிதிரண்டனர். குறிப்பாக, திருச்சி, தஞ்சை பகுதிகளில் கிராமப்புற இயக்கத்திலும்; சென்னை, சேலம் மாவட்டங்களில் தொழிற்சங்கத்திலும் உழைக்கும் மக்கள் பெருமளவில் திரட்டப்பட்டனர்.

**1986 – ல் எடுக்கப்பட்ட வேலைகள் :**

(உட்கட்சி போராட்டக் காலத்தில்)

- பிப்ரவரியில் மு.மா.ச.வின் சென்னை மாவட்ட மாநாடு நடத்தப்பட்டது.
- மு.மா.ச. மற்றும் அ.இ.பு.மா.கூ (AIRSF) சார்பில் தருமபுரி அடக்குமுறையைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.
- சென்னையில் மக்கள் ஜனநாயக உரிமை கழகம் சார்பில் அடக்குமுறையைக் கண்டித்து அறைக்கூட்டம் நடத்தப்பட்டது.
- மே மாதத்தில் தருமபுரி பகுதியில் கிராமத்திற்கு செல்வோம் இயக்கம் நடத்தப்பட்டது.
- தாய்மொழிக் கல்விக்காக தமிழ்பாதுகாப்பு கூட்டமைப்பு என்னும் கூட்டமைப்பில் பங்கு கொண்டு பிரச்சார இயக்கங்கள் நடத்தப்பட்டன.
- மாணவர் – இளைஞர் இதழ் செப்டம்பரில் கொண்டு வரப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

(8) தேசிய இன சிக்கல் குறித்து சரியான நிலைபாடு எடுத்தது. வடகிழக்கு மாகாணங்கள், காஷ்மீர், பஞ்சாப் போராட்டங்களை ஆதரித்தது. குறிப்பாக தமிழகத்தில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தொடர்ச்சியான இயக்கங்கள் மேற்கொண்டது சிறப்பாகும்.

(9) சாதி மற்றும் பெண்கள் சிக்கல்களில் ஒரு சரியான அணுகுமுறையை மேற்கொண்டதும், நடைமுறையில் குறிப்பாக கிராமப்புறங்களில் இதற்கான போராட்டங்கள் எடுத்தது மிகச் சிறப்பாகும்.

மேற்கண்ட சிறப்பான அம்சங்கள் இருபதாண்டுகால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. இது மட்டுமல்லாமல் பாதக அம்சங்களையும் குறிப்பிட்டிருந்தது. அதில் முக்கியமான சிலவற்றை பார்ப்போம்!

(1) இ.க.க (மா–லெ) கட்சி இந்திய புரட்சிக்கான அடிப்படைகளை சரியாக உருவாக்கிய போதும், செயல் உத்தியில் இடது தீவிர வாத திசைவிலகலுக்கு ஆட்பட்டது. அதாவது,

(அ) அழித்தொழிப்பை ஒரு வடிவமாக பார்க்காமல் அழித்தொழிப்பு ஒன்றே நடைமுறைப்படுத்தப்பட்டது தவறாகும்.

(ஆ) பிறவடிவங்களும், பிற போராட்டங்களும் புறக்கணிக்கப்பட்டன. குறிப்பாக, மக்கள் திரள் வடிவங்களும் மக்கள் திரள் போராட்டங்களும் புறக்கணிக்கப்பட்டது தவறாகும்.

(இ) தோழர் தமிழரசனால் பின்னர் மக்கள் திரள் போராட்டங்களும் எடுக்க வேண்டும் என்று கூறி கூட்டக்குழு அரசியல் முன்வைக்கப்பட்டது. இப்பாதை மக்கள் திரள் போராட்டங்கள் எடுக்க வேண்டும் என்று கூறிய போதிலும், சாராம்சத்தில் இடது குறுங்குழுவாத போக்கையே வெளிப்படுத்தியது. அதாவது, வர்க்க எதிரியை அழித்தொழிப்பதற்காகவே மக்களைத் திரட்டுவது என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது. அங்கு அப்பகுதியில் வர்க்கப் போராட்டம் தோரும் போராட்டவடிவங்களை மேற்கொள்ளாமல் அழித்தொழிப்பிற்காகவே போராட்டங்கள் எடுக்கப்பட்டன.

1980 ல் மக்கள்யுத்தக் கட்சி உருவான பிறகே இந்தஇடது தீவிரவாத தவறு, மக்கள் திரள் வழியின் மூலம் சரிசெய்யப்பட்டது. மக்கள் திரள் போராட்டங்கள் எடுக்கப் பட்டன. மக்கள்திரள் அமைப்புகள் கட்டப்பட்டன.

(2) அகநிலை அம்சத்தை புறக்கணித்தது: அதாவது, பலமான கட்சி கட்டுவதை புறக்கணித்தது, குறிப்பாக பகுதி நேர ஊழியர் களை கட்சியில் உறுப்பினராவதை மறுத்தது. இத்தவறு 1980 க்கு பிறகு சரிசெய்யப் பட்டது.

(3) தமிழ்நாடு மாநில குழுவில் நிலவிய குழுவாதமும் (குரூப்பிசம்) ஜனநாயகமற்ற அதிகாரத்துவ போக்கும் ஆகும். அதாவது,

(அ) இ.க.க (மா–லெ) தோழர். சாருவின் மறைவிற்கு பிறகு 1973 ல் அனைத்திந்திய அளவில் பிளவுகளை சந்தித்தது. இதன் எதிரொலி தமிழ் மாநில குழுவிலும் இருந்தது, தமிழ்நாட்டில் கட்சியை (1) ஒன்லிஃபார்ம் (2) கூட்டக்குழு (3) மேற்கு பிராந்தியக் குழு என்று மூன்று குழுவாகப் பிளந்தனர். இதற்கு காரணம் மாறுபட்ட அரசியல் கருத்துக்களை ஜனநாயக பூர்வமாக விவாதித்து, தீர்த்து, நடைமுறைக்குச் செல்லாமல் தங்களின் குழுவில் நிலவிய அதிகாரத்துவ போக்கும், குழுவாதமும் ஆகும். தோழர். கண்ணாமணியிடம் இருந்த மிதமிஞ்சிய குழுவாதமானது எழுபதுகளின் இறுதியில் மீண்டும் ஒரு பிளவை ஏற்படுத்தியது.

(4) தோழர். தமிழரசனால் தேசிய இனச்சிக்கல் குறித்து மாறுபாடு முன்வைக்கப்பட்ட பொழுது அது ஜனநாயக முறையில் ஆரோக்கியமாக விவாதிக்கப்பட்டு தீர்க்கப்பட வில்லை. மாறாக, குழுவாத அடிப்படையிலே தோழர். தமிழரசன் தரப்பிலிருந்தும் மாநிலகுழுவின் பெரும்பான்மை தரப்பிலிருந்தும் தீர்க்கப்பட்டன. தோழர். தமிழரசன், புலவர் மற்றும் சுந்தரம் ஆகிய மூவருக்கும் தேசிய இன சிக்கல் குறித்து

## முக்கிய நிகழ்வுகள்
### ('87 முதல் '94 வரை)

- ஈழத்தில் இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தி எடுக்கப்பட்ட இயக்கம் பெரும் அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- 1989 டிசம்பரில் சென்னையில் நடத்தப்பட்ட அனைத்திந்திய புரட்சிகர மாணவர் கூட்டமைப்பின் மாநாடானது, மக்கள் திரள் இயக்க நடவடிக்கைகளுக்கு புத்துணர்வூட்டியது.
- ஜெ ஆட்சியில் நடந்த பாசிச ஒடுக்குமுறைகளை, எதிர்த்து சிறையில் நடந்த இளைஞர் அமைப்பின் மாநில மாநாடு சனநாயகத்திற்கான போராட்டத்தின் அடையாளச் சின்னமானது. இச்சமயத்தில் தமிழகமெங்கும் 700க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.
- 1991 – ல் நடத்தப்பட்ட கி.செ. இயக்கத்தில் ஏறத்தாழ 100 மாணவர் – இளைஞர்கள் பங்கேற்றனர்.
- 1991 சனவரியில் கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு பிரச்சார இயக்கம் எழுச்சிகரமாக நடத்தப்பட்டது.
- 1991 சனவரி 4 – ல் சென்னை, தருமபுரி, வட ஆற்காடு போன்ற பகுதிகளில் மண்டல் அறிக்கையை நடைமுறைப்படுத்தக்கோரி ரயில் மறியல் நடந்தது.
- பாபர் மசூதி இடிப்பை கண்டித்து சென்னை, மதுரை, திருச்சியில் ரயில் மறியல் நடந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவின. ஆனால், மூவரும் சந்தர்ப்பவாதமாக இணைந்து பாட்டாளிவர்க்க கட்சியின் ஐக்கியத்தை முதலாளித்துவ தேசியவாத பிளவின் மூலம் உடைத்தனர். அதேசமயத்தில் மாநிலக்குழுவின் இதர உறுப்பினர்கள் பாட்டாளி வர்க்க ஐக்கியத்தைக் கூறிக்கொண்டே வேலையைச் செய்தனர்.

(5) 1985 ல் மைய குழு செயலர் சத்தியமூர்த்தி கும்பலின் சதியை சந்தித்தது. இக்கும்பலின் மற்றொரு முக்கிய நபரான ஏ.எம்.கே யின் தலைமையில் தமிழ் நாடு மாநில குழுவும் இச்சதிக்கு உடந்தையாக இருந்ததுடன், கட்சிகலைப்பு வேலைகளையும் செய்தனர். அதாவது, ஏ.எம்.கே கும்பலால் மாவட்டக் கட்சிகள் கலைக்கப்பட்டு, படிப்படியாக வேலைகள் முடக்கப் பட்டன. எதிரியின் கடுமையான அடக்கு முறையிலும், தருமபுரியில் வர்க்கப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்காமல், ''அரசியல் வழி'' தவறு என்றும், புதிய வழி இனிமேல்தான் கண்டு பிடிக்க வேண்டும் என்றும் கூறி நடைமுறை வேலைகளை நிறுத்தினர். இக்கும்பல் ஒட்டு மொத்தத்தில் புரட்சிகர இயக்கத்தை ஸ்தம்பிக்கச் செய்து புரட்சிக்கு துரோகமிழைத்தனர்.

மேற்கண்ட அம்சங்களே இருபதாண்டு காலங்களில் நடந்த முக்கிய தவறுகளாகும். இருந்த போதிலும் இதில் புரட்சிகர கட்சியில் ஏற்பட்ட பிளவுகள் புரட்சியின்பால் அக்கறை கொண்ட எவரையும் கவலையுறச் செய்யும். இப்பிளவுகளுக்கு முக்கிய காரணம், அரசியலில் மாறுபட்டக் கருத்துக்களை விவாதித்து ஆரோக்கியமான முடிவிற்கு வருவதற்கு உட்கட்சி ஜனநாயகத்தை உறுதியாக கடைபிடிக்காதது, தன்னை கட்சிக்கும் புரட்சிக்கும் மக்களுக்கும் மேலாகப்பார்க்கும் 'தான்' என்ற அகங்காரச் சிந்தனையுமே காரணங்களாகும்.

ஏ.எம்.கே. கும்பலால் கட்சி அமைப்பு சீர்குலைக்கப்பட்டாலும் ''பீனிக்ஸ்'' பறவை போல புதிய இளம் அணிகளால் (கீழ்மட்ட) கட்சி புத்துயிர் பெற்றது. இவர்களாலேயே மேற்கண்ட சரி, தவறுகள் தொகுக்கப்பட்டன. 1987 க்கு பிறகான புரட்சிகர வரலாற்றில் இப்படிப்பினைகள் ஆரோக்கியமான சாட்சிகளாக உள்ளன என்றால் மிகையாகாது. அவற்றை இனி பார்ப்போம்.

1987 மார்ச் 20, 21,22 ஆகிய தினங்களில் தியாகி தோழர் அப்பு அரங்கில் 2 வது மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு வாலாற்றுச் சிறப்புமிக்க மாநாடாக கருதப் பட்டது. காரணம் 1970 க்கு பிறகு , 17 வருடங்கள் கழித்து நடைபெற்றது, புரட்சிகர கட்சியில் ஜனநாயக மீட்சியாக கருதப் பட்டது. இதன் பிரதிநிதிகள் 20 வருட அரசியல் அமைப்பு மீளாய்வையும் மற்ற அடிப்படை ஆவணங்களையும் உற்சாகமாக விவாதித்து, இறுதியாக தீர்மானங்களை நிறைவேற்றினர். இதில் முக்கிய சில தீர்மானங்கள்:

(1) பழைய சதிகார, துரோக ஏ.எம்.கே கும்பல் தூக்கியெறியப்பட்டது. (பின்னர், இவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட்) (மக்கள்யுத்தம்) போல்ஷ்விக்

## முக்கிய நிகழ்வுகள்
### ('87 முதல் '94 வரை)

**தருமபுரி**

- மாரவாடி ஏரியில் மக்களைத் திரட்டி மீன்பிடிப்பு.
- கள்ளச்சாரய ரவுடி, கருங்காலி பொன்னுசாமிக்கு தண்டனை வழங்கப்பட்டது.
- சத்யா வரதட்சனைக் கொலையை கண்டித்து சாலை மறியல்.
- கொளகத்தூரில் ஆதிக்க சக்திகளை எதிர்த்த போராட்டம்.
- தேன்கனி கோட்டையில் நிலப்பிரபுவை எதிர்த்த போராட்டம்.

**கோவை**

- வளைகுடா போரை எதிர்த்து திருப்பூரில் கொடும்பாவி எரிப்பு.
- திருப்பூரில் தேர்தல் புறக்கணிப்பு கமிட்டி. சைக்கிள் பிரச்சாரம்.

**சேலம்**

- கீரிப்பட்டியில் காலனி நிலத்துக்காக சாலை மறியல்கள் ஆதிக்க சக்தியுடன் மோதல் என தொடர் போராட்டங்கள்.
- கூட மலையில் மலைவாழ் மக்கள் சாலை வசதிக்காக சாலை மறியல்.
- மங்கள புரத்தில் கள்ள சாராயத்தை எதிர்த்துப் போராட்டம்.

**மதுரை**

- வங்கிக் கொள்ளையில் கைது செய்யப்பட்ட தோழர்களின் சிறைப் போராட்டங்கள், நீதிமன்ற பிரச்சாரங்கள், தோழர் வீரமணியை ஒப்படைக்கக் கோரி தோழர் துரைசிங்கவேலின் சாகும் வரை உண்ணாவிரதம்.
- சட்டக்கல்லூரியில் போர்க்குணமிக்க மாணவர் போராட்டங்கள் நடத்தப்பட்டன.
- மதுரை நெசவாளர் கூலி உயர்வு, போனசுக்கான போராட்டத்தில் இளைஞர்கள் பங்கேற்பு – சாலை மறியல்
- அருளானந்தர் கல்லூரியில் நிர்வாக முறைகேடுகளை எதிர்த்து தொடர் போராட்டங்கள்.

**நெல்லை**

- குடி தண்ணீருக்காக அழகு நாச்சியாபுரத்தில் சாலை மறியல்.
- அடிப்படை வசதி கோரி வாசுதேவ நல்லூரில் சாலை மறியல்.


படிப்பகம்

www.padippakam.com

என்ற புதிய அமைப்பாக அறிவித்துக் கொண்டனர்.) புதிய மாநிலகுழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

(2) தமிழ் நாட் டில் எந்தவித ஜனநாயகபூர்வமாகவும் விவாதிக்கப்படாமல் மாநில குழு மட்டும் சந்தர்ப்பவாதமாக இணைந்து உருவான மைய குழுவை கலைக்கவேண்டும் என்று தீர்மானித்தது.

1987 ஏப்ரலில் மைய குழு கலைக்கப்பட்டது. பின்னர், மூன்றாண்டுகள் தனித்தனியாக இயங்கிய தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங் களின் கட்சிகளும் 1990 ஆகஸ்ட்டில் மையப் பிளீனம் நடத்தி ஒரு மைய அமைப்புக் குழு தேர்ந்தெடுக் கப்பட்டு, அதன் தலை மையின் கீழ் மீண்டும் மூன்று மாநிலத்தின் கட்சிகளும் ஒன்றாக செயல்படத் துவங்கின.

மைய அமைப்புக்குழு அமைக் கப்பட்ட சிறிது காலத் திற்குள்ளேயே, மைய குழு செயலர் கே.எஸ் தலைமையில் சிலர் தங்களது தனிப்பட்ட பலவீனங்களுக்காக அமைப்பை சீர் குலைக்க முயற்சி செய்த போது, முதல் நெருக்கடியினால் (1985) பக்குவப்பட்ட அனைத்து மாநில கட்சி அணிகளும் உறுதியாகவும், மிக விரைவாகவும் சீர்குலைவு முயற்சிகளை முறியடித்தனர்.

முதல் நெருக்கடியில் பிரிந்து போன மஹாராஷ்டிர மாநிலக் கட்சி மீண்டும் மக்கள் யுத்தத்தில் இணைந்து, அனைத்திந்திய சிறப்பு மாநாட்டிற்கான ஆவணங்கள் கட்சி அணிகளுக்கு இறக்கப்பட்டு, கீழ்மட்ட மாநாடுகள் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, இறுதியாக 1995 நவம்பரில் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. இச்சிறப்பு மாநாடானது கட்சி அணிகளிடையே ஒரே அரசியல், அமைப்பு அடிப்படையிலான ஐக்கியத்தை ஏற்படுத்தியது, கட்சிக்கு மிகப் பெரும் பலத்தைக் கொடுத்தது. மேலும், மாநாட்டிற்கு முன்பே சில புரட்சிகர குழுக்கள் தங்களை கட்சியுடன் இணைத்துக் கொண்டன. புதிய மாநிலங்களுக்கு அதாவது பெங்கால், பிஹார், அரியானா, டெல்லி, கேரள மாநிலங்களுக்கு விரிவுபடுத்தியது.

இதன் பின்னர், 1998 ஆகஸ்டில் நாம் நடத்திக் கொண்டிருந்த பேச்சுவார்த்தை வெற்றியடைந்து இ.க.க (மா-லெ) பார்ட்டி யூனிட்டியுடன் ஐக்கியம் நடைபெற்று புதிய மக்கள் யுத்தக் கட்சிஉருவானது. மேலும், சில மாநிலங்களுக்கு பஞ்சாப், ஒரிசாவிற்கும், ஏற்கனவே கட்சி இருந்த பிஹார், பெங்கால் மாநிலங்களில் மிகவும் பலம் வாய்ந்த கட்சியாக மாறியுள்ளது. இனி தமிழ் நாட்டிற்கு வருவோம்.

1987 ல் தேர்ந் தெடுக்கப்பட்ட மாநில குழுவானது மக்கள் திரள் அமைப்பில் பணி செய்த முன்னோடி சக்திகளையே பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது. கட்சியே கிட்டத்தட்ட அந்நிலையில் தான் இருந்தது. இது மட்டு மல்லாமல் கட்சி முழுவதும் சீர்குலைக்கப் பட்டதால் சொற்ப சக்தி களே எஞ்சினர். கட்சி மீண்டும் "புதியதாக மறுபிறவி" எடுத்தது என்றே சொல்லலாம். ஒருபக்கம் அனுபவமின்மையும், மறுபக்கம் குறைவான சக்திகளுடனும் வேலைகள் தொடங்கப்பட்டன.

மாநாடு மாநில குழுவிற்கு சில கடமைகளையும், சில வழிகாட்டுதல்களையும் அளித்தது. அதில் முக்கியமானது பின்தங்கிய மாவட்டங்களில் கட்ட வேண்டும் என்று தீர்மானித்திருந்தது.

அதேபோல், பழைய தலைமை எல்லா அரங்குகளில் இளைஞர் அமைப்பு பெயரிலேயே வேலை செய்தது தவறு என்றும் அந்தந்த பிரிவினரைச் சேர்ந்த அமைப்புகளே கட்டப்பட வேண்டும் என்றும் வழிகாட்டியது. அதனடிப்படையில் மாநில குழுவும் விவசாய சங்கத்தையும், பெண்கள் அமைப்பையும் அந்தந்த பகுதிகளில் கட்ட முயற்சி எடுப்பது என்றும், மேலும் மாணவர், இளைஞர் அமைப்புகளை மீண்டும் மாநில அளவில்

## முக்கிய நிகழ்வுகள்
### ('87 முதல் '94 வரை)

**சென்னை**

- தோழர் சாரு மஜீம்தார் நினைவு நாள் கூட்டம்.
- சமுக நலத்துறை விடுதி மாணவர்களின் உணவு படியை அதிகரிக்கக் கோரி, அனைத்து விடுதி மாணவர் போராட்டம்.
- இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்து அனைத்துக் கல்லூரி மாணவர் பேரணி.
- ஓவியக் கல்லூரி மாணவர்கள் தேர்தல் கோரியும், பிற கோரிக்கைகளுக்காகவும் தொடர் போராட்டம்.
- மைய பாலிடெக்னிக் தேர்தல் கோரியும், தடைமுறையை நீக்க கோரியும் போராட்டம்.
- அமெரிக்காவின் வளைகுடாப் போரை எதிர்த்து கூட்டு நடவடிக்கை, அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டம், தடியடி.

**இராமநாதபுரம்**

- பரமக்குடியில் கள்ளச்சாராய ஊறல்களை உடைத்து, சாராயப் பேர்வழிகளை ஊர்வலமாகக் கொண்டு சென்று, உடன்போன காவல்துறையை எதிர்த்தும் மக்களைத் திரட்டி போராட்டம்.
- பள்ளி மாணவர்கள் சாலை மறியல், கலெக்டர் அலுவலகம் முற்றுகை.

**வட ஆற்காடு**

- பாலிடெக்னிக் மாணவர் போராட்டம்.
- கலைக்கல்லூரி மாணவர்கள் தேர்தல் கோரி போராட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

புனரமைப்பது என்றும் தீர்மானித்தது. இத்தீர்மானங்களின் அடிப்படையில் வேலைகள் முன்கொண்டு செல்லப்பட்டன. முக்கியமாக பிரச்சார வேலைகளும், தருமபுரியில் சில போராட்டங்களும் நடைபெற்றன.

1988 ல் மதுரை வங்கிக் கொள்ளையை காரணம் காட்டி இளைஞர் மாணவர் அமைப்புகளின் மீது கடும் அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. இந்த அடக்குமுறையை வெற்றிகரமாக எதிர்கொண்டது மட்டுமல்லாமல், மாணவர் இளைஞர் அமைப்புகளும் வேகமாக வளரத் தொடங்கின. 1989 ல் மாணவர் சங்க முதல் மாநில மாநாடு நடைபெற்றது. 1991–வரை பல்வேறு போராட்டங்களும் பிரச்சாரங்களும் சிறப்பாக நடைபெற்றன.

1991 மேயில் கட்சியின் 3வது மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் முக்கியமாக கிராமப்புற இயக்கத்தின் வளர்ச்சி பற்றி விவாதிக்கப் பட்டது. இறுதியில் தமிழ்நாட்டில் உழவர் புரட்சியை கொண்டு செல்ல திட்டவட்டமான கட்சிக் கண்ணோட்டம் வகுத்து செயல்பட வேண்டும் என்று தீர்மானித்தது.

இதன்பிறகு, செப்டம்பரில் முற்போக்கு இளைஞர் அமைப்பின் மாவட்ட, மாநில மாநாடுகள் தடைசெய்யப்பட்டன. தடையையும் மீறி சுமார் 700 பேர் கைதாயினர். இப்போராட்டம் தமிழக புரட்சிகர சக்திகளிடையேயும், உழைக்கும் மக்களிடையேயும் ஒரு உத்வேகத்தையும் நம்பிக்கையையும் தந்தது மட்டுமன்றி முன்னுதாரணமான போராட்டமாகவும் திகழ்ந்தது.

இந்த அடக்குமுறையினூடே தமிழ் மாநில குழு கட்சி கண்ணோட்டத்தை வகுத்தது. தமிழ்நாட்டின் அரசியல், பொருளியல் வரலாறு, தற்போதைய உற்பத்தி முறைகள், புவியியல் சூழ்நிலைகள் ஆகியவற்றினடிப்படையில் 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. இப்பகுதிகளிலுள்ள சாதக அம்சங்கள் அலசப்பட்டு உழவர் போராட்ட மண்டலம் தேர்வு செய்யப்பட்டது.

மேற்சொன்ன, கட்சியின் செயல் திட்டத்தை ஏற்று 92 ல் தருமபுரி, சேலம் மாவட்டங்களில் கிராமத்திற்கு செல்வோம் இயக்கம் மாணவர், இளைஞர் அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டது. இதுவே இன்றைய 2வது கட்ட (முதல்கட்டம் 1980 – 85) கிராமப்புற இயக்கத்திற்கு துவக்கமாக அமைந்தது. மேலும் கிராமப்புறத்தில் உழவர் அமைப்பை கட்ட வேண்டும் என்ற கட்சியின் அறைகூவலை ஏற்று, கட்சி ஆதரவாளர்களால் உழவர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இக் கிராமத்திற்கு செல்வோம் இயக்கத்திற்கு தலைமையேற்றது.

இவ்வேலைகள் நடைபெறத் துவங்கிய சில மாதங்களுக்குப் பிறகு, "டங்கல் ஒப்பந்த" எதிர்ப்பு பிரச்சார இயக்கம் திட்டமிடப்பட்டது. இதை பாசிஸ்ட் ஜெ. அரசு பூதாகரமாக்கி வட ஆற்காடு தருமபுரி, சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கடுமையான அடக்குமுறையை தொடுத்தது. அமைப்பாளர்கள், முழுநேர ஊழியர்கள், ஆதரவாளர்கள், அப்பாவி பொதுமக்கள் என பலரும் கைது செய்யப்பட்டனர். மீண்டும் மீண்டும் கைதுகள் தொடரப்பட்டு, பொய் வழக்குகள் புனையப்பட்டன, இளைஞர் மாணவர் அமைப்பு செயலாளர்கள் மீதும், உழவர் அமைப்பு மாவட்ட பொறுப்பாளர் மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டது.

இப்படிப்பட்ட கடுமையான அடக்குமுறைகளுக்கு நடுவிலும் கிராமப் பகுதிகளில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. கூலிஉயர்வு, மான்ய நிலப்பகிர்வு, கந்துவட்டி, காலனிப்பிரச்சனை, நீர்பாசனம், காட்டிலாகா எதிர்ப்பு மற்றும் அடிப்படை வசதிகளை கோரியும் போராட்டங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிப் போக்கினிடையில் 1995 மார்ச்சில் கட்சியின் 4வது மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு கட்சியில் இனங்காணப்பட்ட தவறான போக்குகளை எதிர்த்து உறுதியாக போராடுவதோடு, கிராமப்புற இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்க்க வேண்டியதன் கடமையை தீவிரமாக உணர்த்தியது. இம்மாநாட்டை தொடர்ந்து இவ்வாண்டு இறுதியில் அனைத்திந்திய சிறப்பு மாநாடு நடைபெற்றது.

இதற்கு பிறகு, '96 லிருந்து கிராமப்புற இயக்கம்

### முக்கிய நிகழ்வுகள்
### ('95 - லிருந்து . . . )

- '96 சனவரி அன்று சென்னையில் வேலையின்மையை அம்பலப்படுத்தி சான்றிதழ் எரிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
- '96 ஜூலை 20 – ல் இளைஞர் அமைப்பின் 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ 1000 பேர் பங்கு பெற்ற பேரணியும் நடந்தது.
- தர்மபுரி, சேலம் மாவட்ட கிராமப்புறங்களில் பெற்றோர் ஆசிரியர் கழக பெயரில் நடக்கும் கட்டாய நன்கொடை கொள்ளையை எதிர்த்து, பல பள்ளிகளில் நன்கொடை தடுத்து நிறுத்தப்பட்டது. இது கடந்த சில ஆண்டுகளாக ஓர் இயக்கமாக கொண்டு செயல்படுகிறது.
- '97 – ஆம் ஆண்டு நக்சல்பாரி எழுச்சியின் 30 – ஆம் ஆண்டை ஒட்டி மாநிலம் முழுக்க பிரச்சார இயக்கம் கொண்டு செல்லப்பட்டது. இதை ஒட்டி நடந்த கிராமத்திற்கு செல்வோம் இயக்கத்தில் 9 பெண்கள் உட்பட 45 பேர் பங்கேற்றனர்.
- கல்வி வியாபாரமாகுதல் மற்றும் சமூக நல விடுதி மாணவர் கோரிக்கைகளை ஒட்டி மாணவர் அமைப்பு பிரச்சார இயக்கம் மேற்கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

வேகமாக வளரத்தொடங்கியது. இயல்பாகவே அடுத்த கட்டத்தை நோக்கிச் சென்றது. ஏனெனில், பகுதிகளில் எடுக்கப்பட்ட போராட்டங்களால் ஆத்திரமுற்ற உள்ளூர் ஆதிக்க மற்றும் மக்கள் விரோத சக்திகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத்துவங்கினர். மக்கள் திரள் அமைப்பின் முன்னோடி சக்திகள் மீது தாக்குதலைத் தொடுக்கத் தொடங்கினர். வேவு போலீசார் இதை ஊக்கப்படுத்தியதுடன் அமைப்பாளர்களை கொலை செய்து விடும்படி தூண்டி வந்தனர்.

இக்கட்டத்தில் 1வது மாநில குழுவின் முதல் பிளீனம் 1996 அக்டோபரில் நடைபெற்றது. இப்பிளீனம் போராட்டங்களை போர்க்குணத்துடன் வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியத்தையும், போராட்டங்களில் பெருமளவு மக்கள் திரட்டப் பட்டிருந்தாலும் அமைப்பின் செல்வாக்கிற்கு ஏற்ற அளவு அமைப்புகள் கட்டப்படவில்லை என்பதை கடுமையாகச் சுட்டிக் காட்டியது.

இப்பிளீனத்திற்கு பிறகு ஒருபக்கம் போராட்டங்கள் போர்க்குணத்துடன் எடுக்கப்பட்டன. அமைப்பு சக்திகளை தாக்கிய எதிரிகளுக்கு பதில் தாக்குதல் தரப்பட்டது. மறுபக்கம் மக்கள் திரள் அமைப்பு கிளைகளின் எண்ணிக்கை பெருகியது. 1999 மே மாதத்தில் நடந்த தருமபுரி வட்டார கட்சி பிளீனத்தில் கணக்கிட்ட படி உழவர் அமைப்பு, பெண்கள் அமைப்பு, இளைஞர் அமைப்பு, மாணவர் அமைப்பு, பாலகர் சங்கம் ஆகிய அனைத்து அமைப்புகளும் சேர்ந்து 100 கிளைகள் கட்டப்பட்டிருந்தன. ஏற்கனவே, வர்க்கப் போராட்டத்தில் அனுபவம் பெற்ற மக்களாதலால், மீண்டும் அமைப்பின் செயல்பாடுகள் திட்டவட்டமாகத் தொடங்கியதால் வேகமாக அணிதிரளத் தொடங்கினர்.

தருமபுரியில் புரட்சிகர அமைப்புகளின் இந்த வளர்ச்சி கண்டு மாவட்ட நிர்வாகம் அதிர்ச்சியும், அச்சமும் கொண்டது. அதனால் தனிப்படைகளை அமைத்து புதியமுறையில் தேடுதல் வேட்டையைத் துவங்கியது. தனிப்படைகள் அமைத்து இரவு நேரங்களில் சக்திவாய்ந்த ஒளிவிளக்குகளின் மூலம் வயல் வெளிகளில் சுற்றி வளைத்து தேடுவது, தோப்புகளை சுற்றி வளைப்பது, உள்ளூர் மக்களின் எதிரிகள் மற்றும் கருங்காலிகள் மூலம் தகவல் பெற முயற்சி போன்ற ஒடுக்குமுறைச் செயல்பாடுகளை தருமபுரி பகுதிகளில் செய்தனர்.

அதே சமயத்தில் பென்னாகரம் பகுதியில் 'வன ஊழியர் கடத்தல்' காரணம் காட்டி அதிரடிப் படையின் மூலம் தீவிர தேடுதல் வேட்டையாடினர். மாதையன் போன்ற கருங்காலிகள் மூலம் ஆயுதங்கள் கொடுத்து அமைப்பாளர்களை படுகொலை செய்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய முயற்சிகள் எல்லாம் தோல்வியுற்ற பின், அடுத்த கட்டமாக பெரிய அளவில் தாக்குதலைத் தொடுக்க தயாராயினர்.

இச்சமயத்தில் தான், மையகுழுத் தோழர்கள் படுகொலையை கண்டித்து தருமபுரியில் பேருந்துகள் எரிக்கப்பட்டன. இதைக் காரணம் காட்டி மிகப்பெரிய அளவில் 'முளையிலேயே கிள்ளி எறிவோம்' என்று கூறிக் கொண்டு அடக்கு முறையைத் தொடுத்தனர். ஒருபுறம் கருங்காலிகள், மக்கள் விரோத சக்திகள், புதிய கிராமங்களில் உள்ள அரசு ஆதரவு சக்திகள் மூலமாக தகவல் பெறுவதற்கான வலைப் பின்னலை உருவாக்கினர். இதன் மூலம் தகவல் பெற்று பூதிப்பட்டி மையத்தின் அணியை பெருங்காடு கிராமத்தில்

## முக்கிய நிகழ்வுகள்
### ('95 - லிருந்து . . . )

**சென்னை**

- கும்மிடிப் பூண்டியில் டூபாண்ட் எதிர்ப்பு பிரச்சாரங்கள், கிராமங்களில் போராட்டங்கள்.
- திரிசூலம் கல்லுடைப்போர் பகுதியில் பல போர்க்குணமிக்க போராட்டங்கள்.
- தொழிலாளர் பிரச்சார அமைப்பின் பரவலான பிரச்சாரங்கள்.
- திருமங்கலம் பகுதியில் அடிப்படை வசதி கோரி சாலை மறியல்.
- தி. நகர் மேல்நிலைப்பள்ளி, இராமகிருஷ்ணா மேல் நிலைப் பள்ளிகளில் போராட்டங்கள்.
- திருமங்கலத்தில் பெண் தற்கொலைக்கு காரணமானவர்களை கைது செய்யக் கோரி சாலை மறியல்.

**மதுரை**

- ஐ.டி.ஐ கட்டண உயர்வை எதிர்த்து சாலை மறியல், தொடர் போராட்டம்.
- பதுக்கப்பட்ட இலவச வேட்டி சேலைகளை பறிமுதல் செய்து, மக்களுக்கு பிரித்தளிப்பு.
- கடத்தப்பட்ட ரேசன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டு மக்களுக்கு பகிர்ந்தளிப்பு.
- ரேசன் கடை ரவுடி முனுசு தண்டிப்பு.
- செல்லூர், கைலாச புரத்தில் அடிப்படை வசதிகளுக்காக சாலை மறியல்.
- சிறு வணிகர்களையும் பொதுமக்களையும் தாக்கிய ரவுடிகளை பிடித்து, மக்களை கூட்டி, அவர்களிடம் மன்னிப்பு கேட்க வைத்தது.
- கந்து வட்டிக்கெதிராக காவல் நிலைய முற்றுகை.
- செல்லூர் நெசவாளர் கூலி உயர்வு, போனஸ் கூட்டுப் போராட்டங்கள்.
- பல்கலைக் கழக கட்டண உயர்வை எதிர்த்து பல்கலைகழக முற்றுகை.
- நெசவாளர் கூலி உயர்வு, போனசுக்காக திரிபுவாத தலைமைகளை மீறி தொழிலாளரை திரட்டி போராட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

அதிரடிப்படை சுற்றிவளைத்து கடும் தாக்குதல் தொடுத்தது. தோழர்கள் இரவீந்தர், சிவா பிடிக்கப்பட்டு தோழர் இரவீந்தர் சித்திரவதைக்கு பிறகு படுகொலை செய்யப்பட்டார். மறுபக்கம், மக்களிடம் இருந்து அமைப்பை தனிமைப்படுத்த நடவடிக் கைகளை மேற்கொண்டனர். மக்கள் மத்தியில் கட்சி மீது வெறுப்பு ஏற்படவேண்டும் என்ற நோக்கில் கிட்டத்தட்ட ஒருமாதத்திற்கும் மேல் பேருந்துகளை இரவிலும், அதி காலையிலும் இயக்குவதை முற்றிலும் நிறுத்தி விட்டனர். அடுத்ததாக, ஆதரவாளர்களையும், அப்பாவி மக்களையும் கைது செய்து, மக்கள் புரட்சிகர அமைப்புகளுக்கு ஆதரவு தருவதை நிறுத்த வேண்டும் என்று எச்சரித்தனர்.

ஆனால், மக்களோ புரட்சியாளர்கள் தங்கள் நேசத்திற்குரியவர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்தனர். நாய்க்கன் கொட்டாய் மையத்தில் ஒரு கிராமத்தில் போலீசை கிராமத்தில் நுழையவிடாமல் விரட்டினர். மற்றொரு கிராமத்தில் கைது செய்து கொண்டு சென்ற நபர்களை காவல் நிலையம் சென்று மீட்டு வந்தனர்.

தோழர்கள் அப்பு – பாலன் சிலை அருகில் தோழர் இரவீந்தருக்கு வீர் வணக்க கூட்டம் நடைபெற்றது. இதற்கு அப்பகுதி இளைஞர்கள் அணிதிரண்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை போலீஸ் கைது செய்த போது அப்பகுதி மக்கள் அவர்களுக்கு ஆதரவாகத் திரண்டனர்.

சமீபத்தில் தருமபுரியில் உயர்நீதிமன்ற அனுமதியுடன் நடந்த பொதுக் கூட்டத்திற்கு மக்களை அணிதிரட்ட செம்மனள்ளி மையத்தில் கிராமங்களில் பிரச்சாரம் செய்தபோது அதைத் தடுக்க முயன்ற போலீசிடம் மக்கள் தோழர்களுக்கு ஆதரவாக பேசியதுடன், பிரச்சாரத்திற்கு உற்சாகமாக ஆதரவு தெரிவித்தனர்.

இறுதியாக, எந்த நோக்கத்திற்காக ஆளும் வர்க்கம் புரட்சிகர இயக்கத்தின் மீது தாக்குதலை தொடுத்துக் கொண்டிருக்கிறதோ, அந்த நோக்கத்தையும், முயற்சியையும் தவிடுபொடியாக்கும் வகையில் தருமபுரியில் பொதுக் கூட்டத்திற்கு திரண்டுவந்து தங்களது புரட்சிகர அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை உழைக்கும் மக்கள் நிரூபித்துள்ளனர்.

இப்படி ஒருபக்கம் அரசின் கடுமையான அடக்கு முறையை சந்தித்துக் கொண்டே மறுபக்கம் மக்களின் போராட்டங்களும் ஆதரவும் பெருகி வருகிறது. இந்நிகழ்ச்சிப் போக்கு தருமபுரியில் புரட்சிகர மக்கள் இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு அதாவது தமிழகத்தில் ஆயுதப் போராட்டத்தை உருவாக்குவதற்கான தொடக்கத்தைக் கொண்டுள்ளது. எதிரியும் தனது நடவடிக்கையின் மூலம் நமக்கு இதை உணர்த்தியுள்ளான். எனவே தமிழகத்தில் புரட்சிகர மக்கள் இயக்கம் எத்தகைய அடக்குமுறையிலும் சரி அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கிச்செல்லும் என்பது உறுதி செய்யப் பட்டுவிட்டது.

## முக்கிய நிகழ்வுகள்
### ('95 – லிருந்து . . . )

- '96 சனவரி அன்று சென்னையில் வேலையின்மையை அம்பலப்படுத்தி சான்றிதழ் எரிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
- '96 ஜூலை 20 – ல் இளைஞர் அமைப்பின் 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெற்றது. ஏறத்தாழ 1000 பேர் பங்கு பெற்ற பேரணியும் நடந்தது.
- தர்மபுரி, சேலம் மாவட்ட கிராமப்புறங்களில் பெற்றோர் ஆசிரியர் கழக பெயரில் நடக்கும் கட்டாய நன்கொடை கொள்ளையை எதிர்த்து, பல பள்ளிகளில் நன்கொடை தடுத்து நிறுத்தப்பட்டது. இது கடந்த சில ஆண்டுகளாக ஓர் இயக்கமாக கொண்டு செயல்படுகிறது.
- '97 – ஆம் ஆண்டு நக்சல்பாரி எழுச்சியின் 30 – ஆம் ஆண்டை ஒட்டி மாநிலம் முழுக்க பிரச்சார இயக்கம் கொண்டு செல்லப்பட்டது. இதை ஒட்டி நடந்த கிராமத்திற்கு செல்வோம் இயக்கத்தில் 9 பெண்கள் உட்பட 45 பேர் பங்கேற்றனர்.
- கல்வி வியாபாரமாகுதல் மற்றும் சமூக நல விடுதி மாணவர் கோரிக்கைகளை ஒட்டி மாணவர் அமைப்பு பிரச்சார இயக்கம் மேற்கொண்டது.

தமிழகத்தில் 1987 – ல் மறுபிறவி எடுத்த இ.க.க. (மா–லெ) (மக்கள் யுத்தம்) கடந்த 13 வருடங்களில் கடந்தகால அனுபவங்களின் படிப்பினைகளைக் கொண்டு இன்று புரட்சிகர மக்கள் இயக்கத்தை வளர்த்தெடுத்துள்ளது. இதற்கான செயல் போக்கில் நடந்த முக்கிய அம்சங்களை பின் வருமாறு தொகுக்கலாம் :

1. 1970 ல் நடந்த முதல் மாநில மாநாட்டிற்கு பிறகு அமைப்பில் 17 வருடங்களாக நிலவிவந்த ஜனநாயக விரோத போக்கை முடிவிற்கு கொண்டுவந்து, 1987 – ல் 2 வது மாநில மாநாடு நடத்தப்பட்டது மட்டுமல்லாமல், அது தொடர்ந்து 1991 – ல் 3 வது மற்றும் 1995 – ல் 4 வது மாநில மாநாடு என்று தொடர்கிறது. மேலும் இரு மாநாட்டிற்கு நடுவில் பிளீனங்கள், சிறப்புக் கூட்டங்கள் மூலம் நடைமுறை, அமைப்பு சிக்கல்கள் தீர்க்கப்பட்டன. மாநாட்டினால் தீர்மானிக்கப்பட்ட உடனடிக் கடமைகள் செழுமைப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

2. கடந்த காலங்களில் மாநில தலைமைகளில் நிலவிய குழுவாதம் (குரூப்பிசம்) ஒழிக்கப்பட்டு, உட்கட்சி ஜனநாயகம் செழுமைப்படுத்தப்பட்டு, ஜனநாயக மத்தியத்துவத்தின் மூலம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

3. 1991 – ல் தமிழகத்தில் புதிய ஜனநாயகப் புரட்சியை


படிப்பகம்

www.padippakam.com

கொண்டு செல்வதற்கான கட்சி கண்ணோட்டம் வகுத்து, அதனடிப்படையில் கிராமப்புற செயல்திட்டம் வடிவம் பெற்று நடைமுறைக்கு சென்றது.

4.1995 – ல் நடந்த அனைத்திந்திய சிறப்பு மாநாட்டின் மூலம் கட்சி அரசியல் மற்றும் அமைப்புரீதியாக ஒரே சிந்தனை கொண்ட கட்சியாக பரிணமித்தது. ஆந்திரா, வடதெலுங்கானா, தண்டகாரண்யா பகுதிகளின் புரட்சிகர நடைமுறை அனுபவங்கள் தமிழ்நாடு போன்ற துவக்க நிலையிலுள்ள மாநிலங்களுக்கு உந்துதலைக் கொடுத்தன. தமிழகத்தில் இன்றைய கிராமப்புற இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியது.

5.இறுதியாக, இக்கட்டத்தில் கிராமப்புற மக்கள் இயக்கத்தின் சரியான துவக்கம். இவைகளே கடந்த கால படிப்பினைகளின் மூலம் இக்கட்டத்தில் சரிசெய்யப்பட்ட முக்கிய அம்சங்கள் ஆகும்.

மேற்கண்ட அம்சங்களே இன்று தமிழகத்தில் நக்சல் பாரி பாரம்பரியத்தைத் தொடரும் இ.க.க. (மா–லெ) (மக்கள் யுத்தம்)த்தை மீண்டும் நிலை நிறுத்தியுள்ளன, வளர்த்தும் உள்ளன.

தோழர்களே!

போராளியில் ஐந்து இதழ்களாக "நக்சல் பாரி இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள்" என்ற இந்த தொடர் கட்டுரையின் மூலம் சுமார் 30 வருட வரலாற்றை சுருக்கமாக கூறி இருந்தோம். இவ்வரலாற்றில் இருந்த சரி, தவறுகளின் அடிப்படையில் படிப்பினைகளை பெற்ற இந்திய பாட்டாளி வர்க்கத்தாலும், புரட்சிகர சக்திகளாலும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய "ஒரு மாற்று சக்தியாக" இன்று இ.க.க (மா – லெ) (மக்கள் யுத்தம்) வளர்ந்து வருகிறது.

ஒரு பக்கம் இந்திய ஆளும்வர்க்கங்கள் நெருக்கடியில் சிக்கி மேலும், மேலும் புதைந்து கொண்டிருக்கையில் மறுபக்கம் புரட்சிகர கட்சி பலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. வடதெலுங்கானா, தண்டகாரண்ய பகுதிகள் (மஹாராஷ்ட்ரா, மத்திய பிரதேஷ்) இன்று கெரில்லா மண்டலத்தின் உயர்ந்த கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறன. மேலும், தென் தெலுங்கானா, கிழக்கு மண்டலம் (ஆந்திரா, ஒரிசாவின் பகுதிகள்), இராயலசீமா – தெற்கு கடற்கரை மண்டலம் (ஆந்திரா) கோயல் – கெய்மூர் மண்டலம்(பிஹார்) ஆகியன கெரில்லா மண்டல தயாரிப்புக் கட்டத்தில் உள்ளன. மேற்கு பெங்கால், தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் ஆயுதப் போராட்ட முனைகள் உருவாகி உள்ளன. இவைகள் இல்லாமல் பிற மாநிலங்களிலும், புதிய மாநிலங்களிலும் கட்சி விரிவடைந்து கொண்டிருக்கிறது. இவை மட்டுமல்லாமல் அனைத்துலகில் உள்ள புரட்சிகர இயக்கங்களின் அய்க்கியத்திற்கான ஒருங்கிணைப்பிலும் இ.க.க. (மா–லெ) (மக்கள் யுத்தம்) பங்காற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழக புரட்சிகர சக்திகளே! ஜனநாயக சக்திகளே! தமிழ்நாட்டில் இக்கட்டத்தில் தொடங்கிய புரட்சிகர மக்கள் இயக்கம் தோழர் இரவீந்தரின் தியாகத்தால் சிவப்பாகியுள்ளது. இது மேலும் படிப்படியாக வளர கெரில்லா மண்டலம், தளப்பகுதி என்று இறுதியாக புதிய ஜனநாயக மக்கள் குடியரசு என்ற இலக்கை நோக்கி உறுதியாக வளர்த்தெடுப்போம்! இதுவே கடந்த கால வரலாற்றில் இரத்தம் சிந்திய எண்ணற்ற தியாகிகளுக்கும், சமீபத்தில் உயிர் துறந்த தோழர் இரவீந்தருக்கும் நாம் செலுத்தும் சிவப்பஞ்சலியாக இருக்கும்.

## முக்கிய நிகழ்வுகள்
## ('95 - லிருந்து . . . )

### சேலம்

- செந்தாரப்பட்டியில் உழவர் அமைப்பு தலைமையில் 10,000க்கும் மேற்பட்ட கூலி விவசாயிகள் கூலி உயர்வு கோரி வேலை நிறுத்தம்,
- ஆத்தூர் பள்ளி மாணவர் சாலை மறியல் போராட்டம்.
- ரெட்டியூரில் அடிப்படை வசதி கோரி சாலை மறியல்.
- கீரிப்பட்டியில் காலனி நிலத்துக்கான சாலை மறியல், பஞ்சாயத்து அலுவலக முற்றுகை.

### தருமபுரி

- மக்கள் விரோதிகளிடமிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு போராட்டம்.
- 26.2.96 அன்று நாய்க்கன் கொட்டாயில் தோழர். சின்னத்தம்பி மற்றும் 7 பேர் மீது போடப்பட்ட பொய் வழக்கை கண்டித்து சாலை மறியல்.
- 11 வது சட்டசபை – பாராளுமன்ற தேர்தல்களை எதிர்த்து தேர்தல் புறக்கணிப்பு குழுக்கள் மூலம், வேட்பாளர்களை விரட்டியடிக்கும் செயலூக்கமான தேர்தல் புறக்கணிப்பு.
- பென்னாகரம் பகுதியில் இலவச வேட்டி சேலை ஊழலை எதிர்த்த போராட்டம்.
- பூதிப்பட்டியில் கருங்காலி மாதையன் பொதுநில ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டம்.
- கள்ளச் சாரயத்தை எதிர்த்து நாய்க்கன் கொட்டாயில் சாலை மறியல்.
- தருமபுரி கலைக்கல்லூரி மாணவர்களின் பல போராட்டங்கள்.
- மான்ய நிலம் கைப்பற்றி பகிர்ந்தளிப்பு.
- செம்மனஹள்ளியில் ஆதிக்க சக்தி ஆக்கிரமித்த நிலம் மீட்பு.
- மக்கள் நிலத்திலிருந்து காட்டிலாக்கா விரட்டியடிப்பு, நிலம் மீட்பு.


படிப்பகம்

www.padippakam.com

## 87 – விருந்து . . .

### சிறைப் போராட்டங்கள்

- 1988 – ல் மதுரை வங்கிக் கொள்ளை ஒட்டி கைது செய்யப்பட்ட தோழர்கள் விசாரணைக்கைதிகளுக்கு கைவிலங்கு போடக்கூடாது என்று நீதிமன்றத்தில் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றனர்.
- இதே வழக்கையொட்டி சட்டவிரோதமாக காவலில் வைக்கப்பட்டிருந்த தோழர்களை விடுவிக்கக் கோரி சிறைத் தோழர்கள் 13 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தனர். இறுதியில் சட்டவிரோத காவலில் இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர்.
- 1993 – ல் கைது செய்யப்பட்ட தோழர். இரவீந்தர் சேலம் சிறைச் சாலையின் சுகாதார சீர்கேட்டை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து, உயர்நீதிமன்ற கமிசன் அமைக்கும் கோரிக்கைக்கு வெற்றி பெற்றார்.

### எதிர்ப்பு நடவடிக்கைகள்

- தருமபுரியில் எடைக்கல் மோசடி செய்த இருவர் அழித்தொழிக்கப்பட்டனர்.
- 1988 – ல் ஜன 26க்கு அரசின் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட ஜெயவர்த்தனேக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தருமபுரியில் இரயில் நிலைய கேபின் எரிக்கப்பட்டது. மதுரையில் அரசுத்துறை ஜீப் எரிக்கப்பட்டது.
- 1989 – ல் தருமபுரியில் பொன்னுசாமி என்ற சாராய வியாபாரிக்கெதிராக போராட்டம் எடுக்கப்பட்டு இறுதியில் கால்கள் சிதைக்கப்பட்டன.
- 1990 – ல் மண்டல் குழு பரிந்துரையை அமல்படுத்தக் கோரி சென்னை, இராமநாதபுரம் பகுதிகளில் பேருந்துகள் எரிக்கப்பட்டன.
- 1991 – ல் பேருந்து கட்டண உயர்வை எதிர்த்து தருமபுரி, சென்னை, வடாற்காடு, நெல்லை, இராமநாதபுரம் பகுதியில் பேருந்துகள் எரிக்கப்பட்டன. மதுரையில் அரசு ஜீப் எரிக்கப்பட்டது.
- 1992 – ல் தருமபுரி நாய்க்கன் கொட்டாய் பகுதியில் கருங்காலி பாண்டு அழித்தொழிக்கப்பட்டான்.
- 1997 – 98 ல் கட்சி சக்திகளையும் ஆதரவாளர்களையும் தாக்கிய ஆதிக்க சக்திக்கும் ரவுடிகளுக்கும் பதிலடி தரப்பட்டது. ஆத்தூரில் பள்ளி கட்டாய நன்கொடை எதிர்ப்பிற்காக பைத்தூரில் சிண்டு கணேசன் தண்டிக்கப்பட்டான்.
- மதுரையில் ரேசன் கடை முறைகேட்டை எதிர்த்து ஒரு ரவுடி தண்டிக்கப்பட்டான்.
- வியாபாரிகளிடம் மாமூல் கேட்டு ரவுடித்தனம் செய்தவர்களை கட்டிவைத்து பொதுமக்களால் தர்ம அடி பூஜை செய்யப்பட்டது.
- தருமபுரியில் கோணையம்பட்டியைச் சேர்ந்த மணி என்பவன் தொடர்ச்சியாக அமைப்பு விரோதமாக செயல்பட்டதால் தண்டிக்கப்பட்டான்.
- பொதுமக்களை அடித்து துன்புறுத்திக் கொண்டிருந்த ரவுடி சின்னக்குஞ்சு பொதுமக்கள் முன் தண்டிக்கப்பட்டான்.
- பூதிப்பட்டியில் பொதுக் குளத்து இடத்தை ஆக்கிரமித்த மாதையன் தண்டிக்கப்பட்டான்.

---

- தமிழகத்தில் பரந்துபட்ட மக்கள் தளத்தை கட்டியமைப்போம்!
- உழவர் போராட்ட முனையை பலப்படுத்துவோம்!
- ஆயுதப்போராட்ட முனையை பலப்படுத்துவோம்! ஆயுதப் போராட்டப் பாதையில் அணிதிரள்வோம்!
- உழவர் புரட்சியை முன்னெடுப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சி நோக்கி அணிதிரள்வோம்!
- தியாகிகளின் நினைவு நீடூழி வாழ்க!
- தியாகிகளின் கனவை நனவாக்குவோம்!
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தம்) நீடூழி வாழ்க!

இக்கட்டுரையில் உள்ள தகவல்களும், அரசியல், அமைப்பு நிலைபாடுகளும் 20 வருடகால (1967 – 1986) அரசியல் அமைப்பு மீளாய்வு அறிக்கையின் இ.க.க. (மா – லெ) (மயு) அடிப்படையில் எழுதப்பட்டது. சில தகவல்கள் இ.க.க (மா–லெ) (மயு) போல்ஷ்விக் அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டது. இக்கட்டுரையின் மீதான விமர்சனங்களை எழுதி அனுப்பவும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைபாடுகளின் மீது விவாதத்தை முன்வைத்தால் விரிவான விவாதத்திற்கு தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


படிப்பகம்

www.padippakam.com

(பின் அட்டை தொடர்ச்சி . . . )

மையத்தின் பா.ஜ.க. தலைமையிலான அரசாங்கமும், கர்நாடகாவின் காங்கிரஸ் அரசாங்கமும் இக்கோர சம்பவத்தில் செயலூக்கமாக பங்கு பெற்றுள்ளன.

இந்த அர்ப்பணிப்பு மிக்க நாயகர்களின் தியாகமானது, நாட்டில் நடைபெற்று வரும் மக்கள் யுத்தத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும். ஆந்திரப் பிரதேச இயக்கத்தின் வழிகாட்டிகளாக விளங்கி, செங்கொடியின் நிழலில் தயக்கமின்றி தம் உயிரை தந்த, தமது ஈடிணையற்ற தியாகங்களின் மூலம் இந்தியப் புரட்சியின் பாதையை ஒளிரச் செய்துள்ள இந்த வீரமிக்க தோழர்களுக்கு போராளி தனது சிவப்பஞ்சலியை செலுத்துகிறது.

## தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோர் என்றென்றும் மக்களின் இதயத்தில் வாழ்ந்து வருவார்கள்.

இத்தோழர்கள் மாபெரும் நக்சல்பாரி எழுச்சிக்குப் பிந்தைய 30 ஆண்டுகளில் இந்தியப் புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றைப் பிரதிபலிப்பவர்கள். இவர்கள் நீண்ட கால மக்கள் யுத்த கோட்பாடுகளை இந்தியாவின் குறிப்பான நிலைமைகளுக்கு ஏற்ப பயன்படுத்தியது மட்டுமின்றி, கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக ஆயுதப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதில் நேரடியாக பங்கேற்றதோடு, ஒடுக்கப்பட்ட மக்களிடையே கலந்திருந்து, இயக்கத்தை உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தனர். இவர்களது வாழ்க்கைகள் ஒவ்வொரு புரட்சியாளரும் வழிகாட்டியாக எடுத்துக் கொள்ள வேண்டிய உன்னத எடுத்துக் காட்டுகள்!

## அச்சமறியா பாட்டாளிவர்க்கப் போராளி தோழர் ஷ்யாம்!

தோழர் ஷ்யாம் கரீம் நகர் மாவட்டத்தின் ஹுசூராபாத் நகரின் அருகே உள்ள கொத்தகட்டு கிராமத்தில் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் தோன்றினார். 70' களின் தொடக்கத்தில் தோழர் ஷ்யாம் ஜம்மிகுண்டாவில் ஒரு கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கையில் நக்சல்பாரி இடி முழக்கத்தால் கவரப்பட்டார்.

1975 வாக்கில் அவர் முழுநேரப் புரட்சியாளராகப் பணியாற்றத் தொடங்கினார். அதற்குப் பிறகு 25 ஆண்டுகாலம் எவ்வித தயக்கமும் ஊசலாட்டமுமின்றி புரட்சிகரப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவசர நிலை காலத்தில் தோழர் ஷ்யாம் தலைமறைவு வாழ்க்கையை தொடங்கினார்.

தலைமறைவு வாழ்க்கையை தொடங்கிய வுடனே தோழர் ஷ்யாம் ஜகத்தியால் பகுதிக்கு அமைப்பாளராக அனுப்பப்பட்டார். அப்போது அவர் தோழர் ரகு என மக்களால் அழைக்கப்பட்டார். அங்கு கொடூரமான நிலப்பிரபுக்களுக்கு எதிரான பல போராட்டங்களை வழிநடத்தினார். ராஜேஸ்வர ராவ் என்ற கொடூர நிலப்பிரபுவை அழித்தொழிக்க உருவாக்கப்பட்ட சிறப்பு ஆயுதக்குழுவில் உறுப்பினராக இருந்தார். இதிலிருந்து கட்சி நடத்திய பல அதிரடி தாக்குதல்களில் துணிச்சலாக பங்கேற்றார். இத்தகைய தாக்குதல்களில் அவர் இதர தோழர்களுக்கு நம்பிக்கையை ஊட்டினார்.

அவசர நிலை மற்றும் அதற்குப் பிந்தைய காலத்தில் பலர் கைதான போதும், எஞ்சிய தோழர்களைத் திரட்டி, முன் முயற்சியுடன் மக்களிடையே ஆழமாகச் சென்று, சரியான செயல் உத்திகளை வகுத்து கரீம் நகர், அதிலாபாத் மாவட்டங்களில் இயக்கத்தை வளர்த்தெடுத்தார். அவர் முதலில் கரீம்நகர்- அதிலாபாத்- நிஜாமாபாத் இயக்கங்களை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட குழுவின் செயலராகவும், பின்னர் 1979 - இல் அதிலாபாத் மாவட்டக்குழுவின் செயலராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1980 - ல் நடந்த ஆந்திராவின் 12 வது மாநில மாநாட்டில் மாநிலக்குழு உறுப்பினராக தேர்ந் தெடுக்கப்பட்டார். 1982 - ல் மாநிலக்குழுவின் செயலக உறுப்பினரானார். அவர் அதிலாபாத் இயக்கத்திற்கும், சிங்கரேணி நிலக்கரிச் சுரங்க தொழிலாளர் இயக்கத்திற்கும் நேரடி தலைமை ஏற்றார்.

1984 - ல் ஆந்திர மாநில செயலாளராக தேர்ந் தெடுக்கப்பட்டார். கட்சியில் எற்பட்ட முதல் உட் கட்சி நெருக்கடியின் போது சரியான மார்க்சிய - லெனினிய நிலையெடுத்து, ஆந்திர மாநிலக் கட்சியை முழுமையாக ஒன்றுபடுத்தி, சதிகாரர்களை முறியடித்தார். அதே சமயம் எதிரி புரட்சிகர இயக்கத்தின் மீது முதல் தாக்குதலை தொடுத்த போது, இதை எதிர்த்த கட்சியின் செயல் உத்திகளை வடிப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.

1986 மே 7 அன்று தோழர் ஷ்யாம் கைது செய்யப்பட்டார். எதிரி இதர தலைவர்களை பிடிப்பதற்காக தோழரை மிகக் கொடூரமாக சித்ரவதை செய்தான். தோழர் ஷ்யாம் கொடூர சித்ரவதைகளை


படிப்பகம்

www.padippakam.com

தாங்கிக்கொண்டு, எந்த சிறிய விசயத்தையும் வெளியிடாமல் ஒரு உண்மையான புரட்சியாளனின் வியக்கத்தகு உறுதியை வெளிப்படுத்தினார்.

சிறையிலிருக்கும் போது மார்க்சிய - லெனினிய மூல நூல்களை கற்பதில் கவனம் செலுத்தினார். 1988 - ல், தோழர் ஷ்யாமும் இன்னும் இரண்டு தோழர்களும் காவலர்களின் இரண்டு துப்பாக்கிகளைப் பறித்துக் கொண்டு சிறையிலிருந்து தப்பி வந்தனர்.

அவர் மீண்டும் மாநிலக்குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், 1990 இல் உருவான மைய அமைப்புக்குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1989 - 90 ல் மீண்டும் இயக்கத்தின் கை ஓங்கியது. 1990 - ல் அடக்குமுறை தற்காலிகமாக தளர்ந்த போது, அதற்கேற்ப உருவாக்கப்பட்ட குறிப்பான செயல் உத்திகளை வடிப்பதில் தோழர் ஷ்யாம் முக்கிய பங்காற்றினார். இக்காலகட்டத்தில் அதுவரை கட்சியின் தலைவராகத் திகழ்ந்த கே.எஸ். தலைமையிலான கட்சி எதிர்ப்பு கும்பலின் சீர்குலைவுவாத நடவடிக்கைகளால் கட்சி இன்னொரு நெருக்கடியை சந்தித்தது. சீர்குலைவாளர்களை முறியடித்து கட்சியை ஒன்றுபடுத்துவதில் தோழர் ஷ்யாமின் பங்கு முக்கியமானது.

இதே காலகட்டத்தில் மை.அ.குழுவால் நடத்தப்பட்ட இராணுவ பத்திரிக்கையான 'ஜங்' கின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றினார். 1995 சிறப்பு மாநாட்டில் மையக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஷ்யாம், செயலக உறுப்பினராகவும் ஆனார். கட்சி ஐக்கியம் (பார்ட்டி யூனிட்டி), மக்கள் யுத்தம் இணைப்பிலும் தோழர் முக்கிய பங்காற்றினார். தோழர் தியாகி ஆவதற்கு முன்னர் வடதெலுங்கானா பகுதி முழுக்க சுற்றுப்பயணம் செய்து, அங்கு இயக்கத்தின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள பொருளாதார வாதத்தை கண்டறிந்ததோடு அது குறித்து அருமையான அறிக்கையையும் தயார் செய்தார்.

கரீம் நகர் - அதிலாபாத் இயக்கங்களின் பெருமைமிகு புதல்வனான தோழர் ஷ்யாம், இயக்கத்திற்கு பெருமைகளை கொண்டு வந்து, படிப்படியாக வளர்ந்து, இந்தியப் புரட்சியின் உயர்மட்ட தலைவர்களில் ஒருவராக ஆனார். தன் வாழ்க்கை முழுவதும் ஒரு உண்மையான புரட்சியாளனாக விளங்கியதன் மூலம் நமது இதயங்களில் மரணமில்லா நாயகனாக நிலைத்துவிட்டார். இவருடைய வாழ்க்கை அனைத்து புரட்சிகர பண்புகளின் விளக்கவுரையாகும். அனைவரும் பின்பற்ற வேண்டிய மாதிரியாகும்.

கூர்மையான ஆய்வு, ஒளிவு மறைவற்ற நேரடியான பேச்சு, எளிமையான சாதாரண வாழ்க்கை முறை, சக தோழர்களுடன் நேசமான பிணைப்பு. சுயநலமின்மை, எத்தகைய தியாகத்திற்கும் தயாராயிருப்பது - இவைதான் தோழர் ஷ்யாமின் பண்புகள். அவர் தவறுகளை தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தார். மற்றவர்களை விமர்சிக்கும்போது அவர்களின் குறைகளை மாற்ற தன்னாலியன்ற அளவு உதவ சிறப்பு கவனம் எடுத்துக் கொண்டார். தோழர் ஷ்யாம் தனது இறுதி மூச்சுவரை கட்சி வழியை உறுதியாக நடைமுறைப்படுத்திய கட்டுப்பாடான போர் வீரர். அவர் 'வலது', 'இடது' திரிபுவாதங்களை எதிர்த்துப் போராடியதுடன், தனது புரட்சிகர வாழ்க்கை முழுவதும் அச்சமற்ற வீரத்தை வெளிப்படுத்தினார். தோழர் ஷ்யாமின் தியாகத்தின் விளைவாக இந்தியப் புரட்சி ஒரு ஆக்கத்திறன் கொண்ட, விமர்சனநோக்குடைய மார்க்சிய - லெனினிய தத்துவவாதியை இழந்து விட்டது. தியாகி தோழர் ஷ்யாம் இனிவரும் பல தலைமுறைகளுக்கு உணர்வூட்டுவதுடன், இந்தியப் புரட்சியின் ஒளி விளக்காகத் திகழ்வார்.

## தோழர் மகேஷின் வீரமிக்க தியாகம் நீடூழி வாழ்க!

தெலுங்கானா போராட்டத்தில் புகழ் பெற்ற வீரர்களை ஈன்றெடுத்த வாரங்கல் மாவட்டத்தின் கடிவண்டி கிராமத்தில்தான் தோழர் மகேஷ் பிறந்தார். வாரங்கல்லில் ஒரு கல்லூரியில் பயிலும் போது முற்போக்கு மாணவர் சங்கத்திற்கு தலைமை தாங்கினார். தியாகி தோழர் அஞ்சண்ணாவின் தலைமையில் மாணவர் இயக்கத்தில் பலரும் முழுநேரப் புரட்சியாளர்களாக மாறிக் கொண்டிருந்த காலமது. தோழர் மகேஷும் குறுகிய காலத்தில் முழுநேரப் புரட்சியாளரானார்.

1981 - ல் ஹைதராபாத் மாநகரக்குழுவின் உறுப்பினராக தோழர் மகேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1984 - ல் கம்மம் இயக்கத்திற்கு புத்துயிரூட்ட மகேஷ் மாவட்ட அமைப்பாளராக அனுப்பப்பட்டார். ஆனால், குறுகிய காலத்திலேயே, 1985 - ல் கைதானார்.

சிறையிலிருந்த 5 வருடங்களை தனது அரசியல் - தத்துவார்த்த அறிவை வளர்க்க பயன்படுத்திக் கொண்டார். தன்னுடன் சிறையிலிருந்த தோழர்களை வார்த்தெடுத்தார். சிறையிலிருந்து மீண்ட உடன் அரசியல் ரீதியாக பக்குவமடைந்த தலைவராக புரட்சிகர இயக்கத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

சிறை மீண்ட தோழர் மகேஷ் வட தெலுங்கானா வனப்பகுதியின் பொறுப்பை ஏற்றார். 1991 - ல் வடதெலுங்கானா வனப்பிராந்திய குழுவின் செயலரானார். இதன் பின்னர் மண்டலக் குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டார். 1993- ல் தோழர் மகேஷுக்கு தென் தெலுங்கானா பகுதிக்கான பொறுப்பு வழங்கப்பட்டது. 1993 - ல் நடந்த ஆந்திர மாநிலக்குழுவின் பிளீனத்தில் தோழர் மகேஷ் மாநிலக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1995- ல் நடந்த அனைத்திந்திய சிறப்பு மாநாட்டில் ஆந்திர பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கி, இரண்டு விசயங்களில் கட்சியின் புரிதலை மாற்றியதன் மூலம், தெளிவான அரசியல் புரிதல் உள்ள தலைவர் என ஒட்டு மொத்த மாநாட்டு பிரதிநிதிகளின் பாராட்டு தலைப் பெற்றார்.

1995 - 98 காலகட்டத்தில் ஆந்திராவில் போலி மார்க்சிஸ்ட்டுகள், பெண்ணியவாதிகள், பழமை வாதிகள், தன்னார்வக் குழுக்கள் ஆகியோர் முற்போக்காளர் போர்வையில் மார்க்சியத்தை கடுமையாக தாக்கினர். ஆந்திர மாநில செயலரான தோழர் மகேஷ் ஆந்திரத்தில் பெண்கள், சாதி பிரச்சனை குறித்த செயல் உத்திகளை உருவாக்கியதில் கட்சியின் வழியை சரியாகப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

இது மட்டுமின்றி உலக வங்கியின் 'விசன் 2020' போன்ற திட்டங்களையும் ஜன்மபூமி, மஹிளா ஜன்மபூமி போன்ற திட்டங்களையும் அம்பலப் படுத்துவதில் ஆந்திர மாநில குழுவிற்கு திறமையான தலைமை தாங்கினார்.

அவர் மார்க்சிய-லெனினிய மாசேதுங் சிந்தனைகளை உடனடிப் பிரச்சனைகளைத் தீர்க்க பயன்படுத்துவதில் திறமையுடன் விளங்கினார். 1999 பிப்ரவரியில் நடந்த ஆந்திர பிளீனத்தில் தாராள வாதம், தன்னெழுச்சி, பொருளாதார வாதம், அதிகாரவர்க்க போக்குகள், அகநிலைவாதம் போன்ற போக்குகளுக்கெதிரான சீர் செய் இயக்கத்தை முன் வைத்ததில், இது தெளிவாக வெளிப் பட்டது.

எதிரி தன்னுடைய உடலை துண்டு துண்டாக வெட்டியபோது கூட போர்க் களத்தை விட்டு வெளியேறாது உறுதியாக நின்ற ஒப்பற்ற தலைவர் தோழர் மகேஷ். தத்துவத்தையும் நடைமுறையையும் இணைத்து, புயல் சூழ்ந்த நாட்களில் புரட்சிகர கப்பலை மறைந்திருக்கும் பாறைகளில் மோதாமல் வழிநடத்திய தலைவரான தோழர் மகேஷின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

## தோழர் முரளிக்கு செவ்வணக்கங்கள்!

தோழர் முரளி தெலுங்கானா ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமை மிகு புதல்வனாவார். ஒரு வார்த்தையில் சொல்வதானால் அவரது வாழ்க்கை தெலுங்கானாவின் இரத்தம் தோய்ந்த வரலாறாகும். தெலுங்கானாவில் அவரது கால்படாத கிராம மில்லை. அவர் அணிதிரட்டாத கிராமப்புற மக்கள் பிரிவினரில்லை. புரட்சிகர முகாமில் அவர் பெயரை கேள்விப்படாதவர் யாருமில்லை. இது மிகைப் படுத்தப்பட்ட கூற்றல்ல, யதார்த்த உண்மையாகும்.

தோழர் முரளி கரீம் நகரின் ஜகத்தியால் நகரத்தின் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் தோன்றினார். அவர் சிர்சிலாவில் பாலிடெக்னிக் படித்துக் கொண்டிருந்த போது மு.மா.சவின் அமைப்பாள ரானார். மெட்பள்ளி, ஜகத்யால், காமாரெட்டி, நிஜாமாபாத் போன்ற பல நகரங்களின் மாணவர் அமைப்பிற்கு தலைமையேற்றார். சில காலத் திலேயே சிர்சில்லா - காமாரெட்டி பகுதியின் அமைப்பாளரானார். இருபது வயதிலேயே முழு நேரப் புரட்சியாளராக பொறுப்பேற்றார். அப் போதே திருமணமாகி குழந்தையும் பெற்றிருந்தார். அவரது மனைவி புரட்சிகர வாழ்க்கைக்கு தயாராக இல்லாததால், அவருடன் இல்லற வாழ்வை தொடரவில்லை.

1984 - ல் அவர் கட்சி மாவட்டக்குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அமைப்பில் இணைந்த நாளிலிருந்தே தலைமறைவாகவே பணி யாற்றினார். அவர் தியாகி ஆகும் வரை ஒரு முறை கூட எதிரியால் சிறைப்பிடிக்கப்படவில்லை. 1985 லிருந்து தொடங்கிய எதிரியின் புதிய ஒடுக்குமுறை இயக்கத்தில், ஏராளமான படையினரை குவித்து கெரில்லா குழுக்களை வேட்டையாடினர். இந்தக் கட்டத்தில் எதிரியின் ஒடுக்குமுறையை எதிர் கொண்டதோடு, சக தோழர்களையும், அமைப் பாளர்களையும் ஒடுக்குமுறைக்கெதிராக தயார் செய்தார். கடந்த இருபது வருடங்களில் எதிரியின் பல்வேறு தாக்குதல்களிலிருந்து தோழர்களை வெளிக்கொண்டு வந்து, ஒரு அனுபவம் வாய்ந்த படைத் தலைவராக வளர்ந்தார். இதனால்தான் கெரில்லாக்களின் நம்பிக்கை மிகுந்த தலைவராகவும் எதிரி அஞ்சி நடுங்கும் வீரராகவும் திகழ்ந்தார்.

1987 - ல் தோழர் முரளி வடதெலுங்கானா மண்டலக்குழுவின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டார். இடையில் மற்ற தோழர்கள் மரணமடைந் ததால் மண்டலக்குழு செயலிழந்தது. இக்கட்டத்தில் இயக்கத்தை புனரமைப்பதில் தோழர் முரளி முக்கிய



படிப்பகம்

www.padippakam.com

பங்காற்றினார். 1989 - ல் புனரமைக்கப்பட்ட வட தெலுங்கானா மண்டலக்குழுவில் முரளி செயலராக தேர்வு செய்யப்பட்டார். 1995 சிறப்பு மாநாட்டில் தோழர் முரளி மையக்குழுவிற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1997 - ல் மையக்குழுவின் முழு உறுப்பினராக மாறினார். தனது இறுதி மூச்சு வரை வடதெலுங்கானா இயக்கத்தை வளர்த்தெடுப்பதிலும், எதிரியின் செயல் உத்திகளுக்கு எதிரான செயல் உத்திகளை வகுப்பதிலும் முனைந்து பணியாற்றினார்.

தோழர் முரளி தனது புரட்சிகர வாழ்க்கையின் 20 வருடங்களாக தெலுங்கானாவின் ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் கலந்து, இயக்கத்தின் ஒவ்வொரு திருப்பு முனையிலும் அவர்களுக்கு வழிகாட்டி வந்தார். இவர் மையகுழுவிலேயே மிகவும் இளையவராவார் (39 வயது). இவரது தியாகத்தால் மையகுழு மிகவும் இளைஞரான, மக்களிடம் வேர் கொண்டிருந்த ஒரு தலைவரை இழந்துவிட்டது. கடந்த இருபது வருடங்களாக தெலுங்கானா எங்கும் பயணித்து அம்மண்ணில் மறையா கால் தடங்களை பதித்து, இயக்கத்தின் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் இடத்தை பெற்றுள்ள நமது அன்புக்குரிய தோழருக்கு செவ்வணக்கங்களை செலுத்துவோம்!

## மக்கள் யுத்தத்தின் தீப்பிளம்புகளை நாடு முழுக்க பரப்புவதன் மூலம் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளிய தாக்குதலை முறியடிப்போம்!

உலக முதலாளிய அமைப்பு இந்திய பொருளியலின்தொடர்ந்து ஆழமாகி வரும் நெருக்கடி, உலக வங்கி, சர்வதேச நிதியத்தால் ஆணையிடப்பட்டுள்ள புதிய பொருளியல் கொள்கைகளான தாராளமயமாதல், தனியார் மயமாதல் மற்றும் உலக மயமாதலை நடைமுறைப்படுத்துவதற்கான இந்திய ஆளும் வர்க்கங்களின் முனைப்பு, இதன் விளைவான மானிய வெட்டுகள், தொழிலாளர், அரசு ஊழியர் பணி இழப்பு, தாங்க முடியாத வரிகள் போன்றவை பெரும்பான்மையான விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி, விலை ஏற்றத்துக்கும் கடும் துயரங்களுக்கும் வழிவகுக்கின்றன. இதன் விளைவாக மக்கள் தங்கள் துன்பங்கள் தீர புரட்சி ஒன்றே வழி என உணர்ந்து வருகின்றனர். தமது அன்றாட கோரிக்கைகளுக்குக் கூட போர்க்குணமிக்க போராட்டங்களை தொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு, நெருக்கடி கூர்மையடைந்து வரும் பின்னணியில், நாடு தழுவிய மாபெரும் மக்கள் இயக்கத்தின் சாத்தியப்பாட்டைக் கண்டஞ்சும் ஆளும் வர்க்கங்கள் இ.க.க. (மா - லெ) (மயு) வின் தலைமையை ஒழிக்க கடும் முயற்சி செய்து வருகின்றனர். இப்படுகொலைகள் மூலம் போராடும் மக்களுக்கு தலைமை இல்லாமல் செய்து மக்கள் இயக்க எழுச்சியை தடுத்து விடலாமென கனவு காண்கின்றனர்.

உலக வங்கியின் ஏவல் நாயான சந்திரபாபு நாயுடு புரட்சியாளர்களை கொடூரமாக படுகொலை செய்வதில், லத்தீன் அமெரிக்க சர்வாதிகாரிகளையும் மிஞ்சி விட்டான். ஆந்திர மாநிலத்தில் போலிஸ் ஆட்சியை மேலும் ஊக்குவித்து, கொலைப்படையான வேட்டை நாய் பிரிவு (க்ரே ஹவுண்ட்ஸ்)க்கு கணக்கற்ற நிதியும், கொலை செய்ய உரிமமும் தந்துள்ளான். இதன் மூலம் புரட்சிகர இயக்கத்தை ஒழித்து விடலாமென கனவு காண்கிறான்.

ஆனால், ஆட்சியாளர்களது கனவுகளை தவிடுபொடியாக்கும் விதத்தில், இந்நாட்டு மக்கள், தகுந்த பதிலடி தந்துள்ளனர். இந்தியப் புரட்சியின் தலைவர்களின் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து பதில் நடவடிக்கைகள், மக்கள் போராட்டங்கள் நாடு முழுவதும் நடந்துள்ளன. வட தெலுங்கானாவிலும், ஆந்திராவின் பல பகுதிகளிலும் பல நாட்களுக்கு அரசாங்க இயந்திரமே ஸ்தம்பித்து நின்றது. (இந்த எதிர்ப்பு போராட்டங்கள் குறித்த செய்திகள் இந்த இதழில் வழங்கப்பட்டுள்ளன) புரட்சிகர மக்களின் சோகம் எதிரிக்கெதிரான கோபாவேசமாக மாறி, ஆளும் வர்க்கங்களை குலை நடுங்க வைத்தது. மக்கள் யுத்தத்தை படுகொலைகள் மூலம் தடுத்துவிட முடியாது என்பதை இது மீண்டும் நிரூபித்தது.

தோழர்களே!

தங்களது தற்காலிக வெற்றி மூலம் தலைகனத்து திரியும் ஆளும் வர்க்கங்களை துடைத்தெறிய சபதமேற்போம்! நமது தியாகி தோழர்களுக்காக தோன்றும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வோம். இதயத்தை அழுத்தும் துயரத்தை கட்டுப்படுத்துவோம். புண்ணாகிப்போன மனத்தை கல்லாக்கிக் கொள்வோம். நமது தியாகிகளின் இரத்தத்தில் தோய்ந்த செங்கொடியை கோடிக்கணக்கான மக்களிடம் சேர்ப்போம். போர்க்களத்தில் வீழ்ந்துவிட்ட ஆயிரக்கணக்கான தியாகிகளின் இரத்தத்தில் நனைந்த செம்பதாகையை உறுதியாகப் பற்றிக் கொண்டு முன்னேறுவோம். தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளியின் தியாகத்தை ஒரு இலட்சிய உதாரணமாகக் கொண்டு, இறுதி வெற்றி வரை போராட உறுதியேற்போம். இதுதான் தியாகிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்!.



படிப்பகம்

www.padippakam.com

# கொய்யூர் போலி மோதல் படுகொலைக்கு எதிராக ஹைதராபாத்தில் அணிதிரண்ட மக்கள் வெள்ளம்.

ஹைதராபாத் நிசாம் கல்லூரியின் மைதானத்தில் 2000, பிப்ரவரி 14 அன்று பெரும் திரளாக திரண்ட 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆந்திர பிரதேச அரசாங்கமும், போலீசும் கட்டவிழ்த்து விடும் போலிமோதல் படுகொலைகளை கண்டனம் செய்ததுடன், பெங்களூர் - கொய்யூரு 'மோதலில்' தங்களது இன்னுயிரை தியாகம் செய்த இத் தோழர்கள் பற்றி புரட்சிகர பாடல்களை கத்தரும், சகதோழர்களும் பாடியபோது ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து பாடினர். ஏறத்தாழ 46 மக்கள் இயக்கங்கள் கூட்டாக சேர்ந்து போலிமோதல் களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடுக்க இப்



மையகுழு தோழர்கள் படுகொலைக்கு எதிராக ஹைதராபாத் நிஜாம் மைதானத்தில் அணிதிரண்ட மக்கள்

கொல்லப்பட்ட இ.க.க. (மா-லெ) (மக்கள் யுத்தம்) மைய குழு உறுப்பினர்களான ஆதிரெட்டி என்ற ஷ்யாம், எர்ரம் ரெட்டி சந்தோஷ் ரெட்டி என்ற மகேஷ், சீலம் நரேஷ் என்ற முரளி மற்றும் லஷ்மிராஜம் என்ற மற்றொரு தோழரின் கொடூர படுகொலை குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக்கு உத்தரவிட கோரிக்கை விடுத்தனர். 'போலி மோதல்களுக்கு எதிரான ஒன்றுபட்ட 'போராட்டக் குழு'வின் அறைகூவலை ஏற்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் ஹைதராபாத்தில் திரண்டனர். காவல் துறையினரின் கெடுபிடிகளையும் மீறி இக்குழுவின் பின் அணி திரண்ட மக்கள் தங்களின் எதிர்ப்புக் குரலை விண் ணதிர முழங்கினர். அரசை எதிர்த்த போராட்டத்தில் போராட்ட குழுவை அமைத்தனர். பெரும் திரளான இக்கூட்டத்தில் உரையாற்றிய பல்வேறு பேச்சாளர்கள், மக்களுக்காக போலி மோதல்களில் கொல்லப்பட்ட இந்த மா - லெ தலைவர்களின் படுகொலைக்கு எதிரான போராட்டத்தில் புரட்சிகர அமைப்புகளும் பிற முற்போக்கு அமைப்புகளும் நாடெங்கும் கரம் கோர்த்து நிற்கின்றனர் என பேசினர். மயுவின் உயர்மட்ட தலைவர்களின் கொலைகளுக்கு அரசாங்கம் மிகப்பெரிய விலை கொடுக்க வேண்டும் என அவர்கள் உரையாற்றினர். ஆந்திர பிரதேசத்தின் சந்திரபாபுநாயுடு அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகொள்கைகளை அம்பலப் படுத்தி தேசிய அளவில் போராட்டங் களை நடத்த

(தொடர்ச்சி 43 ஆம் பக்கம் பார்க்க. . .)



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மோசமான கொடுங்கோலன் தண்டிக்கப்பட்டான்

ஆந்திரப்பிரதேச பஞ்சாயத்து ராஜ் அமைச்சரான மாதவரெட்டி, ஆந்திர பிரதேசம் இதற்கு முன்னர் கண்டதிலேயே மிகவும் மோசமான கொடுங்கோலர்களில் ஒருவனாவான். 1995 - 99 காலகட்டத்தில் ஆந்திர பிரதேச உள்துறை அமைச்சராக இருந்த பொழுது ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறையை ஏவுவதில் இலத்தீன் அமெரிக்க நாடுகளான பெரு, சிலி, கௌதமாலா, பிரேசில் மற்றும் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, காங்கோ போன்ற நாடுகளின் கொடுங்கோலர்களையும் மிஞ்சுபவன் என்பதை நிரூபித்தான். உலக வங்கி மற்றும் பல்வேறு ஏகாதிபத்திய சக்திகளின் வழிகாட்டுதலின் கீழ் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவால் வரையப்பட்ட தெலுங்குதேச அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கொள்கைகளை அவன்தான் நடைமுறைப்படுத்தியவன். முதலமைச்சருக்கு அடுத்தபடியாக தெலுங்குதேச அரசுக்கு கேபினட்டில் மிக முக்கியமானவனாவான். இ.க.க. (மா-லெ) மக்கள் யுத்தத்தால் வழிநடத்தப்படும் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குவதற்காக ஆந்திரா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒரிஸ்ஸா, பிகார் ஆகிய ஐந்து மாநிலங்களின்காவல்துறை நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பை மேற்பார்வையிடும் மாநிலங்களின் ஒருங்கிணைப்பு குழுவிற்கு அமைப்பாளராக இயங்கி வந்தான். 1985 முதல் நான்கு முறை போங்கிர் தொகுதியிலிருந்து எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்ட அவன், தெலுங்குதேசக் கட்சியின் பொது செயலாளராக இருந்ததுடன், 1989 - இல் முன்னாள் முதலமைச்சர் என்.டி.ராமராவின் அமைச்சரவையில் குறுகிய காலத்திற்கு உள்துறை அமைச்சராகவும் இருந்தான். 15 ஆண்டுகளுக்கு முன்னர் அவன் தெலுங்கு தேசம் கட்சியில் இணைந்தது முதலாகவே ஆந்திராவில் மக்கள் யுத்தத்தை ஒடுக்குவதற்கான திட்டங்களை தீட்டுவதிலும், அவற்றை முழுவீச்சில் செயல்படுத்துவதிலும் முன்னணியில் இருந்து வந்தான்.

அவன் உள்துறை அமைச்சராக இருந்தபோது ஐந்து ஆண்டுகளில் ஆந்திராவில் சுமார் 1000 பேர் கொல்லப்படுவதற்கு பின்னணியாக இருந்தான். அவர்களில் பெரும்பாலானோர் இ.க.க. (மா-லெ) (மயு) வின் தலைமை தோழர்கள் மற்றும் செயல்வீரர்கள் அல்லது மக்கள் திரள் அமைப்பு ஊழியர்கள். 1980 களின் இறுதியில் புரட்சிகர இயக்கமானது வெகுவேகமாக முன்னோக்கி சென்று கொண்டிருந்த தென் தெலுங்கானாவின் நலகொண்டா மாவட்டத்திலிருந்து வந்த அவன், அங்கு இயக்கத்தை வெளிப்படை மற்றும் திரை மறைவு வேலைகளின் மூலம் ஒடுக்குவதை தனது சிறப்பு பணியாக கொண்டிருந்தான். ஆளும் வர்க்கங்களின் நம்பிக்கையான நாயான அவன், ஆந்திராவில் புரட்சிகர இயக்கத்தையும், இ.க.க. (மா-லெ)(மயு) வையும் சில மாதங்களுக்குள் ஒழித்து விடுவதாக இடைவிடாது குரைத்துக் கொண்டிருந்தான். ஏகாதிபத்திய ஆதரவோடு அவன், கட்சிக்குள் இருந்த சில பலவீனமான சக்திகளை காவல்துறை ஏஜெண்டுகளாக மாற்றி, அவர்களை பயன்படுத்தி சக தோழர்களையும், தலைமை தோழர்களையும் கொலை செய்ய வைப்பது போன்ற கோழைத்தனமான திரை மறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டான். வடதெலுங்கானாவில் தோழர். மல்காபுரம் பாஸ்கர் ( ரமேஷ் - சிறப்பு மண்டலக் கமிட்டி உறுப்பினர்) இத்திரை மறைவு நடவடிக்கைக்கு பலியானார். உள்துறை அமைச்சரின் நேரடி வழிகாட்டுதலில் காவல்துறையினரால் ஏவப்பட்ட ஏஜெண்ட் ஜதல நாகராஜ் இரவு நேரத்தில் தோழர். பாஸ்கர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது சுட்டுக் கொன்றான். நலகொண்டா மாவட்டத்தில் கிருஷ்ணபட்டி கெரில்லா குழுஉறுப்பினரான சோம்லா நாய்க் (பின்னர் மக்களால் அழித்தொழிக்கப்பட்டான்) என்பவனை பயன்படுத்தி மாநில தலைமைத் தோழர்களை கொல்வதற்கான பெரும் சதிதிட்டம் வெற்றி பெறாததால், அவன் மூலம் கெரில்லா குழு கமாண்டர் மற்றும் சில தோழர்களும் கொல்லப்பட்டனர்.

1995 - ல் முன்னாள் முதலமைச்சர் என்.டி.ராமராவ் முதுகில் குத்தி சந்திரபாபு ஆட்சிக்கு வந்தது முதல் தெலுங்கு தேசம் ஆட்சியில் நடைபெற்ற புரட்சியாளர்கள் படுகொலைகள் அனைத்திற்கும் இம்மோசமான கொடுங்கோலனே நேரடி பொறுப்பாளனாவான். மேலும் இக்காலகட்டத்தில் பல்லாயிரம் புரட்சியாளர்கள் கைது செய்யப்பட்டு சித்தரவதை செய்யப்பட்டனர். புரட்சிகர பாடகர் கத்தர், ஆந்திர பிரதேச சிவில் உரிமைக் குழுவின் தலைவர் புருஷோத்தம் ஆகியோர் தாக்கப்பட்டது போல, புரட்சிகர இயக்கத்தின் சட்டபூர்வ ஆதரவாளர்கள் மற்றும் மனித உரிமை செயல்வீரர்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியோரை படுகொலை செய்வதற்காக, குண்டர்களும், சாதாரண உடையில் காவல் துறையினரும் கொலை படைகளாக அனுப்பப்பட்டனர். சந்திர பாபு மற்றும் மாதவ ரெட்டி ஆட்சியில் ஆந்திரா்வானது கொலைகளமாக மாற்றப்பட்டது.

வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிப்பது போல, அனைத்து கொடுங்கோலர்களும் தங்களது இறுதிமுடிவை மக்களின் கரங்களில் சந்தித்தே தீர வேண்டும். 2000, மார்ச் 7 அன்று இம்மோசமான எதிரி இ.க.க. (மா-லெ) (மயு) வின் ஆயுதமேந்திய கெரில்லாக்களால் அழித்தொழிக்கப்பட்டபோது ஆந்திர பிரதேசத்தில் வரலாறு இதனை மீண்டும் ஒருமுறை கண்டுள்ளது. மிக முக்கிய நபர்களுக்கு பொதுவாக வழங்கப்படக்கூடிய "இசட்" பிரிவு பாதுகாப்பாகிய உச்சபட்ச பாதுகாப்பு அவனுக்கும் வழங்கப்பட்டது. அதன் மூலம், குண்டு துளைக்காத கார், தானியங்கி ஆயுதங்களைக் கொண்ட 10 காவலர்கள் அடங்கிய மற்றுமொரு கார், காவல் துறையினரிலேயே திறமை வாய்ந்ததாக தேர்வு செய்யப்பட்ட தனிபாதுகாப்பு அதிகாரி மற்றும் மூன்று வாகனங்களுக்கும் இடையே தொடர்ச்சியான ரேடியோ தொடர்பு போன்றவை வழங்கப்பட்டன. மேலும் அவன் தனது சொந்த மாவட்டமான நலகொண்டாவுக்கு விஜயம் செய்த போது, சிறப்பு பயிற்சி பெற்ற காவல்துறையினரைக் கொண்ட மேலும் இரு வாகன பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால் இத்தகைய அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் எவற்றாலும் இக் கொடுங்கோலனை கெரில்லாக்களின் தாக்குதலிலிருந்து காக்க முடியவில்லை. அமைச்சர், தனிபாதுகாப்பு அதிகாரி ஆய்வாளர் ராம்பூபால் ரெட்டி மற்றும் காரை ஓட்டி வந்த காவலர் ஆகியோர் அந்த இடத்திலேயே இறந்தனர். சிறப்பு நக்சலைட் எதிர்ப்பு வேட்டை நாய் பிரிவு காவல் துறையினர் பீதியடைந்து நாலா பக்கமும் கண்மூடித்தனமாக இலக்கின்றி தொடர்ச்சியாக சுட்டனர். குண்டு வெடித்த இடத்திற்கு வந்து கொண்டிருந்த உள்ளூர் காவல் துறையினர் இக் கண்மூடித்தனமான துப்பாக்கி சூட்டில் இருந்து மயிரிழையில் தப்பினர்.

கொடுங்கோலன் மாதவரெட்டியின் அழித்தொழிப்பானது முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, அமைச்சரவை, ஆந்திராவின் உயர் காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஒட்டு மொத்த இந்திய ஆளும் வர்க்கங்களை நடுநடுங்கச் செய்துள்ளது. அதற்கு ஒருநாள் முன்னதாகத் தான், அதாவது மார்ச் 6 அன்றுதான் மத்திய அரசானது, ஆந்திரா, மத்திய பிரதேசம், பிகார், மகாராஷ்டிரா, ஒரிசா மாநிலங்களின் உயர் காவல் துறை அதிகாரிகள், உள்துறை அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒருங்கிணைப்பு மையத்தின் ஆறாவது கூட்டத்தைக் கூட்டியது. மத்திய உள்துறை செயலாளர் கமல் பாண்டே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பட்டியல் ஒன்றை அறிவித்தார். அவை, ஆளற்ற வானஊர்திகள் மூலம் நக்சலைட் ஆதிக்க பகுதிகளில் வேவு பார்ப்பது; காவல் துறைக்கு முறையான பயிற்சி வழங்குவதற்கு தேவையான அனைத்து மூலாதாரங்களையும் வழங்குவது; ஐந்து மாநிலங்களுக்கும் தலா ஒரு இந்திய சேமபடை பட்டாலியன் வழங்குவது; காவல்துறையை நவீனமயமாக்குவதற்கு கூடுதல் நிதி வழங்குவது போன்றவை ஆகும். மத்திய அரசானது, போராளி குழுக்களின் திடீர் தாக்குதல்களுக்கு எதிராக உச்சபட்ச கண்காணிப்போடு இருக்கும் படி ஐந்து மாநிலங்களையும் எச்சரித்தது. மாதவரெட்டி அழித்தொழிக்கப்பட்டதற்கு அடுத்த நாள் காலை, இந்து பாசிஸ்டான உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி, பாராளுமன்ற சபாநாயகர் ஜி.எம்.சி. பாலயோகி மற்றும் பல எம்.பி. க்கள் மாதவ ரெட்டியின் இறுதி சடங்கிற்காக டெல்லியிலிருந்து ஹைதராபாத்திற்கு பறந்து வந்தனர். தங்களது வர்க்கத் தன்மைக் கேற்ப அனைத்து அரசியல் கட்சிகளும் - காங்கிரஸ், ஜனதாதளம் சி.பி.ஐ., சி.பி.ஐ (எம்) மற்றும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் கட்சிகள் - "ஜன நாயகத்தில் வன்முறைக்கு இடமில்லை" என சாவுக்காக அழுது புலம்பின. **இந்த அழித்தொழிப்பானது ஆயிரக்கணக்கான புரட்சியாளர்களின் கொலைக்காக, குறிப்பாக 1999 டிசம்பர் அன்று இ.க.க. (மா லெ) (மயு) வின் மூன்று தலைமை தோழர்களான தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோரின் கொடூர கொலைகளுக்கான பதிலடியாகும் என்பதனை மூடிமறைக்க முயன்றனர்.** மக்கள் தொடர்பு சாதனங்கள், இ.க.க. (மா-லெ) (மயு) வை "தைரியமாக எதிர் கொண்டு" முன்னேறிவரும் மக்கள் யுத்தத்திற்கு "கடும் இழப்புகள்" ஏற்படுத்தியதான, இக்கொடுங்கோலனின் "மாபெரும்" சேவைக்காக அவனை பாராட்டின. தெலுங்கு தேசம் கட்சியின் பிரச்சாரகனாகவும், ஏகாதிபத்தியங்களின் கட்டளைபடி, நாயுடு கடுமையாக மேற்கொண்டுவரும் நவீன தாராளமய கொள்கைகளான, உலகமயமாதல், தாராளமய மாதல், தனியார் மயமாதல் ஆகியவற்றின் மாபெரும்


படிப்பகம்

www.padippakam.com

பக்தனுமான ஈநாடு பத்திரிக்கை, மக்கள் யுத்தத்தின் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தது. பல நாட்கள் தொடர்ச்சியாக, கொடுங்கோலன் மாதவரெட்டியை புகழ்ந்தும், புரட்சிகர இயக்கத்தைக் கொடூரமாக ஒடுக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கியும் செய்திகள் வெளியிட்டு வந்தது.

அத்வானி, நாயுடு, திரிபுவாதிகள் மற்றும் பிற ஆளும் வர்க்க பிரதிநிதிகளை பொறுத்தவரை மாதவ ரெட்டி கொலையானது கோழைத்தனமான நடவடிக்கையாகும். ஆனால் புரட்சிகர சக்திகள், ஆந்திரா மற்றும் இந்தியா முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களை பொறுத்தவரை இந்திய ஆளும் வர்க்கங்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வெள்ளை பயங்கரவாதத்துக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட இத்தீரமான நடவடிக்கை மகத்தான சாதனையாகும். கேடுகெட்ட கொலைகாரன் இழைத்த எண்ணற்ற குற்றங்களுக்கான தைரியமான பதில் நடவடிக்கையாகும். இது வர்க்க எதிரிகளுக்கு புரட்சியாளர்கள் செலுத்திய இரத்தக் கடனாகும். இது இந்திய புரட்சியை முன்னெடுத்துச் செல்வதில் தங்களது உயிரை அர்ப்பணித்த நூற்றுக்கணக்கான அன்பிற்குரிய தியாகிகளுக்கு செலுத்தப்பட்ட மாபெரும் அஞ்சலியாகும். ஜெனரல் டயர் கொல்லப்பட்ட போது, பிரிட்டிஷ் இந்தியா முழுமையும் கொண்டாடிய அதே வேளையில் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் துக்கம் கடைபிடித்தனர். ஆந்திராவின் டயர் கொல்லப்பட்டுள்ள போது, இந்திய ஆளும் வர்க்கங்கள் வேதனை அடைந்துள்ள (ஒரு நாள் விடுமுறையாகவும், மூன்று நாட்கள் துக்க தினங்களாகவும் ஆந்திரா அரசு அறிவித்தது) அதே வேளையில், மக்கள் இனிப்புகளை வழங்கி கொண்டாடினர்.

---

**(40 ஆம் பக்கத் தொடர்ச்சி. . . )**

வேண்டிய உடனடித் தேவையைப் பற்றி பேசினர். பி.யு.சி.எல் தலைவர் கே.ஜி. கண்ணபிரான் பேசுகையில் "போலிமோதல்கள் குறித்து தேசிய மனித உரிமை கமிசனுக்கு தகவல்களை நாங்கள் தெரிவித்து வருகிறோம். காவல்துறை தரப்பின் வாதங்களை ஆதார மற்றவையாக்கிட போதுமான சாட்சியங்களை நாங்கள் வழங்கிவருகிறோம். ஆனால், போலிசின் அத்துமீறலை தடுத்து நிறுத்த நாங்கள் எடுக்கும் முயற்சிகளையும் மீறி போலி மோதல் பயங்கரங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன" என்று கூறினார். தேசிய மனித உரிமை கமிசன் ஆந்திர மாநிலத்திற்கு வருகை தந்து எல்லா மோதல் சாவுகள் குறித்து விசாரிக்க வேண்டும் என் வேண்டுகோள் விடுத்தார். "மாநிலத்தில் இனி மேல் மோதல் சாவுகள் இருக்காது என சந்திரபாபு நாயுடு தேசிய மனித உரிமை கமிசனுக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும்" என கோரினார்.

மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ்.எம் தாவுத் உரையாற்றுகையில் சனநாயகத்தின் மற்ற இரு தூண்களான நிர்வாகம் மற்றும் சட்டமன்றங்கள் சனநாயகத்தின் சாரத்தை நடைமுறைப்படுத்துவதில் தோல்வியடைந்துள்ள இவ்வேளையில் நீதித்துறை மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும் எனக் கூறினார். அரசாங்கங் களின் 'ஆலோசனைகளை' நீதித்துறை பொருட் படுத்தாமல் அரசியல் சட்டத்தின் வெளிச்சத்தில் நீதிபதிகள் தீர்ப்புகளை வழங்க வேண்டும் என்றார். தெரு முனைக் கூட்டங்களை நடத்தும் அனுமதிக்காக நீதிமன்றங்களை அணுகுவது என்பது சாத்தியமானதா? என கேள்வி எழுப்பினார். கன்னட இலக்கிய விமர்சகர் பேராசிரியர் (ஓய்வு) கே. கோவிந்த ராவ், மக்கள் சனநாயக அமைப்பின் (கர்நாடகா) தலைவர் பி.ஜே. வெங்கடேஷ், ஆந்திர பிரதேச குடியுரிமை அமைப்பின் தலைவர் ரத்ன மாலா, பிற்பட்டோர் நலக்கழகத்தின் தலைவர் ஆர். கிருஷ்ணையா, ஜனசக்தியின் சாலபள்ளி ஸ்ரீனிவாச ராவ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.வி. கிருஷ்ணையா, நேபாளின் சந்திரகாந்த் தராகுரு, மேற்கு பெங்காலின் அசோக் தெப்ராய், பேராசிரியர் மனோரஞ்சன் மொகந்தி, பிரபல வழக்கறிஞர்கள் செபாஸ்டின், போஜா தாரகம் மற்றும் பலர் பேசினர். சட்டமன்ற உறுப்பினர் கும்மாடி நரசய்யா மற்றும் வரவரராவ் ஆகியோரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

போலீசின் பயங்கரமான கெடுபிடிகளை மீறி நீதிமன்ற ஆணையின் பேரில் நடந்த பொதுக் கூட்டத்தில், காவல்துறையினர் நீதிமன்ற ஆணையை மீறி பொதுமக்களுக்கு பெரும் இடையூறுகளை ஏற்படுத்தினர். லாரி, டிரக், ஜீப், டிராக்டர்கள் மற்றும் பிற வாடகை வாகனங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தியதுடன், வாடகைக்கு விடக் கூடாது என எச்சரித்தனர். பேருந்துகளிலும், புகைவண்டிகளிலும் வந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டனர். மாநிலத்தின் உட்பகுதிகளிலிருந்து குறிப்பாக தெலுங்கானா மாவட்டங்களிலிருந்து ஹைதராபாத் நோக்கி வரும் அரசு பேருந்துகளை யெல்லாம் அரசாங்கம் ரத்து செய்தது. இந்நடவடிக்கைகள் எல்லாம் மக்களை தடுத்து நிறுத்திவிடும் என்ற நினைப்பில் செய்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

# எமது ரத்தக் கடன்களை தீர்ப்போம்.!!

இ.க.க. (மா-லெ) (மக்கள் யுத்தம்) மையகுழு (த) செயலாளர் தோழர். கணபதி ரீட்டிஃப். காம் என்ற இணையத்திற்கு மையகுழு தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோர் தியாகிகளான போது அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள்...

**கேள்வி :** இக் கொலைகளுடன், இரண்டாம் மட்ட தலைமைகள் துடைத்தெறியப்பட்டுள்ளன என பலர் கூறுகின்றனரே. அது உண்மையா?

**பதில் :** இது செய்தி ஊடகங்கள் மற்றும் போலிசாரின் வெறும் கற்பனை மட்டுமே. முதலாவதாக, இரண்டாம் மட்ட தலைமைகள் என்று நீங்கள் எதைப் பொருள் கொள்ளுகிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எமது கட்சியில் முதல் மட்ட தலைமை என்பது மையகுழு, இரண்டாம் மட்ட தலைமை என்பது மாநில குழுக்கள்.

எமது மைய குழு, வர்க்கப் போராட்டத்தை தலைமை தாங்குவதில் இருபது வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்ட தலைவர்களைக் கொண்டது. இம்மூன்று தோழர்களின் இழப்பு கடுமையானதாக இருப்பினும், மைய குழுவிலும் எமது மாநில குழுக்களிலும் புடம் போடப்பட்ட பல அனுபவம் வாய்ந்த தோழர்கள் இப்பொறுப்புகளை ஏற்றெடுக்க உள்ளனர்.

சில தோழர்களின் இழப்புகள் பெரும் பாதிப்பிற்கு இட்டுச் செல்லாத அளவிற்கு கூட்டுச் செயல்பாடு வளர்ந்துள்ளது. மைய குழுவிற்குள் கொண்டு வரத்தக்க திறமையான, அர்பணிப்புள்ள தோழர்கள் பல்வேறு மாநில குழுக்களில் உள்ளனர்.

கடந்த காலத்தில் கூட, நாங்கள் பல கடின மிகு சூழ்நிலைகளை எதிர்கொண்டுள்ளோம். 1993 - ல் ஆந்திரபிரதேச மாநில குழு செயலர் தோழர். புலி அஞ்சண்ணா, 1994 - ல் மாநில குழு உறுப்பினர் தோழர் வெங்கடசாமி (சூர்யம்), பிரகாஷ் மாஸ்டர் மகேந்தர், தாமோதர் ரெட்டி (சஞ்சீவ்), ரெட்டப்பா, மல்காபுரம் பாஸ்கர் (ரமேஷ்) போன்ற மூத்த தலைவர்களான மாநில குழு உறுப்பினர்களையும், மற்றும் பிறரையும் இழந்துள்ளோம். ஆனால் எமது இழப்புகள் தொடர்ச்சியாக அடுத்த மட்டங்களிலிருந்து இட்டு நிரப்பப்படுவதுடன், அவர்கள் விரைவிலேயே திறமையான தலைவர்களாக வளர்கிறார்கள்.

முக்கியமான சில தலைவர்களை நாங்கள் எப்பொழுதெல்லாம் இழக்கிறோமோ அப்போது சில கடினங்களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பெரும்பாலான தலைமையை நாங்கள் இழக்க நேரிட்டால் பின்னடைவுகள் கூட ஏற்படலாம். ஆனால், நான் உறுதியாகக் கூறமுடியும், எமது நடைமுறை மக்கள் திரள் வழியை அடிப்படையாக கொண்டுள்ளதால் எம்மை முற்றிலுமாக துடைத்தெறிவது என்பது இந்த அரசிற்கு சாத்தியமில்லை. தலைவர்கள் வர்க்கப் போராட்டத்திலிருந்து தொடர்ச்சியாக பிறந்து கொண்டேயிருக்கிறார்கள்.

புரட்சியின் நிகழ்வுப் போக்கில், எம்மைவிட பலத்திலும், சுடுதிறனிலும் மிகவும் மேலான ஒரு எதிரியுடன் போரைத்தொடுத்துக் கொண்டிருப்பதால், பல இழப்புகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் என்பது இயல்பானது தான். இறுதி வெற்றியை நாங்கள் அடைவது வரையிலும் எமது இயக்கம் பல ஏற்ற இறக்கங்களுடாகவும், பல தோல்விகளினூடாகவும் வளர்கிறது. எமது நீண்டகால மக்கள் யுத்தத்தின் தன்மை இதுதான். இதுபற்றி ஒட்டுமொத்த கட்சியும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதுபோன்ற தலைவர்களை உருவாக்குவதற்கு சில காலம் எடுக்கலாம் என்றாலும் நாங்கள் இதுபோன்ற இழப்புகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியும்.

**கேள்வி :** உங்களது உடனடியான இலக்குகள் யார் யார்? பதிலடித்தாக்குதல்களில் எந்த பொதுமக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த நீங்கள் என்ன பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வீர்கள்?

**பதில் :** எமது தோழர்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாக யார் ஈடுபட்டார்களோ அவர்களே எமது உடனடி இலக்குகள். இந்த நடவடிக்கையை தலைமையேற்ற சிலரது பெயர்கள் எங்களுக்குத்


படிப்பகம்

www.padippakam.com

தெரியும். கவலையின் அதிர்ச்சிப் பிடியில் உள்ள கட்சி அணிகளுக்கும், கட்சி மட்டங்களுக்கும், புரட்சிகர மக்களுக்கும், இத்தோழர்களின் குடும்பங் களுக்கும் நாங்கள் உறுதியளிக்கிறோம். சிறிது காலம் எடுப்பினும், தோழர்களின் படுகொலைக்கு பழி தீர்ப்போம். நாங்கள் எப்போதும் எமது ரத்தக் கடன்களை எதிரிகளுக்கு திருப்பிச் செலுத்தி விடுவோம்.

பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து, எந்த ஒரு பொதுமக்களும் தனது உயிரை இழந்து விடாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம். இதுவே எமது கொள்கையாக எப்போதும் இருந்துவருகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமான சம்பவங்களும் நடந்துள்ளன. கடந்த ஆறு வாரத்தில் (ஜனவரியின் பிற்பகுதியில் கணபதி இப்பதிலை அளித்தார்.) சுமார் 150 முக்கிய எதிர்ப்பு நடவடிக்கைகள் நடை பெற்றுள்ளன. இதில் சில பொதுமக்கள் இறந்து போன சம்பவம் ஒன்று மட்டுமே நடைபெற்றுள்ளது. வீட்டினுள் இருப்பவர்களை வெளியேற்றிவிட கேட்டுக் கொண்ட பின்னர் அவ்வீட்டை எமது தோழர்கள் தகர்த்தபோது வீட்டினுள் மேலும் மக்கள் இருந்தனர் என்பதை தோழர்கள் அறிந்திருக்க வில்லை. ஏதுமறியா உயிர்கள் இழந்ததையொட்டி எமது கட்சி வெளிப்படையாக வருத்தம் தெரி வித்துள்ளது. இது போன்ற சம்பவங்கள் இனியும் நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம்.

**கேள்வி :** உங்களது அமைப்பு கண்மூடித்தனமான வன்முறையில் ஈடுபடுகிறது என ஆந்திர பிரதேச காவல்துறைத் தலைவர் ஹெச். ஜே. தொரா குற்றம் சாட்டுகிறாரே? "மக்களுக்கான போராட்டங்களை" இப்போது மக்கள் யுத்தம் எடுப்பதில்லை என அவர் கூறுகிறாரே?

**பதில் :** ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புமிக்க புரட்சியாளர் களுக்கு எதிராக சுமத்தப்படும் மிகவும் பொதுவான குற்றச்சாட்டு இதுவாகும். சீனாவிலும் கூட, புரட்சியின் போது கம்யூனிஸ்டுகள் 'சிவப்பு கொள்ளையர்கள்' எனக் கூறப்பட்டனர்.

"கண்மூடித்தனமான வன்முறை" என்பதன் பொருள் என்ன? ராயல சீமாவில் தெலுங்குதேசம் மற்றும் காங்கிரஸ் குண்டர்களால் நடத்தப்படும் வன்முறையில் ஒவ்வொரு வருடமும் நூற்றுக் கணக்கான அப்பாவி மக்கள் இறப்பதற்கு காரண மாகிறது. போலீஸ் குண்டர்களின் தலைவனான தொரா மற்றும் முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஆந்திராவின் பரந்த கிராமப்புறங்களிலும் மாநகரங் களிலும் கடந்த ஐந்து வருடங்களில் நடத்திய வன்முறையில் 600க்கும் மேற்பட்ட உயிர்களை பலிகொள்ளவில்லையா? இவையெல்லாம் கண் மூடித் தனமான வன்முறையில்லையா?

ஏறக்குறைய 30க்கும் மேற்பட்ட எமது தோழர்களின் ரத்தத்தில் நனைந்த கரங்களுக்கு சொந்தக்காரனான ஒரு உமேஷ் சந்திராவை ( ஒரு ஐ.பி.எஸ் அதிகாரி) புரட்சியாளர்கள் கொன் றொழித்த போது அது தொரா போன்றவர்களுக்கு கண்மூடித்தனமாகிறது.

எமது கட்சி கம்யூனிச சித்தாந்தத்திற்கு கட்டுப் பட்டது. தொரா போன்ற தங்களது கூலிப்படையினர் மூலமாக ஆளும்வர்க்கங்கள் கட்டவிழ்த்து விடுகின்ற பீதிக்கு இடையே எமது ஊழியர்களும், தலைவர் களும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே வாழ்கிறார்கள். நாங்கள் ஈடுபடும் வன்முறை என்பது அன்றாடம் அரசு கூலிப்படைகளால் நடத்தப்படும் கண்மூடித் தனமான வன்முறையை எதிர்ப்பதற்காக மேற் கொள்ளுவது மட்டுமேயாகும். தெருவில் சென்று கொண்டிருக்கும் எவரிடமாவது கேளுங்கள் அவர் களது எதிரிகள் யார் என அவர்கள் கருதுகிறார்கள் என்று; அது காவல்துறைதான்.

மக்களின் சார்பாக நாங்கள் போராட்டங்களை எடுக்கவில்லை என்று டி.ஜி.பியால் கூறப்படுவது மற்றொரு வியப்பிற்குரிய கூற்றாகும். மக்களின் போராட்டங்கள் பால் இந்த காவல்துறை அதிகாரிக்கு அக்கறை இருப்பது போல! பின்னர் நாங்கள் என்னதான் செய்து கொண்டிருக்கிறோம்?

உண்மையில், முன்னெப்போதையும் விட இந்த தெலுகு தேசகட்சியின் கடந்த 5வருட ஆட்சியின் கீழ் நாங்கள் அதிகமான போராட்டங்களை எடுத் துள்ளோம். ஆந்திராவில் மட்டுமே 1995 முதலாக 35 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கைப்பற்ற எமது கட்சி மக்களைத் திரட்டியுள்ளது. தாயுடு தாழ்த்தப் பட்டோர், பழங்குடிகள் கூட்டுறவுகள், மற்றும் பிற நிலச் சீர்திருத்தநாடகங்களை நடத்தி மக்களை ஏமாற்ற முயற்சிப்பதன் காரணமும் இதுதான்.

நிலத்திற்கான போராட்டங்கள் அல்லது விவசாய கூலிகளுக்கான கூலி உயர்வு போராட்டங்களிலிருந்து நடுத்தர மற்றும் பணக்கார விவசாயிகளின் விளைபொருளுக்கு ஏற்ற விலைக்கான போராட்டங் கள் வரையிலும், பல விசயங்களில் போராட்டங் களை எடுத்துள்ளோம். பல சிக்கல்களில், லட்சக்

(தொடர்ச்சி 26 ஆம் பக்கம் பார்க்க. . .)



படிப்பகம்

www.padippakam.com

**("பீப்பிள்ஸ் மார்ச்" ஆல் பெறப்பட்ட இந்திய புரட்சியின் தலைவர்களின் குரூரமான படுகொலையை கண்டித்து பல்வேறு – மார்க்சிய –லெனினிய கட்சிகள் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொண்ட அறிவிப்புகளில் சிலவற்றை இங்கே பிரசுரிக்கிறோம் –– ஆசிரியர் குழு.)**

**புரட்சிகர சர்வதேசிய இயக்கக் குழுவிலிருந்து**

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் ) (மக்கள் யுத்தம்) மையக்குழுவிற்கு

அன்பார்ந்த தோழர்களே!

இந்திய பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் பிடியில் தோழர் நல்லஆதி ரெட்டி (ஷயாம்) எர்ரம் ரெட்டி சந்தோஷ் ரெட்டி (மகேஷ்) சீலம் நரேஷ் (முரளி) ஆகியோரின் இழப்பை எங்கள் குழு அறிந்தது மிகத் துயரமானது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் மக்கள் யுத்தம் வளர்ச்சியில் இந்த தோழர்கள் உங்கள் கட்சியின் மையகுழு உறுப்பினராக தலையாய பங்கை ஆற்றியுள்ளனர். இந்தியாவில் போலவே உலக முழுவதிலுமுள்ள அனைத்து உண்மையான கம்யூனிஸ்ட்களையும் புரட்சியாளர்களையும் அவர்களின் இழப்பு கவலைகுள்ளாக்கியுள்ளது.

உடல் இருந்த இடத்திலிருந்து பல நூறு கிலோ மீட்டர்கள் அப்பால் எதிரியால் கைது செய்யப்பட்டபிறகு நடந்த இந்த கொலையானது கடந்த சில வருடங்களில் இ.க.க. மா - லெ மக்கள் யுத்தத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என நூற்றுக்கணக்கான கொலைகளில் தலையாயது. ஏற்கெனவே பல விஷயங்களில் செய்ததைப் போலவே இந்த சமீபத்திய விஷயத்திலும் அதிகாரிகள் "மோதல் கொலை" எனக் கூறி நிராயுத பாணியான கைதிகளை செய்த கோழைத்தனமான கொலைகளை மறைக்க முயற்சிக்கின்றனர். இந்த கொடூர கோழைத்தனமான செயலை மறைக்க முயற்சி செய்கின்றனர். இந்த கொடூர, கோழைத் தனமான செயலை புரட்சிகர மற்றும் முற்போக்கு சக்திகள் இந்தியாவிலும் - உலகெங்கிலும் அம்பலப்படுத்தி கண்டனம் செய்கிறார்கள்.

நீங்கள் இந்தியாவில் பரந்துபட்ட பகுதியில் லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களை தட்டி யெழுப்பி "கிளர்ச்சி செய்வதே சரி" மற்றும் மக்கள் யுத்தம் மூலம் மட்டுமே வலுவான எதிரிகளான ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகாரவர்க்க முதலாளியத்தையும், வீழ்த்த முடியுமென காட்டுங்கள். மார்க்ஸ், லெனின், மாவோவால் வளர்த்தெடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த உங்கள் கட்சி கம்யூனிசத்தை குறிக்கோளாக கொண்ட உலக பாட்டாளி வர்க்க புரட்சியின் அங்கமான இந்திய புதிய ஜனநாயக புரட்சியை நடத்த போரிட்டுக் கொண்டிருக்கிறது. இந்த காரணங்களுக்காகவே பிற்போக்கு இந்திய அரசு இ.க.க (மா லெ) மக்கள் யுத்தத்தை கடும் சீற்றத்தில் அடித்து நொறுக்குகிறது. ஆனால் எந்த அளவு கொடூரமும், பயங்கரமும் பிற்போக்கு வர்க்கத்தை அவர்கள் அழிவிலிருந்து காப்பாற்றாது.

தோழர்களே! கசப்பான இக் கஷ்டங்கள் இருந்தபோதிலும் உங்கள் கட்சி துயரத்தை பலமாக மாற்றி உங்கள் நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் என எங்கள் குழு, கட்சிகள் மற்றும் ரிம் அமைப்புகள் நம்புகின்றனர். தோழர் ஆதி ரெட்டி, சந்தோஷ் ரெட்டி, நரேஷ் ஆகியோரின் தியாகம் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் இறுதி தோல்வியில் பழிதீர்க்கப்படும்.

## இ.க.க (மா – லெ) (மயு) மையகுழுவிற்கு நியூசிலாந்து தொழிலாளர் கட்சியின் அறிவிப்பு

அன்பார்ந்த தோழர்களே!

சில நாட்களுக்கு முன்பு ஆந்திர போலிசால் செப்டம்பர் 1 - ல் கைது செய்யப்பட்ட மூன்று மையகுழு தோழர்கள் நல்ல ஆதி ரெட்டி (ஷியாம்) தோழர் சந்தோஷ் ரெட்டி (மகேஷ்) மற்றும் தோழர் சீலம் நரேஷ் (முரளி) ஆகியோரின் கடும் சித்திரவதை மற்றும் கொலையை அறித்த நாங்கள் மிகுந்த கவலையும், கோபமும் அடைந்தோம்.

உதிர்ந்து போகின்ற சுரண்டல் சமுதாயத்தை தக்க வைக்க ஆளும் வர்க்கங்கள் போராடுவதென்பது ஆட்சியின் பாசிச தன்மையிலிருந்து பட்டவர்த்தனமாக நிரூபணமாகிறது.

உங்கள் கட்சியின் தலைமை மற்றும் அனைத்து


படிப்பகம்

www.padippakam.com

மட்டங்களில் உள்ள தோழர்களின் வீரம் எங்கள் கட்சிக்கு புத்துணர்வூட்டுகிறது. எங்கள் தொடர்புகளிடையே இந்திய மக்கள் யுத்தம் வளர்ச்சியில் ஆர்வம் வளர்ந்து வருவதை கூட நாங்கள் காண்கிறோம். முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள் கிட்டத்தட்ட மக்கள் யுத்தத்தின் அனைத்து செய்திகளையும் ஒடுக்குவதால் "தி ஸ்பார்க்" மற்றும் "பிப்பிள்ஸ் மார்ச்" ன் மறு பதிப்புகள் தான் நியூசிலாந்துகாரர்களுக்கு ஒரே தகவல் ஆதாரம். நாங்கள் எங்களால் முடிந்தவரை கருத்துக்களை பரப்புவோம், மற்றும் இந்திய அதிகாரிகளுக்கு எதிர்ப்பு கடிதங்கள் அனுப்புவோம்.

இந்த தோழர்களின் கொலை ஒரு பெரிய நஷ்டம் என்பதை நாங்கள் அறிவோம். ஆனாலும் மற்றவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள முன்வருவார்கள் என்பதை நாங்கள் சந்தேகிக்க வில்லை. "தாய்மலையை விட கனமான மரணமடைந்த இந்த அருமையான புரட்சிகர தலைவர்களுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆறுதல்கள் மற்றும் புரட்சிகர வாழ்த்துக்களுடன்,

**டாப்னா விட்மோர்,**

**டபுள்யு. பி. என். இசட் நிர்வாகிக்காக.**

---

## மேதகு குடியரசு தலைவர் – இந்தியா அவர்களுக்கு

## பெல்ஜியம் தொழிலாளர்கள் கட்சியின் கடிதம்

பிரசெல்ஸ் 7 டிசம்பர் - 1999

குடியரசு தலைவரே,

செய்திகளை தொடர்ந்து 1999 டிசம்பர்-2ல் ஒரு கோழைத்தனமான நடவடிக்கையில் இ.க.க மா-லெ மக்கள் யுத்தத்தின் மூன்று பிரபல மக்கள் இயக்கத்தலைவர்களை கொடூரமாக கொன்றுவிட்டதை பெல்ஜியம் தொழிலாளர் கட்சி அறிந்தது. அவர்கள் ஷியாம் என்கிற நல்ல ஆதி ரெட்டி, மகேஷ் என்கிற சந்தோஷ் ரெட்டி, முரளி என்கிற சீலம் நரேஷ் ஆவர். எங்களுக்கு தெரிந்தவரை இவர்களோடு கொல்லப்பட்ட நான்காவது நபர் அடையாளம் தெரியவில்லை. இந்த அரசியல் படுகொலையின் முக்கிய சூத்திர தாரியான ஆந்திர காவல் துறை தலைவர் எச். ஜே. தொரா இதுவரை அந்நபரின் பெயரை வெளியிடவில்லை.

ஆந்திராவில் கரீம் நகர் மாவட்டம், தாடிசெர்லா மண்டல் கொய்யூரு காட்டில் நடந்த கடும் சண்டையில் இந்த மூன்று தலைவர்கள் கொல்லப்பட்டதாக டி.ஜி.பி. அறிவித்துள்ளார். அதற்கு மாறாக டிசம்பர்-1 இரவு பெங்களூரில் ஒரு வீட்டில் அவர்கள் நால்வரும் வீட்டை அடைந்தவுடன் உளவுத்துறை குழுவினரால் பிடிக்கப்பட்டு எந்த கால அவகாசமும் கொடுக்காமல் அங்கேயே கொன்றுள்ளனர் என்பது தெரிய வருகிறது. பின்னர் காலை ஆந்திர அரசு ஹெலிகாப்டர் மூலம் 2 ஆம் தேதி விடியுமுன் அவர்கள் உடல் ஆந்திரா - கரிம் நகர் காட்டு பகுதிக்கு கொண்டு சொல்லப்பட்டதாக தெரிகிறது.

இந்திய புரட்சிகர இயக்கத்தின் சிறப்பு மிக்க அரசியல் தலைவர்களை கொன்ற கோழைத்தனமான செயலானது இ.க.க மா - லெ மக்கள் யுத்தத்தின் மாற்று அரசியலை கண்டு இந்திய ஆளும் வர்க்கங்கள் பயப்படுவதை காட்டுகின்றது.

செய்திகளைத் தொடர்ந்து மைய உள்துறை அமைச்சர் எல். கே.அத்வானி மற்றும் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுடன் ஆந்திர காவல்துறை தலைவர் எச். ஜே. தொராவுடன் நெருக்கமாக கூட்டு சேர்ந்து சூழ்ச்சி செய்து உருவாக்கப்பட்ட சதியாக இ.க.க (மா - லெ) (மயு)வின் இந்த மூன்று அனுபவம் மிக்க தலைவர்களின் கொலை தெரிகிறது.

மக்கள் இயக்க தலைவர்களின் கொலைகள் இயக்கத்தை முடித்துவிடாது!

பெல்ஜியம் தொழிலாளர் கட்சியானது இ.க.க. (மா - லெ) (ம யு) தலைவர்களின் கொலையை கடுமையாக கண்டனம் செய்கிறது.

நாங்கள் இந்த வெறுக்கத்தக்க கொலை சம்மந்தமான விசாரணைக்கு உத்தரவிட கோருகிறோம். உங்கள் அரசின் ஆட்சியின் கீழ் இந்தியாவில் தொடரும் பாசிச நடவடிக்கை பற்றி நாங்கள் பெல்ஜியம் மக்களுக்கு தெரிவிப்போம்.

**உங்கள் உண்மையான,**

**ஜீன் பெஸ்டியு**

**சர்வதேச துறை,**

**தொழிலாளர் கட்சி – பெல்ஜியம்.**



படிப்பகம்

www.padippakam.com



# இந்திய புரட்சியின் மாபெரும் தலைவர்களுக்கு சிவப்பு அஞ்சலி!



தோழர். ஷியாம்



தோழர். மகேஷ்



தோழர். முரளி

*1999, டிசம்பர் 1 ம் நாள் மதியம் 1.30* மணி அளவில், ஆந்திர பிரதேச காவல் துறையின் சட்டவிரோத கொலை கும்பலான நக்சலைட் - எதிர்ப்பு வேட்டை நாய் படையினர் (SIB), கோவிந்தரெட்டி என்ற துரோகி தந்த தகவலின் அடிப்படையில் பெங்களூரின் பனசங்கரி கேட் பேருந்து நிறுத்தத்தின் அருகிலமைந்துள்ள ஒரு வீட்டிலிருந்து, இந்தியப் புரட்சியின் தலைவர்களும் இ.க.க. (மா - லெ) (மக்கள் யுத்தம்) கட்சியின் மையகுழு உறுப்பினர்களுமான தோழர் ஷ்யாம், தோழர் மகேஷ், தோழர் முரளி ஆகியோரை சிறைப்பிடித்தனர். ஆந்திர காவல்துறையினர் அதே நாள் மாலையிலேயே இத்தோழர்களை வான் வழியாக ஹைதராபாத் கொண்டு சென்றனர். அவர்களிடமிருந்து கட்சி இரகசியங்களை பெறுவதற்காக இரவு முழுவதும் கொடூர சித்தரவதை செய்து தோல்வியுற்றனர். மறுநாள் காலை, போலீஸ் நாய்கள் இத் தோழர்களை மீண்டும் வான் வழியாக கரீம் நகரின் கொய்யூரு வனப்பகுதிக்குக் கொண்டு சென்று படுகொலை செய்தனர்.

ஆந்திரப் பிரதேச காவல்துறையின் தலைவனான ஹெச். ஜே. தொரா, இத் தோழர்களின் படுகொலையைத் தானே முன்னின்று நடத்தியதோடு நில்லாமல், மோதலில் மூவர் மட்டுமின்றி இன்னொரு ஆயுதக்குழு உறுப்பினர் அருண் என்பவரும் இறந்ததாக் கதை அளந்தான். அந்த 'அருண்' போலீசால் வீட்டிலிருந்து கடத்தி வரப்பட்ட அப்பாவி மாடு மேய்க்கும் இளைஞன் என்ற உண்மை பத்திரிக்கைகளால் வெளிக்கொணரப்பட்டது. தோழர்களின் உடல்களில் காணப்பட்ட மனிதத் தன்மையற்ற சித்தரவதை அடையாளங்களும் (தோழர் ஷ்யாமின் உடல் முழுக்க தீப்புண்கள், தோழர் மகேஷின் கால் வெட்டப்பட்டிருந்தது. . .) இவர்களின் போலி மோதல் நாடகத்தை முற்றிலும் அம்பலப்படுத்தின. இருப்பினும் இக்கொலைகளை விசாரிக்க உயர்மட்ட நீதி விசாரணைக்குழு அமைக்க வேண்டுமென்ற சனநாயக சக்திகள், முதலாளிய கட்சிகளின் கோரிக்கையைக் கூட புறக்கணித்தான் பாசிச கொலைகாரன் சந்திரபாபு நாயுடு. உலக வங்கியின் கையாளான பாசிச சந்திரபாபு பின்னாலிருந்து இக்கொலைகளுக்கு சூத்திரதாரியாக செயல்பட்ட அதே வேளை,

தொடர்ச்சி 36 ஆம் பக்கம் பார்க்க. . .

படிப்பகம்